
Not for sale

மே - ஜூன் 2017

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




## சிறிய தீர்க்கதரிசிகள்

நம்பிக்கையற்ற ஒரு மனைவியை கொண்டிருந்த தீர்க்கதரிசி

இஸ்ரயேலின் தண்டனையும் இரட்சிப்பும் • நான் ஒரு மந்தைக்குரியர் (மேய்ப்பன்)

ஏதோமின் தண்டனை • தமக்கு ஆறுதல் ஊட்டும் பகுதிக்கு வெளியே உள்ள ஒரு தீர்க்கதரிசி • கவிஞராகிய தீர்க்கதரிசி

சிறிய தீர்க்கதரிசிகள்

# ஆதியிலே



பொதுவாக இவர்களின் செய்திகள் குறைவாக இருந்ததினால், பழைய ஏற்பாட்டின் கடைசி பன்னிரெண்டு தீர்க்கதரிசிகள் சிறிய தீர்க்கதரிசிகளாக இருந்தனர். இஸ்ரயேல் மற்றும் யூதாவின் பாவங்கள், விக்கிரகாராதனை மற்றும் தேவன் மேலுள்ள அவிசுவாசத்தினாலே கொடுக்கப்பட்ட குறித்த கால தண்டனைகளை பற்றி இவர்களின் தீர்க்கதரிசனம் பேசியது. இஸ்ரயேலின் மேல் தேவன் வைத்த மிகுந்த அன்பை பற்றியும் அவர்களை மீண்டும் கூட்டி சேர்த்து ஆதியிலே தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற புதிய உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வதிப்பதை குறித்தே அவர்களின் தீர்க்க தரிசனத்தின் நோக்கமாயிருந்தது. இஸ்ரயேலின் அண்டை தேசங்கள் மற்றும் முழு மனுக்குலத்தின் நிமித்தமும் மேலும் இஸ்ரயேலை கடினமாக நடத்தினபடியால் அவர்களின் பாவங்களையும், தண்டனைகளைப் பற்றியும் எழுதினார்கள். இந்த கடுமையான நடவடிக்கையின் நிமித்தமாக அனைத்து தேசங்களும் நியாயத்தீர்ப்புக்காக கூட்டி சேர்க்கப்படும். மகா உபத்திரவத்தின் காலத்தை குறித்து அவர்கள் பேசினார்கள். இந்த மகா உபத்திரவத்தில் பங்கெடுக்கக் கூடியவர்கள் மற்றும் அதன் அம்சத்தை குறித்து இவர்கள் விவரிக்கிறார்கள். கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தின் வழியாக மனுக்குலத்திற்கு வரும் சத்தியத்தின் ஆசீர்வாதங்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பையும் பற்றி பேசுகிறார்கள்.

ஓசியா, யோயேல், ஆமோஸ், ஒபதியா, யோனா மற்றும் மீகா தீர்க்கதரிசிகளின் செய்திகளை இந்த பிரதி மையப்படுத்துகிறது.

நம்பிக்கையற்ற ஒரு மனைவியை கொண்டிருந்த தீர்க்கதரிசி என்ற தலைப்பு ஓசியாவின் புத்தகத்தையும் அவருடைய நம்பிக்கையற்ற மனைவி கோமேரோடு அந்த தீர்க்கதரிசியின் நடைமுறை தொடர்பை பற்றியும் ஆராய்கிறது. இது கோமேரின் ஒழுக்கமற்ற நிலையை இஸ்ரயேல் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தோடும், ஒப்பிட்டுப் பார்த்து, கோமேருக்காக ஓசியா கொண்ட அன்பும், இஸ்ரயேலுக்காக தேவன் கொண்டிருக்கும் மிகுந்த அன்பும் எவ்வாறு மீண்டும் பெறப்பட போகிறது என்பதையும் ஒப்பிட்டு பார்க்கிறது.

''இஸ்ரயேலின் தண்டனை மற்றும் இரட்சிப்பு'' என்ற தலைப்பு இஸ்ரயேலின் மேல் வரும் தேவனுடைய தண்டனையை பற்றிய யோயேலின் தீர்க்கதரிசனத்தையும், அவர் எவ்வாறு இஸ்ரயேலை இரட்சித்து ஆசீர்வதிப்பார் என்பதை குறித்தும் ஆராய்கிறது. இந்நாளில் நாம் காண்கிறபடி இஸ்ரயேலுக்கு எதிராக ஜாதிகள் கூட்டி சேர்வதை பற்றியும் ஆராய்கிறது.

''நான் ஒரு மந்தைக்குரியவர் (மேய்ப்பன்) என்ற மூன்றாம் தலைப்பு, ஆமோஸின் செய்தியை மையப்படுத்துகிறது. மந்தைகளுக்கு பின் சென்ற இவரை தேவன், எடுத்து இஸ்ரயேலுக்கு தீர்க்கதரிசியாக ஏற்படுத்தினார். இஸ்ரயேல் மற்றும் அவருடைய அண்டை நாட்டின் குறைகளையும், அவர்களின் தண்டனைகளையும், ஆமோஸ் விளக்குகிறார்.

தாவீதின் கூடாரத்தை மீண்டும் எழுப்பித்து கட்டுவேன் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தை பற்றி ஏதோம் மற்றும் கிறிஸ்துவ மண்டலத்தின் வீழ்ச்சி மற்றும் ஏதோமை சித்தரிக்கும் அழிவை ஒபதியாவின் செய்தி எவ்வாறு முன் அறிவிக்கிறது என்று ''ஏதோமின் தண்டனை'' என்ற தலைப்பு காண்கிறது.

''தமக்கு ஆறுதல்ஊட்டும் பகுதிக்கு வெளியே உள்ள ஒரு தீர்க்கதரிசி என்ற அடுத்த கட்டுரை, யோனாவின் புத்தகத்தையும், நினிவேவுக்கு கொடுக்க வேண்டிய எச்சரிப்பை பற்றி பிரசங்கிக்க வேண்டும் என்ற கர்த்தருடைய கட்டளையை ஏற்றுக்கொள்ள, அவர் பட்ட போராட்டத்தை பற்றியும் மறு ஆய்வு செய்கிறது. அதற்கு பின் நினிவே பட்டணத்தார் மனம் வருந்திய போது தேவன் அவர்கள் மேல் சாட்டிய கருணையையும் கவிஞராகிய தீர்க்கதரிசி என்ற இறுதி கட்டுரை, மீகா தீர்க்கரிசனத்தின் முதல் பகுதியையும், அதன் கவிதை தேவனுடைய நியாயத்தீர்ப்பையும் இஸ்ரயேலின் விக்கிரகாராதனை அவர்கள் பெற போகிற தண்டனைகளையும் பற்றிய அதனுடைய கவிதை விவரிக்கிறது.

மிக முக்கியமானதும் காலத்திற்கு ஏற்ற செய்திகளை கொடுத்த இந்த தேவனுடைய தீர்க்கதரிசிகளின் வாழ்க்கைகளை குறித்த சிறப்பான புரிந்து கொள்ளுதலை நம் ஒவ்வொருவரும் பெறுவதற்கு இந்த கட்டுரைகள் உதவியாக இருக்கட்டும். தேவன் இஸ்ரயேலோடு கொண்டிருந்த நடைமுறை தொடர்பானது நம் ஒவ்வொருவரும், தேவனிடத்தில் விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதை அறிவூட்டும் நினைப்பூட்டுதலாக இருக்கட்டும்.

## மே/ஜீன் 2017


**நம்பிக்கையற்ற ஒரு மனைவியை கொண்டிருந்த தீர்க்கதரிசி** 2
ஓசியா

**இஸ்ரயேலின் தண்டனையும் இரட்சிப்பும்** 8
யோயேல்

**நான் ஒரு மந்தைக்குரியவர் (மேய்ப்பன்)** 14
ஆமோஸ்

**ஏதோமின் தண்டனை** 19
ஒபதியா

**தமக்கு ஆறுதல் ஊட்டும் பகுதிக்கு வெளியே உள்ள ஒரு தீர்க்கதரிசி** 24
யோனா

**கவிஞராகிய தீர்க்கதரிசி** 29
மீகா பகுதி 1: சோதனை மற்றும் நியாயந்தீர்ப்பு

**இன்றைய தீர்க்கதரிசனம்** 32
உலகளாவிய ஓய்வூதிய நெருக்கடி

# நம்பிக்கையற்ற ஒரு மனைவியை கொண்டிருந்த தீர்க்கதரிசி



**வானங்களே, கேளுங்கள்; பூமியே செவிகொடு; கர்த்தர் பேசுகிறார்; நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன்; அவர்களோ எனக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். ஏசாயா 1:2**

**Erwin Kalinski**

மனுக்குலத்தின் மேல் தேவன் வைத்திருக்கும் அகாபே அன்பை யோவான் 3:16-ம் வசனம் எடுத்துக்காட்டுகிறது. மற்றும் தேவனோடு நம்மை மீண்டும் ஒப்புரவாக்குவதற்கு இயேசு ஒரு பாவியை போல நமக்காக மரிக்க மனப்பூர்வமாக சம்மதித்தார் என்று ரோமர் 5:6-8 வசனங்கள் காட்டுகிறது. ஆவி மற்றும் பூமிக்குரிய ஜீவிகளை சிருஷ்டிப்பதில் தேவன் அவருடைய மிகுதியான அன்பை வெளிப்படுத்தினார். மனுக்குலத்திற்காக தேவன் கொண்டுள்ள மிகுந்த அன்பை நாம் முழுமையாக புரிந்து கொள்வதற்கும் பாடத்தை எடுத்துக்காட்டுவதற்கு மனித உறவுகளை பயன்படுத்துகிறார். ஓசியாவின் புத்தகத்தில் ஒரு இரட்டை காதல் கதையை ஆற்றல் மிக்கதாக எடுத்துகாட்டுவதற்கு ஓசியா அவருடைய மனைவி, மற்றும் அவருடைய பிள்ளைகளை தேவன் பயன்படுத்தினார். பிதாவாகிய தேவன் ஒரு கணவனாகவும், இஸ்ரயேல் ஒரு ஒழுக்கமற்ற மனைவியாகவும் அன்பின் முதல் பாடம் சித்தரிக்கப்படுகிறது. (ஒழுக்கமற்ற) அவருடைய மனைவியாகிய கோமேரின் மேல் ஓசியா கொண்டிருந்த மிக உயர்வான (உச்சிதமான) அன்பு, இரண்டாம் அன்பின் பாடமாகிறது.

## வரலாற்று பின்னணி:

ஓசியா பேயேரின் குமாரனாக இருந்தார். ஓசியா என்ற பெயருக்கு இரட்சிப்பு மற்றும் விடுவிப்பு என்று பொருள். அவர் ஒரு எபிரேய தீர்க்கதரிசியும், ஓசியா புத்தகத்தின் எழுத்தாளருமாக இருந்தார். எட்டாம் நூற்றாண்டின் பகுதியிலும், ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி பகுதியிலும் ராஜாவாகிய உசியா, யோதாம், ஆகாஸ் மற்றும் யூதாவின் எசேக்கியா மற்றும் யெரொபொயாம் (யோசியாவின் குமாரன்) இஸ்ரயேலை ஆட்சி செய்த காலத்தில், யெகோவாவின் தீர்க்கதரிசியாக பணியாற்றினார். (ஓசியா 1:1) பொதுவாக இதே காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசிகளில் ஆமோஸ், ஏசாயா மற்றும் மீகாவும் உள்ளடக்கப்படுகிறார்கள். ஓசியாவின் புத்தகம் முதன்மையாக வடதிசையில் உள்ள இஸ்ரயேலின் பத்து கோத்திரங்களை பற்றி கூறுகிறது.

“கர்த்தர் ஓசியாவைக் கொண்டு உரைக்கத் தொடங்கின போது, கர்த்தர் ஓசியாவை நோக்கி: நீ போய், ஒரு சோர ஸ்திரீயையும் சோராப்பிள்ளைகளையும் உன்னிடமாகச் சேர்த்துக் கொள்; தேசம் கர்த்தரை விட்டு விலகிச் சோரம் போயிற்று என்றார்.” (ஓசி 1:2) என்று தேவன் ஓசியாவிடம் கூறினார். அந்த தீர்க்கதரிசி ஒரு விலை மகனையோ அல்லது முறைகேடாகப் பிறந்த பிள்ளைகளை பெற்ற ஒழுக்கக்கேடான ஸ்திரீயாக அவள் இருந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த தீர்க்கதரிசியை திருமணம் செய்த பின், அந்த ஸ்திரீ ஒழுக்கக்கேடாக நடந்து அதற்கு பின் அப்படிப்பட்ட பிள்ளைகளை பெற்றிருக்கலாம்.

ஓசியா கோமேரை திருமணம் செய்தார். அவர் அவளுக்கு யெஸ்ரயேல் என்ற குமாரனை பெற்றாள். (ஓசியா 1:3,4) யெஸ்ரயேல் என்ற வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. “சிதறடிப்பது” மற்றும் “விதைப்பு” முழு இஸ்ரயேல் தேசத்தோடு தேவனுடைய நடைமுறைத் தொடர்பை யெஸ்ரயேல் என்ற பெயரில் நாம் காணலாம். சிதறடிப்பு என்று நாம் பார்க்கும் போது இஸ்ரயேல் அசிரியாவினால் சிறைபிடிக்கப்பட்டதை இது அடையாளப் படுத்தக்கூடும். அடுத்து இதை ஒரு பெரிய அளவில் காணும் போது கி.பி 33-ம் வருடத்தின் துவக்கத்தில் இயேசு அவர்களை ஒரு தேசமாக இராதபடிக்கு புறக்கணித்த போது துவங்கின அவர்களுடைய தண்டனை காலமாக 1845 வருடங்களை இது அடையாளப்படுத்துகிறது. தேவன் 1878ம் வருடம் துவங்கி யூத ஜனங்களை கானானுக்கு திரும்ப வர செய்து அவர்களை புதிய உடன்படிக்கையின் கீழ் ஆசீர்வதிப்பதை “விதைப்பு” அடையாளப்படுத்தலாம்.

அதற்கு பின் கோமேர் லோருகாமா என்ற ( ஒரு பெண் பிள்ளையை பெற்றெடுத்தாள். அவள் வேசிதனத்தில் பிறந்தவளும், “தகப்பனின் அன்பை என்றும் அறியாதவள்” என்று அவளுடைய பெயரின் அர்த்தமாக இருந்தது. “இரக்கத்தை பெற இயலாத”என்று மற்றொரு அர்த்தமும் இருக்கலாம் என்று குறிப்பிடப்படுகிறது. அதற்கு பின் கோமேர் மற்றும் ஒரு குமாரனை பெற்றாள்.

ஒருவேளை அதுவும் வேசிதனத்தில் பிறந்த பிள்ளையாக இருந்திருக்க வேண்டும். அவனுக்கு லோகம்மீ என்று பெயர். இதற்கு "என் ஜனம் அல்ல" என்று பொருள். 10 கோத்திரத்தின் இஸ்ரயேல் இராஜ்யம் மற்றும் யூதா கோத்திரத்தோடு தேவனுடைய நடைமுறை கோமேரின் இந்த இரண்டு பிள்ளைகள் அடையாளங்கள் என்று பாஸ்டர் ரசல்1341-ம் மறுபதிப்பில் கருதுகிறார். "கெட்ட ஜனங்களை பற்றிய சில கடினமான சித்திரங்களை ஓசியா கொடுக்கிறார். முதல் அதிகாரம், 6,7 வசனங்கள் பத்து கோத்திரங்களை தனித்து காட்டுவதை போல தோன்றுகிறது. ஆனால், இனி எந்த விதமான இரக்கமும் இல்லை என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. அதற்கு பதிலாக பத்து கோத்திரங்கள் முழுமையாக தொலைவில் அகற்றப்பட்டது. யூதாவின் மேல் இரக்கம் காண்பிக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு முழு இஸ்ரயேலும் (ஒலிவ மரத்தின் இயல்பான கிளைகள்) புறக்கணிக்கப்படுவதையும் மற்றும் அடிமரம் அல்லது வாக்குத்தத்தின் மேல் ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் ஒட்டவைக்கப் படுவதையும் 9 மற்றும் 10 வசனங்கள் காட்டுகிறது.

ஒட்டவைக்கப்பட்ட இவர்கள் இதுவரையில் தேவனுடைய ஜனம் என்று அடையாளம் கண்டு கொள்ளப்படாதவர்களும், அந்நியரும் பரதேசிகளும் காணியாட்சிக்கு புறம்பானவர்களுமாக இருந்தவர்கள். ஆனால் இப்போது இவர்கள் புறஜாதிக்குள் அருகில் அழைத்து வரப்பட்டு, கிறிஸ்துவுக்கு பங்காளிகளானார்கள் என்று எழுதுகிறார்.

இந்த பிள்ளைகளை கோமேர் பெற்றபின், அவள் தன்னுடைய கள்ள காதலர்களுக்காக ஓசியாவை கைவிட்டாள். ஆனால் ஓசியா அவளை விவாகரத்து செய்யவில்லை. இதன் விளைவாக, அவள் தன்னுடைய கள்ள காதலர்களினால் கைவிடப்பட்டு, வறுமையிலும் அடிமைதனத்திலும் விழுந்தால். அவள் ஒரு அடிமையாக இருந்ததினால், ஓசியா தீர்க்கதரிசி அவளை விலைக்கு வாங்கி, மனைவியாக அவளை மறுபடியும் ஏற்றுக்கொண்டு அவளுடைய திருமண வாழ்க்கையை தொடர்ந்தார் என்று ஓசியா 3:1-3 வசனங்கள் கருதுகிறது.

ஓசியா கோமேருடன் கொண்டிருந்த உறவுமுறை தேவன் இஸ்ரயேலிடம் கொண்டிருக்கும் உறவுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இஸ்ரயேல் ஜனங்கள் தேவன் மேல் அவிசுவாசமுள்வர்கள் என்று நிரூபிக்கப்பட்டது. அப்போது அவர்களின் இரக்கமற்ற காலத்தில் புறஜாதிகளிலிருந்து இரக்கமுள்ள பாத்திரங்கள் (சபை) அழைக்கப்பட்டார்கள். ஆயினும் தேவன் அவர்களை நித்தியமாக, அன்போடு, இஸ்ரயேலை இந்நாள் வரையில் நேசிக்கிறார். கிறிஸ்துவின் ஈடுபலியினால், அவளை திருப்பி, அவளுடைய துன்மார்க்கத்திலிருந்த சுத்திகரித்து புதிய உடன்படிக்கையின் கீழ் அவளுடைய சுதந்திரத்திற்குள் முதிர்ச்சி அடைய செய்வார். தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றத்தில் இஸ்ரயேல் மற்றும் யூதாவை மீண்டும் கூட்டி சேர்ப்பதற்கான வாக்குத்தத்ததோடு ஓசியா முதல் அதிகாரம் நிறைவு பெறுகிறது. "என்றாலும் இஸ்ரவேல் புத்திரரின் தொகை அளக்கவும் எண்ணவுங்கூடாத கடற்கரை மணலைப் போலிருக்கும்; நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும். அப்பொழுது யூதா புத்திரரும் இஸ்ரவேல் புத்திரரும் ஏகமாய்க் கூட்டப்பட்டு, தங்களுக்கு ஒரே அதிபதியை ஏற்படுத்தி, தங்களுக்கு தேசத்திலிருந்து புறப்பட்டுவருவார்கள்; யெஸ்ரயேலின் நாள் பெரிதாயிருக்கும்." (ஓசியா 1:10,11)

### ஓசியாவில் காணப்படும் வரிசைமுறை:

தேவன் இஸ்ரயேலோடும் யூதாவோடும் கொண்டுள்ள நடைமுறை தொடர்பை பற்றியும், புறஜாதிகளுக்கு, ஆவிக்குரிய இஸ்ரயேலுக்கான அழைப்பு தொடர்ந்து கொடுக்கப்படுவதை பற்றியும் ஓசியாவின் புத்தகம் பொதுவான மேலோட்டமான ஒரு பார்வையை நமக்களிக்கிறது.

## இந்த மேலோட்டமான பார்வையில் உள்ளவைகள்:

✵ தேவன் இஸ்ரயேலை ஒரு தேசமாக தெரிந்து கொண்டார். (ஆமோஸ் 3:2, உபா 32:9-10)

✵ இஸ்ரயேல் ஒழுக்கக்கேடுள்ளதென்று நிரூபிக்கப்பட்டு விக்கிரகாராதனைக்கும் திரும்பியது. (ஓசியா 4ம் அதிகாரம்)

✵ தேவன் இஸ்ரயேலை சிதறடித்தார். இஸ்ரயேல் அசீரியரிகளின் கீழ், அதற்கு பின் கிபி 70-ல் ரோமர்களின் கீழ்)

✵ யூதர்கள் மற்றும் புறஜாதிகளிலிருந்து தேவன் தயவுள்ள பாத்திரங்களை (சபை) தெரிந்து கொண்டார். (ஓசியா 2:23, ரோம 9:24,25)

✵ புதிய உடன்படிக்கையின் கீழ், தேவன் இஸ்ரயேலை மறுசீர் பொருத்துகிறார். தேவன் விதைத்தார். ( யெஸ்ரேல், ஓசியா 2:18-23)

### அதிகாரத்தின் மேலோட்டமான பார்வை:

கோமேர் முழு இஸ்ரயேல் தேசத்தையும், அவளுடைய பிள்ளைகள் தேவன் மொத்த இஸ்ரயேலின் 10-கோத்திரம் மற்றும் 2 கோத்திரத்தோடு கொள்ளும்

நடைமுறைத் தொடர்பை அடையாளப்படுத்துவதாக அதிகாரம் ஒன்று குறிப்பிடுகிறது.

ஆபிரகாமின் உடன்படிக்கையின் நிறை வேற்றத்தின் கீழ் இஸ்ரயேலும், முழு மனுக்குலமும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்ற வாக்குத்தத்தத்தோடு (வசனம் 10,11) இந்த அதிகாரத்தை நிறைவு செய்கிறார். இதில்:

**✵மனுக்குலம் இராஜ்யத்தில் உயிர்த்தெழுவார்கள்.**

**✵மேசியாவை ஏற்றுகொள்ளுதல்.**

**✵மனுக்குலம் தேவனுடைய புத்திரர்களாக மாறிவிடுதல்.**

**2ம்** அதிகாரம் இஸ்ரயேலின் ஒழுக்கக் கேட்டையும், இழந்ததை அவள் திரும்பி பெறுவதோடு தொடர்புடைய ஆசீர்வாதங்களையும் பற்றி விவரிக்கிறது. அவர்களின் ஒழுக்க கேட்டை குறித்து மனம் வருந்தா விட்டால், தேவன் அவர்களை எச்சரிக்கிறார். “அவளுடைய பிள்ளைகள் சோரப்பிள்ளைகளா கையால் அவர்களுக்கு இரங்காதிருப்பேன் (4) (2.3) அவளுடைய எல்லா மகிழ்ச்சியையும், அவளுடைய பண்டிகைகளையும், அவளுடைய மாதப்பிறப்புகளையும், அவளுடைய ஓய்வு நாட்களையும், சபைகூடுகிற அவளுடைய எல்லா ஆசரிப்புகளையும் ஒழியப்பண்ணுவேன்.(11) என் நேசர்கள் எனக்குக் கொடுத்த பணையம் என்று அவள் சொன்ன அவளுடைய திராட்சச்செடிகளையும், அவளுடைய அத்திமரங்களையும் நான் பாழாக்கி, அவைகளைக் காடாய்ப்போகப் பண்ணுவேன்; காட்டுமிருங்கள் அவைகளைக் தின்னும். (12) (வசனம் 10-12) என்று அவர் கூறுகிறார்.

ஆயினும் கிறிஸ்து மற்றும் புதிய உடன்படிக்கையின் கீழ், தேவன் இஸ்ரயேலை அவருக்கு இசைவாக மீண்டும் அவரிடம் சேர்த்து கொள்வார். “ஆயினும், இதோ, நான் அவளுக்கு நயங்காட்டி, அவளை வனாந்திரத்தில் அழைத்துக்கொண்டுப்போய், அவளோடே பட்சமாய்ப பேசி” (14) “அவ்விடத்திலிருந்து அவளுக்கு அவளுடைய திராட்சத்தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகாரின் பள்ளத்தாக்கையும் கொடுப்பேன்; அப்பொழுது அவள் அங்கே, தன இளவயதின் நாட்களிலும் தான் எகிப்து தேசத்திலிருந்து வந்த நாளிலும் பாடினது போல் பாடுவாள்.”(15) “அக்காலத்தில் நீ என்னை இனி பாகாலி என்று சொல்லாமல், ஈஷி என்று சொல்லுவாய் என்று கர்த்தர் உரைக்கிறார்.”(16) “அக்காலத்தில் நான் அவர்களுக்காகக் காட்டு மிருகங்களோடும், ஆகாயத்துப் பறவைகளோடும், பூமியிலே ஊரும் பிராணிகளோடும், ஒரு உடன்படிக்கை பண்ணி, வில்லையும், பட்டயத்தையும் யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து,, அவர்களை சுகமாய்ப் படுத்துக் கொண்டிருக்கப் பண்ணுவேன்.”(18) நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்.(19) “உண்மையாய், உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன்; நீ கர்த்தரை அறிந்துகொள்ளுவாய்” (20) மிருகங்களும் ராஜ்யத்தில் இருக்கும் என்பதை வானவில் உடன்படிக்கை 18-23-ம் வசனங்களில் உறுதிப்படுத்துகிறது. யெஸ்ரேல் என்ற பெயருக்கு “சிதறடிப்பு” என்று இனி ஒரு காலமும் பொருள்படாமல், விதைப்பு என்று பொருள்படும். இஸ்ரயேல் என்னுடைய ஜனமாக மாறி நான் அவளை எனக்கென்று பூமியிலே விதைத்து, இரக்கம் பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன்; என் ஜனமல்லா திருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன்; அவர்கள் என் தேவனே என்பார்கள் என்றார். (23) என்று கூறுவார்கள்.

ஓசியா கோமேரை விலைக்கு வாங்குதல் பாவத்திற்கு வழி நடத்தும் அடிமைத்தனம் மற்றும் ஒழுக்கக்கேடு, விக்கிரகாராதனையிலிருந்த இஸ்ரயேலை தேவன் விலைக்கு வாங்கியதை அழகாக சித்தரிக்கப் படுவதை **3ம்** அதிகாரம் விவரிக்கிறது.

இஸ்ரயேலின் ஒழுக்கக்கேடு அவளை ஒரு அடிமையின் நிலைக்கு தாழ்த்தியது. அப்பொழுது நான் அவளை எனக்குப் பதினைந்து வெள்ளிக் காசுக்கும் ஒன்றரைக்கலம் வாற்கோதுமைக்கும் கொண்டு, (வசனம் 2) என்று கூறுகிறது. ஓசியாவின் தனிப்பட்ட மனநிலை எதுவாக இருந்தாலும் (சந்தேகத்திற்கு இடமின்றி மனைவியின் புறக்கணிப்பினாலும், ஒழுக்கக் கேட்டினாலும், மிக எல்லையற்ற துயரத்தில் நொருக்கப் பட்டிருந்த ஒரு மனுஷனாக ஓசியா இருந்திருக்க வேண்டும்.) ஓசியா யெகோவா தேவனுக்கு முற்றிலுமாக கீழ்ப்படிந்திருந்தார். கோமேரை விடுவிக்க ஓசியா தந்த கிரயம், அவள் எந்த அளவுக்கு கீழ்தரமான நிலைக்கு சென்றாள் என்பதை காட்டுகிறது. பொதுவாக முப்பது வெள்ளி காசு அடிமைகளுக்கு கிரையமாக செலுத்தப்பட்டது (யாத் 21:32) வாற்கோதுமை, மிருகங்களுக்கு மட்டுமே உணவாக கருதப்பட்டது. இதை எளிய மக்கள் மட்டுமே உணவாக பயன்படுத்தினார்கள். (ஆனால் கோதுமை சபையை அடையாளப்படுத்துவது போல இயேசுவை உருவகப்படுத்துவதற்கும் வாற் கோதுமை பயன் படுத்தப்பட்டது.) கோமேரின் தரம் மிகவும் குறைந்ததினால் பொதுவான ஒரு அடிமையின் கிரையத்தில் பாதி விலையும் ஏறக்குறைய பத்து மரக்காள் மிருகத்திற்கான உணவு

போதுமானதாக இருந்தது.

தேவனிடத்தில் அவிசுவாசமாக இருந்த இஸ்ரயேலை கோமேர் அடையாளப்படுத்துகிறார். தேவன் அவர்கள் மேல் கொண்ட அக்கறை இங்கு வேறுப்படுத்தி பார்க்கப்படுகிறது. பாழான நிலத்திலும் உளையிடுதலுள்ள வெறுமையான அவாந்தர வெளியிலும் அவர் அவனைக் கண்டுபிடித்தார். அவனை நடத்தினார், அவனை உணர்த்தினார், அவனைத் **தமது கண்மணியைப்** போலக் காத்தருளினார். என்று உபாகமம் 32:10 ம் வசனம் கூறுகிறது. தேவன் அவர்களை மீண்டும் அந்த கிருபையற்ற நிலைக்கு கொண்டுவருவார் என்று ஓசியா 3:5ம் வசனம் விவரிக்கிறது. "பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பி, தாங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும் தேடி, கடைசி நாட்களில் கர்த்தரையும், அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் வருவார்கள்.

இஸ்ரயேலின் பாவங்களை பற்றி அதிகமான விபரங்களை **4 மற்றும் 5ம்** அதிகாரங்கள் தெளிவாக விவரிக்கிறது. இஸ்ரயேல் ஜனங்கள் நிலம், உயர்ந்த மேடுகளிலும் பலி செலுத்துவதற்கு தடை விதிக்கப் பட்டிருந்தது. ஆயினும் சாலமோன் தேவனுக்கு கீழ்படியாமல், எருசலேமுக்கு அருகில் உயர்ந்த மேடுகளில் அந்நிய தெய்வங்களின் விக்கிரங்களுக்கு பலிபீடம் கட்டினார். (ஓசியா4:13) மகா மெல்கிசெதேக்கின் முறைமையின்படி ஆசாரிய தேசமாக இருக்க வேண்டிய இவர்கள் கீழ்படியாமையினாலே, அந்த வாய்ப்பை இழந்து விட்டார்கள். "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராத படிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்." (ஓசியா 4:6)

தேவனுடைய கிருபையான இரக்கத்தை எதிர்த்திட்ட இஸ்ரயேலின் பெருமையை குறித்தும் குறிப்பிடப் பட்டுள்ளது. "இஸ்ரயேலின் அகந்தை அவர்கள் முகத்துக்கு முன்பாகச் சாட்சியிடுகிறது; ஆகையால் இஸ்ரவேலும் எப்பிராயீமும் தங்கள் அக்கிரமத்தினால் இடறுண்டு விழுவார்கள்; அவர்களோடே யூதாவும் இடறுண்டு விழுவான்." (ஓசியா 5:5) "ஆகவே "அவர்கள் தங்கள் குற்றங்களை உணர்ந்து, என் முகத்தைத் தேடுமட்டும் போய்விடுவேன்; தங்கள் ஆபத்தில் என்னைக் கருத்தாய்த் தேடுவார்கள்." (ஓசியா 5:15)

இரண்டு நாட்களுக்கு பின் இஸ்ரயேல் எவ்வாறு மறுபடியும் உணர்வடைந்து மூன்றாம் நாளில் எழும்பும் என்றும் **6ம்** அதிகாரம் விவரிக்கிறது. 1-3 வசனங்களை சகோ.மெக்கீசன் மற்றும் பாஸ்டர் ரசலும் கீழ்காணும் விளக்கங்களை கொடுத்துள்ளார்கள். கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள். இஸ்ரயேலின் இரட்டிப்பான தண்டனை காலத்திற்கு பின் 1878ம் வருடத்தில் நடைபெறும் காரியம். அவரே (தேவன்) நம்மை பீறினார், சுவிசேஷ யுகத்தில் இஸ்ரயேல் தண்டிக்கப்படுவதை குறிப்பிடுகிறது. (1845 வருடங்கள்) தேவன் இரண்டு 1000 வருடங்களுக்கு பின் இஸ்ரயேலை மறுபடியும் உணர்வடைய செய்து மூன்றாம் நாளிலே (1878-ம் வருடத்தின் துவக்கத்தில் உள்ள ஆயிரவருடம்) அவர்களை எழுப்புவார். ஆயிர வருட ஆட்சியின் விடியலில், தேவன் இஸ்ரயேலுக்கு முன் தன்னுடைய முகத்தை திருப்புவார்.

6ம் அதிகாரத்தில் உள்ள மீதி பகுதி, இஸ்ரயேல் தேவனிடத்தில் கொண்டிருக்கும் விசுவாச குறைவைப் பற்றி பேசுகிறது. "அவர்களே ஆதாமைப் போல உடன் படிக்கையை மீறி, அங்கே எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணினார்கள்." (7)

இஸ்ரயேல் தேவனிடம் திரும்பாமல் மனிதரிடமும், எகிப்தியரிடமும், அசீரியர்களிடமும் திரும்பியதைப் பற்றி **7ம் அதிகாரம்** விவரிக்கிறது. "அவர்கள் என்னைவிட்டு அலைந்து திரிகிறபடியினால் அவர்களுக்கு ஐயோ! அவர்களுக்கு கேடுவரும்; எனக்கு விரோதமாக இரண்டகம் பண்ணினார்கள்; நான் அவர்களை மீட்டிருந்தும், அவர்கள் எனக்கு விரோதமாகப் பொய் பேசுகிறார்கள்." (13) "திரும்புகிறார்கள், ஆனாலும் உன்னதமானவரிடத்திற்கு அல்ல; மோசம் போக்குகிற வில்லைப் போலிருக்கிறார்கள்; அவர்களுடைய அதிபதிகள் தங்கள் நாவினுடைய உக்கிரத்தினிமித்தம் பட்டயத்தால் விழுவார்கள்; இதுவே எகிப்து தேசத்தினிமித்தம் அவர்களுக்கு வரும் நிந்தை." (16) இஸ்ரயேல் புறஜாதிகள் தேசத்தோடு நட்புத்தொடர்பு கொண்டதின் விளைவாக, தோல்விகளை சந்தித்தது.

தேவனுக்கு எதிரான இஸ்ரயேலின் பாவங்களாக விக்கிரகாராதனை மற்றும் தேவனுக்கு பதிலாக, ராஜாக்களையும், பிரபுக்களையும் நியமிப்பதை பற்றி **8ம் அதிகாரம்** கூறுகிறது. (4-7 வசனங்கள்) தீமையான ஆட்சியாளர்கள் மற்றும் பொன் கன்றுக்குட்டியை ஸ்தாபிப்பது, இதற்கான எடுத்துக்காட்டுகளாகும்.

இஸ்ரயேலின் விக்கிரகாராதனை **9ம் அதிகாரம்** விவரிக்கிறது. "இஸ்ரவேலே, மகிழ்ச்சியாயிராதே ; மற்ற ஜனங்களைப் போல் களிகூராதே உன் தேவனைவிட்டு நீ சோரம் போனாய்; தானியம் போராடிக்கிற சகல களங்களிலும் பணையத்தை நாடுகிறாய்." (ஓசியா 9:1) "வனாந்தரத்தில் திராட்சக்குலைகளைக் கண்டுபிடிப்பது

போல இஸ்ரவேலைக் கண்டுபிடித்தேன்; அத்திமரத்தில் முதல் தரம் பழுத்த கனிகளைப்போல உங்கள் பிதாக்களைக் கண்டுபிடித்தேன்; ஆனாலும் அவர்கள் பாகால்பேயோர் அண்டைக்குப்போய், இலச்சையானதற்குத் தங்களை ஒப்புவித்து, தாங்கள் நேசித்தவைகளைப் போலத் தாங்களும் அருவருப்புள்ளவர்களானார்கள்.'' (10) அதன் விளைவாக, ''அவர்கள் அவருக்குச் செவிகொடாமற் போனபடியால் என் தேவன் அவர்களை வெறுத்துவிடுவார்; அவர்கள் அந்நிய ஜாதிகளுக்குள்ளே அலைந்து திரிவார்கள்.'' (ஓசியா9:17)

''இஸ்ரயேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத்தானே கனிகொடுக்கிறது; அவன் தன் கனியின் திரளுக்குச் சரியாய்ப் பலிபீடங்களைத் திரளாக்குகிறான்; தங்கள் தேசத்தின் செழிப்புக்குச் சரியாய்ச் சிறப்பான சிலைகளைச் செய்கிறார்கள்.'' என்று **10ம் அதிகாரம்** விவரிக்கிறது. எந்த அளவுக்கு இஸ்ரயேல் வளமானதோ, அந்த அளவுக்கு அவர்கள் விக்கரகாராதனைக்காரர் ஆனார்கள். ''நாம் கர்த்தருக்குப் பயப்படாமற்போன படியினால் நமக்கு ராஜா இல்லை ; ராஜா இருந்தாலும் நமக்காக என்ன செய்வான் என்று இனிச் சொல்லுவார்கள்.'' (3) ''பொய்யாணையிடுகிற வார்த்தைகளைச் சொல்லி, உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள்; ஆகையால் வயல் வெளியின் படைச்சால்களில் விஷப்பூண்டுகளைப் போல நியாயத்தீர்ப்பு முளைக்கும்.''(4) (2-4) ''இஸ்ரயேலுடைய பாவமாகிய ஆபேனின் மேடைகள் அழிக்கப்படும்; முட்செடிகளும் முட்பூண்டுகளும் அவர்கள் பலி பீடங்களின் மேல் முளைக்கும்; பர்வதங்களைப் பார்த்து எங்களை மூடுங்கள் என்றும், குன்றுகளைப்பார்த்து எங்கள் மேல் விழுங்கள் என்றும் சொல்லுவார்கள்.''(8)

ஆதியில் தேவன் இஸ்ரயேலுக்கு கொடுத்த அழைப்பை **11ம் அதிகாரம்** விவரிக்கிறது. ''இஸ்ரயேல் இளைஞனாயிருந்த போது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்.'' (ஓசியா 11:1) ஆயினும், தேவன் ''அவர்களை எந்த அளவுக்கு அழைத்தாரோ, அந்த அளவுக்கு அவர்கள் தேவனை புறக் கணித்தார்கள். அவர்கள் தங்களை அழைக்கிறவர்களின் முகத்துக்கு விலகிப் போய்விட்டார்கள்; பாகால்களுக்குப் பலியிட்டு, விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டினார்கள்.''(2) ''ஆகையால் அவர்களுடைய ஆலோசனைகளினிமித்தம் பட்டயம் அவர்கள் பட்டணங்களுக்குள் பாய்ந்து, அவர்கள் தாழ்ப்பாள்களை நிர்மூலம்பண்ணி, அவர்களைப் பட்சிக்கும்.''(6) அவர்களின் தண்டனையை தொடர்ந்து, அவர்களை இயல்பு நிலைக்கு மீட்பேன் என்று தேவன் வாக்களித்தார். அவர்கள் கர்த்தரைப் பின்பற்றுவார்கள்; அவர் சிங்கத்தைப்போல் கெர்ச்சிப்பார்; அவர் கெர்ச்சிக்கும்போது அவர்கள் சந்ததியார் மேற்குத்திசையிலிருந்து நடுங்கி வருவார்கள். (10)''எகிப்திலிருந்து குருவிகளைப் போலவும், அசீரியா தேசத்திலிருந்து புறாக்களைப் போலவும் பயந்து வருவார்கள்; அப்பொழுது அவர்களை அவர்கள் வீடுகளில் குடியிருக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.'' (11)

தேவன் ஆதியிலே இஸ்ரயேலோடு (யாக்கோபு) கொண்டிருந்த நடைமுறைத் தொடர்பை பற்றி **12ம் அதிகாரம்** திரும்ப காட்டுகிறது. ''அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரை நோக்கிக் கெஞ்சினேன்; பெத்தேலிலே அவர் அவனைக் கண்டு சந்தித்து, அவ்விடத்திலும் நம்மோடே பேசினார்.'' (4) ஆம், ''கர்த்தராகிய அவர் சேனைகளின் தேவன்; யேகோவா என்பது அவருடைய நாமசங்கீர்த்தனம்.(5) (3-5) ஆயினும் யாக்கோபின் மாதிரிகளையும் பின்பற்றுவதற்கு தேவனுடைய ஆலோசனைகளையும் இஸ்ரயேல் மறுத்து விட்டார்கள். ''இப்போதும் நீ உன் தேவனிடத்தில் திரும்பு; தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு, இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு.''(6) அதற்கு பதிலாக, அந்த தேசம் தொடர்ந்து பாவம் செய்தது. ''எப்பிராயீமோ அவரை மிகவும் கோபப்படுத்தினான்; ஆகையால் அவனுடைய ஆண்டவர் அவனுடைய இரத்தப்பழிகளை அவன்மேல் சுமத்தி, அவன் செய்த நிந்தையை அவன் மேல் திருப்புவார்.''(14)

இஸ்ரயேல் தேவனுக்கு விரோதமாக செய்த பாவங்களை, **13ம் அதிகாரத்தில்** தொடர்ந்து வரிசைப் படுத்துகிறது. ''இப்போதும் அவர்கள் அதிகமதிகமாய்ப் பாவஞ்செய்து, தங்கள் வெள்ளியினால் வார்ப்பித்த சுரூபங்களையும், தங்கள் புத்திக்கேற்க விக்கிரகங்களையும் தங்களுக்கு உண்டு பண்ணுகிறார்கள்; இவைகளெல்லாம் தட்டாருடைய வேலை ; மனுஷரில் பலியிடுகிறவர்கள் கன்றுக் குட்டிகளை முத்தமிடலாமென்று இவைகளைக் குறித்துச் சொல்லுகிறார்கள்.''(2) தேவன் இஸ்ரயேலை ஆசீர்வதித்த பின் அவர்கள் அவரை மறந்துவிட்டார்கள். ''தங்களுக்கு இருந்த மேய்ச்சலினால் திருப்தியானார்கள்; திருப்தியான பின்பு அவர்கள் இருதயம் மேட்டிமையாயிற்று; அதினால் என்னை மறந்தார்கள்.''(6) ஆகவே, ''குட்டிகளைப் பறிகொடுத்த கரடியைப்போல நான் அவர்களை எதிர்த்து, அவர்கள் ஈரற்குலையைக் கிழித்து, அவர்களை அங்கே சிங்கம் பட்சிக்கிறது போல் பட்சித்துப்போடுவேன்; காட்டு மிருகங்கள் அவர்களைப் பீறிப்போடும்.'' (8) (7,8)

ஆனால், அவர்களின் அழிவு சீயோனிலிருந்து மீட்கப்படும் ஒரு நம்பிக்கையை தேவன் அவர்களுக்கு விட்டு செல்கிறார். ‘‘அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே, உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்.’’ (ஓசியா 13:14)

இஸ்ரயேல் தேவனிடத்தில் திரும்புவதோடு, ஓசியாவின் புத்தகத்தில் நிறைவு செய்கிறது. ‘‘நான் இஸ்ரயேலுக்குப் பனியைப் போலிருப்பேன்; அவன் லீலிப் புஷ்பத்தைப்போல் மலருவான்; லீபனோனைப் போல் வேரூன்றி நிற்பான்.’’ (ஓசியா 14:5) ‘‘அவன் கிளைகள் ஓங்கிப் படரும், அவன் அலங்காரம் ஒலிவமரத்தினுடைய அலங்காரத்தைப் போலவும், அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப் போலவும் இருக்கும்.’’ (6) (4-6)

**முடிவுரை:**

தேவன், இஸ்ரயேலின் ஒழுக்கக்கேட்டை எடுத்துக்காட்டுவதற்கு, ஓசியா, கோமேர் மற்றும் அவர்களின் பிள்ளைகளின் வாழ்க்கையை பயன்படுத்தினார். இஸ்ரயேலின் தண்டனை காலத்தின் போது ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியை நினைவு செய்வதற்கு, இரக்கமுள்ள பாத்திரங்களாக மாறுவதற்கு தேவன் புறஜாதிகளை அழைத்தார். (ரோ 9:23-26)

இஸ்ரயேலர்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குள் நுழைவதற்கு முன் தங்களுடைய ஒழுக்கக்கேட்டை (அவிசுவாசுத்தை) நிரூப்பிார்கள் என்று தேவன் முன் அறிந்திருந்தார். ஆகவே தேவன் (புறஜாதிகள்) ஒரு ஜாதியை கொண்டு அவர்களுக்கு (இஸ்ரயேல்) கோப பூட்டினார்.(ரோமர்10:19,20) உடனே, தேவன் அவர்களுக்கு தம்முடைய முகத்தை மறைத்து அவர்களை ‘‘மதிகெட்ட ஜாதி’’ என்று அவர்களை அழைக்கிறார். (உபா 32:15-21) சபைக்குரிய அழைப்பில் புறஜாதியாரின்நிறைவு அடையும் போது (ரோ 11:25) முழு இஸ்ரயேலையும் தேவன் மீண்டும் முந்தின கிருபைக்கு, சீர் பொருத்துவார். (உபா 32:43) இனி ஒரு போதும் தேவன் அவருடைய முகத்தை இஸ்ரயேலுக்கு மறைப்பதில்லை. (ஏசா39:25-29) ஆனால் புது உடன்படிக்கையின் வழியாக அவர்களை மீட்பார். (ஏசா 2:18-23) இஸ்ரயேலின் ஒழுக்கக்கேட்டினால் தேவன் எவ்வாறு இஸ்ரயேலை ‘‘சிதறடிப்பார்’’ என்றும் இஸ்ரயேல் தேவனுடைய ஜனமாக மாறுவதற்கு அவர் விதைப்பார் என்றும் கோமேரின் மூத்த குமாரன் யேஸ்ரேல் அடையாளப்படுத்துகிறார்.

**வரம்பு மீறிய மனித சுயநலத்தில்:**

திருமணத்தில் உள்ள அன்பை ஓசியா செயல்முறைப்படுத்தினார். பல திருமணங்களின் சுயநலமான அன்பின் அடிப்படையல் உள்ளது. இந்த உறவிலிருந்து எனக்கு என்ன கிடைக்கும? அன்பின் செயல்முறை மற்றும் அதன் சொல் விளக்கத்தை பற்றி கிரேக்க மொழியில் நான்கு வார்த்தைகள் காணப்படுகிறது.

(1) Eros - ஈரோஸ் இயற்பியல் அன்பு

(புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தவில்லை)

(2) Phileo - பிலியோ – சகோதர அன்பு

(3) Storge - ஸ்டோர்ஜ் – குடும்ப அன்பு

(4) Agape -அகாபே – எந்தவிதமான எதிர்பார்ப்பு இல்லாத அன்பு. ஓசியாவின் வாழ்க்கையில் அவர் ஈரோஸ், பிலியோ, மற்றும் ஸ்டோர்ஜ் அன்பை கற்று கொண்டார். கோமேரோடு அவர் கொண்ட தொடர்பின் வழியாக, இந்த மூன்று வகையான அன்பும் அகாபே அன்பில் வளர்ச்சி அடைவதற்கு உதவியாக இருந்தது. இந்த அன்பை ஓசியா தேவனிடமும் இஸ்ரயேலிடமும், மற்றும் எந்த விதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் தன்னுடைய மனைவியிடத்திலும் இந்த தெய்வீக அன்பை வெளிப்படுத்தினார்.

***‘‘என்றாலும், இஸ்ரவேல் புத்திரரின் தொகை அளக்கவும் எண்ணவுங்கூடாத கடற்கரை மணலைப்போலிருக்கும்; நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச் சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும்.’’ (ஓசியா 1:10)***

# இஸ்ரயேலின் தண்டனை மற்றும் இரட்சிப்பு



**கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார்; வானமும் பூமியும் அதிரும்; ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரவேல் புத்திரருக்கு அரணான கோட்டையமாயிருப்பார். (யோவேல் 3:16)**

**Jeff Earl**

யோவேல் பெத்துவேலின் குமாரானாக இருந்தார் என்ற விவரத்தை தவிர, அவருடைய குடும்பம் மற்றும் பின்னணியை பற்றிய வேறெதுவும் கொடுக்கப்படவில்லை. (பெத்துவேல் என்பதற்கு “தேவனுடைய ஒரு மனுஷன் “or”தேவன் இரட்சிக்கிறார்” என்று பொருள்) யோவேலின் பெயருக்கு “யேகோவாவே தேவன்” என்றும் பொருள். அவருடைய தீர்க்கதரிசனங்கள் யூதா மற்றும் எருசலேமை குறித்திருந்ததினால் அவர் யூதேயாவில் குடியிருந்திருக்க வேண்டும். ஏனெனில் அவர் திராட்சை தோட்டக்காரர் மற்றும் வாற் கோதுமையை குறித்தும் எழுதுகிறார். இதற்கு எதிரிடையாக, யோயேல் தீர்க்கதரிசி ரூபன் கோத்திரத்தை சேர்ந்தவர் என்றும் அவர் Bethoran பட்டணத்தில் வசித்து வந்தார் என்றும் வேதாகம விமர்சகர் ஆதாம் கிலார்க்கு கருதுகிறார்.

கி.மு783 கி.மு742 வருடங்களுக்குள், உசியாவின் ஆட்சியின் போது யோவேல் தீர்க்கதரிசியாக இருந்தார் என்று பல விமர்சனங்கள் கருதுகிறார்கள். மற்றவர்கள் அவரை உசியா ராஜாவுக்கு சற்று முன் இருந்த ராஜாவாகிய Jehoash அல்லது அமத்சியாவின் காலத்தில் வாழ்ந்தவர் என்று கருதுகிறார்கள். இந்த புத்தகம் ஓசியா மற்றும் ஆமோசுக்கு இடையில் இருப்பதினால் இந்த புத்தகம் கிமு 774-ம் வருடம் உசியா ராஜாவான ஒன்பது வருடங்களுக்கு பின் எழுதப்பட்டது என்று சிலர் கருதுகிறார்கள். 12 சிறிய தீர்க்கதரிசகளில் யோயேல் இரண்டாவதானவர். அவர் ஓசியாவுக்கு பின் 20 வருடங்களும், ஏசாயாவுக்கு முன் 60 வருடங்கள் வாழ்ந்திருக் கூடும்.

## யோவேல் புத்தகத்தின் மேலோட்டமான பார்வை:

ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல், சகரியா மற்றும் வெளிப்படுத்தலில் மிக விளக்கமாக சொல்லப்பட்ட வருங்கால நிகழ்ச்சிகளின் சுருக்கத்தை யோயேலின் புத்தகம் தருகிறது. இந்த புத்தகம் மூன்று விதமான தீர்க்கதரிசனங்கள் கொண்டிருப்பதாக தோன்றுகிறது.

✵ எருசலேமின் அழிவை விளைவிக்கும்படிாக, பல வருடங்களாக பாபிலோன் யூதாவின் மேல் படையெடுப்பு. (யோவேல் 1:9,13)

✵ இந்த சுவிசேஷ யுகத்தின் (யோயேலின் அடிப்படையான செய்தி) இறுதி நாட்களைப் பற்றிய விவரங்கள்: வடதிசையிலிருந்து ஒழுக்கமுள்ள ஒரு திரளான சேனை இஸ்ரயேலை ஒழுக்கமுள்ள ஒரு திரளான சேனை இஸ்ரயேலை சிறைபிடித்ததும் இதில் அடங்கும். எருசலேமின் சிறையருப்பு நெருங்கி வருவதாக அச்சுறுத்தப்படுகையில், கர்த்தர் அற்புதமாக, குறுக்கிட்டு, படையெடுத்து வரும் சேனையை அழித்துவிடுவார். இதை தொடர்ந்து எருசலேம் முன்னிருந்த நிலைக்கு சீர்ரமைக்கப்படும். மற்றும் தேவனுடைய இராஜ்யத்தின் துவக்கத்தில்,ஏராளமாக இஸ்ரயேலுக்கு திரும்ப கொடுக்கப்படும்.

✵ தேவனுடைய இராஜ்யம் துவங்குவதற்கு சற்றுமுன், கிறிஸ்துவ மண்டலத்தின் மேல் வரும் நியாயத்தீர்ப்பு மற்றும் இறுதி அழிவைப்பற்றிய விவரம்.

## வரிசை வாரியான அதிகாரங்கள்:

**அதிகாரம் 1** யூதாவின் மேல் பாபிலோனின் படையெடுப்பு, இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவுக்கு கொண்டுவரும் மகா உபத்திரவத்தின் முன் அனுபவம் என்று யோயேல் புத்தகம் விவரிக்கிறது. அவருடைய வாரிசுதார்களை கேட்கும் படிக்கு அனைவரையும் அவர் வற்புறுத்துகிறார். மேலும் பின் தொடரும் சந்ததிகளுக்கு, தீர்க்கதரிசனத்தை கடந்து போகும்படி செய்கிறார். (மூன்று தலைமுறைகள் குறிப்பிடப்படுகிறது)

இந்த தீர்க்கதரிசனம் நிறைவேற அநேக காலங்கள் செல்லும் என்பதினால் இப்படியாக சொல்லப்பட்டிருக்க வேண்டும். (வசனம் 1-3) தொடர்ந்து, இஸ்ரயேலை நான்கு நிலைகளில் வெட்டுகிளிகள் தாக்கியதால், தேசம் முற்றிலும் பாழானது. இந்த பகுதி சொல்லர்த்தமான வெட்டுகிளிகளின் தாக்குதல்களை மட்டும் அல்ல, அடையாளமாக, ஒன்றை காட்டிலும் அழிக்கும் தன்மை கொண்ட மற்றொன்று கொடிதான நான்கு படைகள் தாக்கியதை பற்றியும் விவரிக்கிறது.

இரண்டு கோத்திரங்களை கொண்ட யூதா, தேவனுடைய உண்மையான தீர்க்கதரிசிகளுக்கு செவி கொடுப்பதை காட்டிலும் பொய் தீர்ச்சதரிசிகளுக்கு

அதிகமாக செவி கொடுத்தபடியினால் இனி நடக்க போகிற காரியங்களை குறித்து அறியாதிருந்தார்கள். (வசனம்5) படையெடுக்கக்கூடிய வல்லமை ஒரு சிங்கத்தை போல விவரிக்கப்படுகிறது. அது அடையாளமாக பாபிலோனை குறிப்பிடுகிறது. (வசனம் 6) (பாபிலோனை சிங்கம் அடையாளப்படுத்தும் சிங்கத்திற்கான ஆதாரத்தை ''பாபிலோன் சிங்கம்'' என்று அடையாளப்படுத்தப்படும். விழுந்து போன ஒரு மனுஷனுக்கு மேலாக ஒரு சிங்கம் நின்று கொண்டிருக்கும் ஒரு கருங்கல்லின் சிலை 1876ம் ஆண்டில் ஈராக்கில் கண்டுபிடிக்கப்பட்டது. கூடுதலாக ''உன் தேசத்தை பாலாக்கி விடும் படிக்குச் சிங்கம் தன் புதரிலிருந்து எழும்பி, ஜாதிகளைச் சங்கரிக்கிறவன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறான்; உன் பட்டணங்கள் குடியிராதபடி அழிக்கப்படும்''என்று பாபிலோனை எரேமியா 4:7-ம் வசனம் விவரிக்கிறது. ) வயல்கள், திராட்சை தோட்டங்கள் மற்றும் மரங்கள் அழிக்கப்பட்டதையும் பணிகள் முடிவடைந்ததையும் ஆசாரியர்கள் துக்கங்கொண்டாடுவதும் 7:20 வசனங்களில் விவரிக்கப்படுகிறது. வயல்கள், கால் நடைகள் மேல் கடுமையான வறட்சி மற்றும் தண்ணீர் பற்றாகுறையினால், கால்நடை தீவனங்கள் கிடைக்கவில்லை. ஆலயத்தின் காணிக்கைகள் மற்றும் பலிகள் இனி ஏறெடுக்கப்பட முடியவில்லை. (17-20 வசனம்)

**அதிகாரம் 2 :** வடதிசையிலிருந்து படையெடுப்பினால் இஸ்ரயேல் சந்தித்த அழிவையும், அதை தொடர்ந்து ஆண்டவர் இஸ்ரயேலை இரட்சித்ததையும் இந்த அதிகாரம் விவரிக்கிறது. அச்சுறுத்தப்படும், ''கர்த்தரின் நாள்'' குறித்து ஊதப்படும் எக்காளம் எச்சரிக்கிறது. (வசனம் 1) ''ஏராளமான பலத்த ஒரு ஜாதியின்'' படையெடுப்பினால் வரக்கூடிய உபத்திரவங்களை குறிப்பிடும் இந்த நாளை ''மப்பும் மந்தாரமுமான''நாள் என்று அடையாளப்படுத்தப் படுகிறார்கள். (வசனம்-2) தேசம் அக்கினியினால் சுட்டெரிக்கப்படுவதின் விவரங்கள், 1 அதிகாரத்தில் நான்கு வெட்டுகிளிகளின் படையெடுப்பின் பாதிப்புகளின் விவரங்களுக்கு ஒப்பாக உள்ளது. அங்கு வந்த சேனைகள் அவர்களுக்கு முன்னிருக்கும் வாழ்வு வளத்தை பாழாக்கினார்கள். (வசனம் 3)

இஸ்ரயேலை கொள்ளையிடும் படிக்கு அவர்களை தாக்கின கர்த்தருடைய மகா சேனை, ஒரு ஒழுக்கமுள்ள சேனையாக இருந்தது. (வசனம் 2-11) அதற்கு எதிர்ச் செயலாக அவரை ஆராதிக்க திரும்பும்படி, ஜனங்களை தேவன் அறிவுருத்தினார். இப்படி செய்தால் தேவன் அவருடைய இரக்கத்தை காட்டுவார் (வசனம் 12-14) மீதியிருந்த விசுவாசமுள்ள இஸ்ரயேலர்கள் அதற்கு மறுமொழி கூறும் வகையில் தங்களுடைய எதிராளிகளிடமிருந்து தங்களை இரட்சிக்கும்படிக்கு தேவனிடத்தில் மன்றாடினார்கள். (15-17 வசனங்கள்) யோகோவா தேவன் அவர்களுக்கு பதில் அளித்து இரக்கத்தை காட்டி சவக்கடல் மற்றும் மத்திய தரைகடல் நடுவே உள்ள சேனைகளை வெட்டினார். (18-20 வசனங்கள்)

(திரளாக கிடக்கும் பிரேதங்களை அடக்கம் செய்வதற்கு ஏழு மாதங்கள் தேவைப்படும் என்று எசேக்கியேல் 39:12-ம் வசனம் விவரிக்கிறது.)

இதற்கு பின் வளமான மற்றும் திரளான ஆசீர்வாதங்களோடு தேவன் இஸ்ரயேலை ஆசீர்வதித்து அந்த ஆசீர்வாதங்கள் மீதியுள்ள மனுக்குலத்தை தொடர்ந்து செல்லக்கூடியதாக உள்ளது. தேவனுடைய இந்த ஆசீர்வாதங்கள் முன் மாரியையும், பின் மாரியையும் சுபிக்ஷமான வாழ்வு வளமும் ஏராளமான உணவுகளையும் கொண்டு வரும். (21-27 வசனங்கள்) சுவிசேஷ யுகத்தின் போது தேவன் பரிசுத்த ஆவியை முதலில் மாம்சத்தில் உள்ள சபையின் மேல் ஊற்றுகிறார். (29வசனம்) அதற்கு பின் கிறிஸ்துவின் பூமிக்குரிய பகிரங்கமான ஆட்சியின் போது உலகத்தின் முழு மனுக்குலத்தின் மேல் ஊற்றுவார். (28ம் வசனம்) (இந்த வசனங்கள், அப் 2:16-18-ல் சுட்டிக்காட்டப்படுகிறது. சுவிசேஷ யுகத்தின் சபையின் அழைப்போடு இந்த காரியம் சம்மந்தப்பட்டதாக உள்ளது. குறித்த காலம் நிறைவேறும் போது இந்த வசனங்கள் எதிர்மறை வரிசையில் காணப்படும். கர்த்தருடைய அந்த மகா பயங்கரமான நாள் வருவதற்கு முன் சூரியன் மற்றும் சந்திரன், இரத்த சிவப்பு நிறமாக மாறும். எரிமலை பூமி அதிர்ச்சியோடிணைந்த வெடிப்பை போல, (சாம்பலான மேகம்) அல்லது ஒரு கிரகணம் போல ஒரு இயற்கையான நிகழ்வை போல இது சம்பவிக்கும். படையெடுப்புக்கு முன்னதாக ஆண்டவர் மேல் பொதுவான விசுவாச குறைச்சலை இது அடையாளமாக காட்டுகிறது. ஆயினும், விசுவாசமுள்ள மீதியிருக்கும் இஸ்ரயேல் இந்த படையெடுப்பின் போது கர்த்தரின் மேல் அவர்கள் எருசலேமில் கொண்டிருக்கும் விசுவாசத்தினால் காக்கப்படுவார்கள். (30-32 வசனம்)

**அதிகாரம் 3**: யோவேலின் தரிசனம் சுவிசேஷ யுகத்தின் முடிவுக்கு ஒப்புவிக்கப்படுகிறது. இதில் இஸ்ரயேலுக்கு எதிராக ஜாதிகள் கூட்டப்படும், தேவன் அவர்களுக்காக தேசத்தை மீட்பார். யூதா மற்றும் எருசலேமை, அவர்கள் சிதறடிக்கப்பட்ட இடங்களிலிருந்து, அவர்கள் தேசத்திற்கு மறுபடியும் கொண்டு வந்து அவர்களுடைய வளமான வாழ்வை கொடுப்பார் என்று

தேவன் வாக்களித்திருக்கிறார். சுவிசேஷ யுகத்தின் போது யூதர்கள் வேறுபடுத்தப்பட்டவர்களாக அவர்கள் மிக மோசமாக நடத்தப்பட்டு புறஜாதிகளால் கொலை செய்யப்பட்டார்கள். ஆகவே, தேவன் இந்த தேசங்களை ''யோசபாத்தின் பள்ளத்தாக்கில்'' நியாயத்தீர்ப்புக்காக கூட்டி சேர்த்து, அவர்களை தண்டிக்கிறார். (1-3 வசனங்கள்) (இது எருசலேமுக்கும் ஒலிவ மலைகளுக்கும் இடையில் உள்ள கிதரோன் பள்ளத்தாக்காக அல்லது எருசலேம் மற்றும் எபிரோனுக்கு இடையில் உள்ள பெர்க்க பள்ளத்தாக்காக தோன்றுகிறது. சகரியா 12:14-ம் அதிகாரங்களில் விவரிக்கப்பட்டபடி ஜாதிகள் கூட்டி சேர்க்கப்படுவதற்கு ஒப்பாக உள்ளது.) யோசபாத் என்பதற்கு ''தேவனுடைய நியாயத்தீர்ப்பு'' என்று பொருள். இஸ்ரயேலை கடினமாக நடத்தின தேசங்களுக்கு வரும் தீர்ப்பாகும்.

லீபனோன் (தீரு மற்றும் சீதோன்) மற்றும் காசாவின் (பெலிஸ்தியர்) தனிப்பட்ட தண்டனை கோகுமாகோகின் படையெடுப்புக்கு முன் சம்பவிக்கும். ஒருவேளை அந்த பகுதியில் அரபியர்களோடு மற்றொரு யுத்தத்தில் நடைபெறலாம். (வசனம் 4-8) (இது யூதர்களுக்கு விரோதமாக புறதேசத்தாரின் நடத்தையின் அடையாளமாக இருக்கலாம், அதே சமயத்தில் சங்கீதம் 83-ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, யாக்கோபின் பிரச்சனைக்கு முன்பாக அரேபியர்களுடன் எதிர்கால போரில் சாத்தியமான இரண்டாவது நிறைவேற்றமாகவும் இருக்கலாம். பெலிஸ்தியா (காசா) மற்றும் தீரு மற்றும் சீதோன் (லெபனான்) இடத்திலுள்ள மக்களை சபேயின் பிராந்தியத்திற்கு இடமாற்ற மாகலாம் (யோவேல்3:8) தென் மேற்கு அரேபியா விவிலிய ஷேபா அல்லது இப்போது யேமன் என்ற அழைக்கப்படுவதோ சமீபத்திய ஆண்டுகளில் அந்த இரு பகுதிகளும்இஸ்ரேயலுக்கு மிகவும் எதிரிகளாக இருக்கின்றன- காசாவில் ஹமாஸ் அரசாங்கம் மற்றும் ஹபொல்லா பெலனானில் அரசாங்கத்தை தாக்கின இஸ்ரயேல் மீது இவ்விரண்டும் வெடிக்குண்டு தாக்குதல் நடத்தி வருகின்றோம். கோகு, மாகோகின் படையெடுப்புக்கு முன் தேசங்கள் இயல்பாகவே சமாதானத்தின் நோக்கத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்டன.

(வேளாண்மை இயந்திரங்கள்) சேர்வையை பயன்படுத்தியோர் டாங்குகள், போர் விமானங்கள் போன்றவைகளை செய்து யுத்தத்திற்கு ஆயத்தப்படுவார்கள். ஆயத்த வேலைகளால் பலவீனமான தேசங்கள் பலமுள்ள தேசங்களோடு இணைந்து செயல்படும். ''யோசபாத்தின் பள்ளத்தாக்கில்,'' தேசங்களின் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பு இரக்கமற்ற அழிவை ஏற்படுத்தும். (9-12வசனங்கள்) (இந்த வரைபடம் செப்பனியா 3:8-ல் மற்றும் சகரியா 14:2 உள்ளதை போலிருக்கிறது.)

திராட்சை பழங்களின் அறுவடை மற்றும் ஆலையில் ரசம் பிழிதல்(வசனம் 13) யோவேல் 3-ம் அதிகாரத்தின் பகுதியை அடிப்படையாக கொண்டுள்ளது, இது இஸ்ரயேலில் திரளான கோகு மற்றும் மாகோகின் அழிவை அடையாளமாக காட்டுகிது. பொய் கிறிஸ்தவ மண்டலத்தின் நசுக்குதலை, வெளிப்படுத்துதல் சித்தரிப்பது போல தோன்றினாலும் பூமியில் உள்ள எல்லா திராட்சை பழங்களையும் ஆலையில் அழிப்பதற்காக கூட்டி சேர்க்கப்படுவதை இந்த மொழி வெளி 14:17-20-ம் வசனங்களை நமக்கு நினைப்பூட்டுகிறது. தீர்மானிக்கப்பட பள்ளத்தாக்கில் அழிக்கப்பட்ட திரளானவர்கள் தேவனுடைய உறுதியையும், நியாயத்தீர்ப்பையும் வெளிப்படுத்துகிறார். ஒருவேளை இது சாம்பலை வானத்தை இருட்டாக்கும் ஒரு பூமி அதிர்ச்சியினால் ஏற்பட்டிருக்கலாம். (14-15 வசனம்)

தேவன் இஸ்ரயேலுக்கு எருசலேமுக்கு மேலும் தேவனுடைய பூமிக்குரிய ஆட்சியின் அடிப்படையிலும் தேவன் இஸ்ரயேலுக்கு முழு அதிகாரத்தை கொடுத்து அவர்களுக்கு திரும்பவும் இரக்கம் காண்பிக்கிறார். (17 வசனம்) இஸ்ரயேலில் மிகுதியான உணவு மற்றும் நீர் வளமும் இஸ்ரயேலுக்கும் மற்ற ஜாதிகளுக்கு தொடர்ந்து கிடைக்கக்கூடிய தேவனுடைய சத்தியத்தையும் சித்தரிக்கிறது. (18-ம் வசனம்) யூதாவுக்கு எதிராக எகிப்து மற்றும் ஏதோமு; செய்திட்ட வன்முறை செயல்களுக்கான தண்டனை (வசனம்-19) சொல்லர்த்தமாகவும் , அடையாளமாகவும் நிறைவேறும் என்று தோன்றுகிறது. எகிப்தின் தண்டனை தற்காலிகமானதும், ஏதோமின் தண்டனை நிரந்தரமானது (இது மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது) இஸ்ரயேல் மற்றும் எருசலேம் யூதர்கள் கட்டுப்பாட்டில் மற்றும் இஸ்ரயேலின் மேல் படையெடுத்த ஜாதிகளின் அழிவோடு இந்த புத்தகம் நிறைவடைகிறது. (20-21வசனங்கள்)

**வெட்டுகிளிகளின் வாதை – நான்கு நியாயத்தீர்ப்புகள்:**

வெட்டுகிளிகள் சுத்தமான (ஆரோக்கியமான) உணவு என்று நியாயப்பிரமாணம் கருதுகிறது. (லேவி 11:22) இவைகள் புரதச்சத்து நிரம்பியது. யோவான் ஸ்நானகன் வெட்டு கிளியும், தேனையும் உட்கொண்டு பிழைத்தார். (மத்3:4) ஒவ்வொரு வெட்டு கிளியும் ஒவ்வொரு நாளிலும் அதனுடைய இடை அளவுள்ள உணவை உட்கொள்ள முடியும். இவைகள் நான்கிலிருந்து ஆறு மாதங்கள் வாழக்கூடியவைகள்.

யோவேல் 1:4 மற்றும் 2:25-ம் வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள வெட்டுகிளி வாதையின் நான்கு நிலைகள். கம்பிளிப்பூச்சி அல்லது முட்டைப் புழுவின்

வடிவில் உள்ள வெட்டுகிளி அல்லது கடிக்கக்கூடிய வெட்டுகிளிகள், மற்றும் அழிக்கக்கூடிய வெட்டுகிளிகள் இவைகள் வானத்தை அந்தகாரப்படுத்தும் என்று மீண்டுமாக (யோவேல்2:2-5) வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. அதாவது இஸ்ரயேலின் மேல் இறங்குகிற வடதிசையின் மகா சேனைகளை அடையாளமாக குறிப்பிடுகிறது. இந்த வெட்டுகிளிகளினால் ஏற்பட்ட இழப்புகளை பற்றி யோவேல் 2:25-ம்வசனம் வெளிப்படுத்துகிறது. தேசம் சீரமைக்கப்படும் போது இவைகள் அனைத்தும் முந்திய நிலைக்கு திரும்பும்.

யோவேல் 1:4-ம் வசனத்தில் வெட்டுகிளிகளின் வாதை இந்த யுகங்களில் முடிவுவரை பல நிறைவேற்றங்களை காணலாம். இதில் இயற்கையான இடுக்கண்கள் மற்றும் படைகளின் தாக்குதல்களும் குறித்துக்காட்டுகிறது. நாலு என்ற எண் தெய்வீக நியாயத்தீர்ப்பை குறிப்பிடுவதற்கு தொடர்ந்து வசனங்களில் பயன்படுத்தப்படுகிறது. வெட்டுகிளிகளின் நான்கு நிலைகள் எதை அடையாளப்படுத்தும் என்பதற்கான இரண்டு கருத்துக்கள் என்னவெனில் :

❋ இஸ்ரயேலின் வட திசையின் பத்து கோத்திரங்கள் மற்றும் யூதா ராஜ்யத்தின் இரண்டு கோத்திரங்கள் மேல் படையெடுத்த நான்கு வேறுப்பட்ட இராஜாக்களை அடையாளப்படுத்தும் இராஜாக்கள் இவர்களே. 1) அசீரியாவின் சல்மனாசார்-V (2 இராஜா 18:9-12), (2) அசிரியாவின் சர்கான்-II (ஏசா 20:1) (3) அசீரியாவின் செனகெரிப் (ஏசா 36&37) மற்றும் (4) பாபிலோனில் நேபுகாத்நேச்சார் (2 இராஜா 24:1-4) என்று ஜனவரி/பிப்ரவரி 1984, Bible Study Monthly Article, கருதுகிறது.

❋ யூதாவின் மேல் பாபிலோன் நான்கு முறை படையெடுப்பு. (1) எருசலேமை நேபுகாத்நேச்சார் முற்றுகையிட்டு, தானியேலையும் அவருடைய சிநேகிதரையும் சிறைபிடித்தான். யோயாக்கீம் 3 வருடங்கள் நேபுகாத்நேச்சாரின் ஊழியக்காரனாக இருந்தார். (2 இராஜா 24:1, தானி 1:1-2) (2) யோயாக்கீம் கலகம் செய்ததினால் கல்தேயர்கள், சீரியர்கள், மோவாபியர்கள் மற்றும அம்மோனியர்கள் யூதாவுக்கு எதிராக வந்தனர்.(2 இராஜா 24:1-9) Jchoiachin's ஆட்சியின் போது எருசலேம் முற்றுகை போடப்பட்டது. (யோயாக்கீமின்குமாரன்) அவனும் அவனுடைய மன்றங்கள் எசேக்கியேல் உட்பட சிறைபிடிக்கப்பட்டது. (2 இராஜா 24:10-16) (4) சிதேக்கியா (நேபுகாத்நேச்சாரால் Jchoiachin's இடத்தில் இராஜாவாக நியமிக்கப்பட்டவர்) கலகம் செய்தான், நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு முற்றுகையிட்டு, முழுமையாக அழித்துவிட்டார். (2 இராஜா 25:1-12)

நான்கு விதமான நியாயத்தீர்ப்புகள் அல்லது அழிவுகளை பற்றிய மற்ற வசனங்கள் அடிப்படையிலான எடுத்துக்காட்டுகள் :

(1) கர்த்தருக்கு முன் பர்வதத்தின் மேல் நின்ற எலியா, அவரிடத்திலிருந்து நான்கு செயல்களை நோக்கினார். ஒரு பலத்த காற்று, ஒரு பூமி அதிர்ச்சி, ஒரு அக்கினி மற்றும் ஒரு மெல்லிய குரல் (1 இராஜா 19:11-12)

(2) நான்கு விதமாக அழிப்பவர் அல்லது யூதாவின் மேல் வரும் நியாயத்தீர்ப்பின் செயல்கள் (a) மரணம், பட்டயம், பஞ்சம் மற்றும் சிறையிருப்பு (எரேமியா 15:2) (b) வெட்டுவதற்கு பட்டயம், இழுப்பதற்கு நாய்கள், ஆகாயத்து பறவைகள், அழிப்பதற்கு பூமியின் மிருகங்கள் (எரேமியா 15:3) (c) பஞ்சத்திலிருந்தும், பட்டயத்தின் வல்லமையிலிருந்தும், கொள்ளை நோயினால் மரணத்தை சந்திப்பதிலிருந்து குழந்தைகளை விடிவிப்பு மற்றும் பட்டயத்தினால் வெட்டப்பட்ட வாலிப மனுஷர். (d) பஞ்சம் காட்டு மிருகங்கள்,கொள்ளை நோய் மற்றும் பட்டயம் (எசேக் 5:17மற்றும் 14:21)

(3) நான்கு மிருகங்கள் கடலிலிருந்து வெளியே வந்தது. கழுகின் சிறகுகளை கொண்டு ஒரு சிங்கம், மூன்று விலா எலும்புகளை பற்களின் நடுவில் கொண்ட கரடி, 4 தலைகள் மற்றும் 4 சிறகுகளை கொண்ட சிறுத்தை மற்றும் கெடியும் பயங்கரமான பத்து கொம்புகள் கொண்ட கெடியான ஒரு மிருகம். (தானி 7:3-7)

(4) நான்கு முத்திரைகள் மற்றும் நான்கு குதிரைகள் வெள்ளை குதிரை, சிவப்பு குதிரை, கருப்பு குதிரை மற்றும் பழுப்பு நிற குதிரை (வெளி 6:1-8)

**மகா சேனை மற்றும் அது யோசபாத்தின் பள்ளத்தாக்கில் இறங்குதல்:**

கோகுமாகோகின் ஒழுக்கமுள்ள வடதிசையின் சேனை அத்திசையிலிருந்து வந்து இஸ்ரயேலையும் எருசலேமையும் கிட்டத்தட்ட அழித்து போட்டார். அதற்கு பதிலாக தேவனால் அவர்கள் அழியும் போது இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில், வட திசையின் திரளான சேனையின் நிறைவேற்றம். யோயேல் 2:1-ம் வசனத்தில் இருப்பதை போல தோன்றுகிறது.

இந்த யோசபாத்தின் பள்ளத்தாக்கை, எருசலேம் மற்றும் எபிரோனுக்கு இடையில் உள்ள (தெற்கை நோக்கி) பெராக்கா பள்ளத்தாக்கு என்றும் மற்றும் எருசலேமுக்கும், ஒலிவ மலைக்கும் இடையில் உள்ள (கிழக்கை நோக்கி) கிதரோன் பள்ளத்தாக்காக இருக்கக்கூடும் என்று சில

விமர்சகர்கள் கருதுகிறார்கள். யோவேல் 2:2-11 வசனங்கள் இந்த சேனையை ஒரு “அது இருளும் அந்தகாரமுமான நாள்; அது மப்பும் மந்தாரமுமான நாள்: விடியற்கால வெளுப்பு பர்வதங்களின் மேல் பரவுகிறது போல ஏராளமான பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து பரவும்; அப்படிப்பட்டது முன் ஒரு காலத்திலும் உண்டானது மில்லை, இனித் தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்களிலும் உண்டவாதுமில்லை.” (2 வசனம்) என்றும் மற்றும் “கர்த்தர் தமது சேனைக்குமுன் சத்தமிடுவார்; அவருடைய பாளயம் மகா பெரிது, அவருடைய வார்த்தையின்படி செய்கிறதற்கு வல்லமையுள்ளது; கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச் சகிக்கிறவன் யார்?” (13) என்றும் விவரிக்கிறது. எருசலேமுக்கு எதிராக தேசங்கள் ஒன்று கூடுவதை பற்றி சகரியா 14:2-ம் வசனம் விவரிக்கிறது. ஒரு வேளை இந்த மகா பெரிய சேனை தேடக்கூடிய கொள்ளை பொருள் - உணவு அல்லது எண்ணை போன்றவைகளாக இருக்கக்கூடும்.“நான் கொள்ளையிடவும் சூறையாடவும், மதில்களில்லாமல் கிடக்கிற கிராமங்களுள்ள தேசத்துக்கு விரோதமாய்ப் போவேன்; நிர்விசாரமாய் சுகத்தோடே குடியிருக்கிறவர்களின் மேல் வருவேன்; அவர்கள் எல்லாரும் மதில்களில்லாமல் குடியிருக்கிறார்கள்; அவர்களுக்குத் தாழ்ப்பாளும் இல்லை, கதவுகளும் இல்லை என்பாய்.” (எசேக் 38:12)

பாவமுள்ள யூதா ஜாதியின் மேல் தண்டனையை செலுத்த பாபிலோன் வந்தது போல, (கிமு 607-கிமு 587) கோகு மற்றும் மாகோகின் சேனைகள் இந்த யுகத்தின் முடிவில் இஸ்ரயேலை நோக்கி அவர்ளை தாக்க வருவார்கள். ஒருவேளை, தேவன் அவர்களுக்கு கொடுக்கயிருக்கும் திரும்ப கொடுத்தலின் காரியங்களை குறித்து அறிவில் இவர்கள் குறைவுள்ளவர்களாக இருப்பதினாலோ இந்த தாக்குதல் நடைபெறலாம். அதற்கு பின் பாபிலோன், மேதோ-பெர்சிய சாம்ராஜ்யத்தினால் வீழ்த்தப்பட்டது போல, இஸ்ரயேலை தாக்கின அந்த திரளான அநீதியுள்ள சேனையை கர்த்தர் அழித்து போடுவார்.

## யுகத்தின் முடிவில் இஸ்ரயேலில் எஞ்சியுள்ள விசுவாசிகள்:

தன்னிடத்தில் விசுவாசமுள்ளவர்களை, தாழ்மையாக இருக்கும்படிக்கு கர்த்தர், யோவேல் 2:15-14-ம் வசனங்களில் அறிவுறுத்துகிறார். ஒருவேளை அவர் திரும்பி மனஸ்தாபப்பட்டு, உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் போஜனபலிகளையும் பானபலிகளையும் செலுத்துகிறதற்கான ஆசீர்வாதத்தை தந்தருளுவார். சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள்; முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டுப் புறப்படுவார்களாக கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது: கர்த்தாவே, நீர் உமது ஜனத்தைத் தப்பவிட்டுப் புறஜாதிகள் அவர்களைப் பழிக்கும் நிந்தைக்கு உமது சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும்; உங்கள் தேவன் எங்கே என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக.

யூதாவில் எஞ்சியுள்ள விசுவாசிகள் கர்த்தருடைய அறிவுறுத்தலுக்கு செவிகொடுத்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு செவி கொடுத்தார், அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங்கொண்டு, தமது ஜனத்தைக் கடாச்சிப்பார். (18) வடதிசைச் சேனையை உங்களுக்குத் தூரமாக விலக்கி, அதின் முன்தண்டு கீழ்க்கடலுக்கும் அதின் பின் தண்டு மேற்கடலுக்கும் நேராக அதை வறட்சியும் பாழுமான தேசத்துக்குத் துரத்திவிடுவேன்; அங்கே அதின் நாற்றம் எழும்பி, அதின் துர்க்கந்தம் வீசும்; அது பெரிய காரியங்களைச் செய்தது.(20) என்று கர்த்தர் ஆணையிடுகிறார். யூதாவையும், எருசலேமையும் சிறைபிடிக்கும் போது பாபிலோனின் சேனை தோல்வி அடையாததால், கோகு மற்றும் மாகோகின் வல்லமைகள் அற்புதவிதமாக தோல்வி அடையும் என்பதை 20-ம் வசனம் குறிப்பிடுகிறது.

சூரியனும், சந்திரனும் அந்தகாரப்படும் என்று யோயேல் 20:30-32 மற்றும் 3:14-15 வசனங்கள் விவரிக்கிறது. ஒருவேளை பூமி அதிர்ச்சி மற்றும் எரிமலை வெடிப்பு மீதியுள்ள விசுவாசிகளை தப்புவிக்கவும் படையெடுத்து வந்த வல்லமையை தோற்கடிக்கவும் உதவியிருக்கலாம். (சகரி 14:4-5)

இந்த வசனங்கள் சகரியா 14:12-13-ம் வசனங்களுக்கு இணையாக தோன்றுகிறது. யோசபாத்தின் எதிரிகள் ஒருவரோடு ஒருவர், யுத்தம் செய்து அழித்து கொள்ளும் போது, இதற்கு ஒப்பாக இருக்கும். 2 நாளா 20ம் அதிகாரத்தில் மோவாபியர்கள், அம்மோனியர்கள், மற்றும் மியூநைட்ஸ் (சேயீர் மலையில் குடியிருப்பவர்கள்) களின் கூட்டமைப்பை “இதற்குப்பின்பு மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், அவர்களோடே அம்மோனியருக்கு அப்புறத்திலுள்ள மனுஷருங்கூட

யோசபாத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்தார்கள். சிலர் வந்து, யோசபாத்தை நோக்கி: உமக்கு விரோதமாய் ஏராளமான ஜனங்கள் கடலுக்கு அக்கரையிலிருக்கிற சீரியாவிலிருந்து வருகிறார்கள்; இதோ, அவர்கள் எங்கேதியாகிய ஆசாசோன் தாமாரில் இருக்கிறார்கள் என்று அறிவித்தார்கள்." (2நாளா 20:1-2) என்று வசனம் விவரிக்கப்படுகிறது. இராஜாவாகிய யோசபாத் கர்த்தரின் பேரில் யூதேயா முழுவதும் உபவாசம் இருக்கும்படி அறிவித்தார். கர்த்தரிடத்தில் உதவி தேடும்படிக்கு அனைவரையும் கூட்டிச் சேர்த்தார். அவர்கள் அமைதியாக நின்று தங்கள் எதிரிகள் மேல் ஜெயம் கொள்வதை பார்க்கும்படி சொல்லப்பட்டது. அம்மோனியரும் மோவாபியரும், சேயீர் மலைக்கு எதிராக எழும்பினார்கள். சேயீரில் குடியிருப்பவர்களை அழித்தபின் ஒருவரை ஒருவர் அழித்து கொள்வார்கள். அதற்குபின், அவர்களை மூன்று நாட்கள் யூதா கொள்ளை அடித்தார்கள். சுவிசேஷ யுகத்தின் முடிவில் படையெடுத்துவரும் சேனை தேவனால் திரும்ப கட்டுவதற்கு இஸ்ரயேலினால் பயன்படுத்தப்படும். (ஏசா 2:4)

யோவேல் 2-ம் அதிகாரத்தின் பின் பகுதி (21-29 வசனம்) மற்றும் 3ம் அதிகாரம் (17-21 வசனங்கள்) இரண்டுமே எருசலேமின் மேல் அதிகாரம் பெற்று இஸ்ரயேலுக்கு மீண்டும் கிருபையின் காலம் திரும்பி தேசம் மீண்டும் வளமாக மாறுவதை பற்றியும், விவரிக்கிறது. "களங்கள் தானியத்தினால் நிரம்பும்; ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்." (யோவேல் 2:24)

"அக்காலத்தில் பர்வதங்கள் திராட்சரசத்தைப் பொழியும், மலைகள் பாலாய் ஓடும், யூதாவின் ஆறுகள் எல்லாம் பிரவாகித்து ஓடும், ஒரு ஊற்று கர்த்தருடைய ஆலயத்திலிருந்து புறப்பட்டு சித்தீம் என்னும் பள்ளத்தாக்கை நீர்ப்பாய்ச்சலாக்கும்." (யோயேல் 2:18) திராட்சை ரசம் உபதேசத்தையும், பால், தேவனுடைய உபதேசங்களின் துவக்க நிலையான கட்டளைகளையும் மற்றும் ஓடுகிற தண்ணீர் மற்றும் நீருற்று, சத்தியத்தையும் ஜீவனையும் அடையாளப்படுத்தும். இதே காரியத்தை வெளி 22:1-ல் காணலாம். "பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான்."

யோவேல் 3:19-ம் (எகிப்து பாழாக்கப்படும், மற்றும் ஏதோம் பாழான வனாந்திரமாக்கப்படும்) வசனத்திற்கு ஆவிக்குரிய மற்றும் சொல்லர்த்தமான பயன்பாடுகள் உண்டு என்று ஒரு விளக்கவுரையாளர் கருதுகிறார். எகிப்து உலகத்தின் மனுக்குலத்தையும், ஏதோம், கிறிஸ்துவ மண்டலத்தையும் குறிக்கும். ஏதோம் (தென் ஜோர்தான்) பாழான வனாந்திரமாக இருக்கும். இது கிறிஸ்துவ மண்டலத்தின் நித்தியமான அழிவை அடையாளப்படுத்தும். இதற்கு எதிரிடையாக மழையின் குறைவினால், அவர்கள் எருசலேமுக்கு சென்று இஸ்ரயேலை கனப்படுத்தி கர்த்தரை தரிசிக்கும் வரையில் எகிப்து ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் பாழாயிருக்கும். (சகரியா 14:17-19) எகிப்து மனுக்குலத்தை அடையாளப்படுத்துகிறது. இதில் சிலர் கர்த்தரையும், இஸ்ரயேலையும் கனப்படுத்தும் வரையில் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

**முடிவுரை:**

யோவேலின் புத்தகம் மப்பும் மந்தாரத்தையும், பஞ்சம், அழிவு, சிறையெடுப்பு போன்றவைகளை முழுமையாக விவரித்தாலும், இஸ்ரயேலில் எஞ்சியுள்ள விசுவாசமுள்ளவர்களை மீட்பத்தோடு இந்த புத்தகம் நிறைவு பெறுகிறது. இதை தொடர்ந்து, தேவனுடைய பூமிக்குரிய இராஜ்யம், எருசலேமில் மையப்படுத்த இஸ்ரயேலில் ஏராளமான தண்ணீரும் உணவும் காணப்படும். ஆவிக்குரிய ரீதியிலும் சரீர ரீதியிலும் இஸ்ரயேலின் பரிபூரண வளர்ச்சி திரும்ப கொடுத்தல் ஆசீர்வாதத்தின் துவக்கமாக இருக்கும். இதன் விளைவாக எஞ்சியுள்ள மனுக்குலத்திற்கு இந்த ஆசீர்வாதங்கள் தொடரும்.

# நான் ஒரு மந்தைக்குரியவர் (மேய்ப்பன்)



**"இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்களைக்குறித்து நான் புலம்பிச் சொல்லும் இந்த வசனத்தைக் கேளுங்கள்." (ஆமோஸ் 5:1)**

**Michael Costelli**

ஆமோஸ் தேவனுடைய தீர்க்கதரிசியாக இருந்தார். பொதுவாக அவர் எழுதிய வார்த்தைகளின் எண்ணிக்கையை வைத்தும், அவருடைய முக்கியத்துவம் இல்லாத செய்திகளினாலும் இவர் சிறிய தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறார். அவர் ஓசியா, மீகா, ஏசாயா மற்றும் யோனா தீர்க்கதரிசிகள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். 2ம் யெரொபெயாம் ஆட்சி செய்த காலத்தில் கிமு 760-755, மிக சுறுசுறுப்பாக செயல்பட்டார். அவர் கிமு 745-ல் மரித்ததாக கூறப்படுகிறது.

ஆமோஸ் என்பதற்கு "பாரமான" அல்லது "பாரம் சுமத்துகிற" என்று பொருள். (Strong,s H5986, 6006) வரக்கூடிய தேவனுடைய நியாயத்தீர்ப்பை குறித்து எச்சரிப்பதே ஆமோஸின் பாரமாக இருந்தது. "ஆமோஸ் அமத்சியாவுக்குப் பிரதியுத்தரமாக: நான் தீர்க்கதரிசியுமல்ல, தீர்க்கதரிசியின் புத்திரனுமல்ல ; நான் மந்தை மேய்க்கிறவனும், காட்டத்திப்பழுங்களைப் பொறுக்கு கிறவனுமாயிருந்தேன். ஆனால் மந்தையின் பின்னாலே போகிறபோது என்னைக் கர்த்தர் அழைத்து, நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு என்று கர்த்தர் உரைத்தார்."(ஆமோஸ் 7:14-15) அப்போது ஆமோஸ் ஒரு மேய்ப்பனாக இருந்தார். யேகோவா தேவன் இஸ்ரயேலுக்கு மட்டும் அல்ல, அனைத்து ஜனங்களுக்கும் **அவரே தேவன்** என்று அறிவிக்கக்கூடிய தனித்துவமான தீர்க்கதரிசியாக இருந்தார். ஒன்று மற்றும் இரண்டாம் அதிகாரத்தில் இஸ்ரயேலின் அண்டை புறஜாதி தேசங்களுக்கு தேவனுடைய விசேஷித்த நியாயத்தீர்ப்பை அவர் மூலமாக அறிவிக்கப்பட்டது. இவர்களின் பாவங்கள் இவர்களுக்கு எதிராக தீர்க்கதரிசினம் சொல்லும்படி ஆமோசுக்கு கட்டளை கொடுத்த தேவனுடைய கவனத்திலிருந்து தப்பிக்கவில்லை. "அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது. தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே." (ரோமர் 3:2) இதற்கு பின்னாலே ஆமோஸின் கவனம் இஸ்ரயேலின் குறைபாடுகளின் மேல் திரும்பியது.

**பின்னணி:**

ஆமோஸ் பெத்லெகேமில் தெற்கே கிட்டத்தட்ட ஆறு மைல்கள் தூரத்தில்உள்ள யூதேயா மலைகளில், தெக்கோவா என்ற கிராமத்திலிருந்து வந்தவர். இவர் ஒரு ஆட்டு மேய்ப்பனாகவும், அத்தி மரங்களின் பராமரிப்பாளராகவும் இருந்தார். (ஆமோஸ் 7:14) இஸ்ரயேலுக்கு ஊழியம் செய்யும்படிக்கு தேவன் அவரை வடக்கிற்கு அனுப்பினார். இயல்பாகவே, ஆமோசுக்கு கொஞ்சம் பயிற்சியிருந்தாலும், அவர் நாவல்லமையில் ஆற்றல் மிக்கவராக இருந்தார். அவருடைய வாழ்க்கை மற்றும் குடும்பங்கள் பற்றி அதிகமான தகவல்கள் இல்லை. அவர் எத்தனை வருஷம் வாழ்ந்தார் என்றும் தெரியாது. ஆனால் அவருடைய செய்திகள், இஸ்ரயேலின் இராஜ்யத்தின் பத்து கோத்திரங்களின் விக்கிரகாராதனை மற்றும் அவர்களின் பாவங்கள் பற்றி இருந்ததை நாம் அறிவோம். தேவன் பெத்தேலை பார்வையிட்டு தவறான ஆராதனைகளின் முடிவை அடையாளப்படுத்தும்படிக்கு பொன் கன்றுகுட்டியை ஆராதிப்பதற்கு பயன்படுத்தின பலிபீடங்கள் கொம்புகளை வெட்டுவார் என்று ஆமோஸ் 3:14-ம் வசனங்களில் ஆமோஸ் கூறுகிறார்.

அந்நேரத்தில் யெரொபெயாம் 2 இஸ்ரயேலின் ராஜாவாகவும் (கிமு 782-கிமு 773) மற்றும் உசியா யூதாவின் இராஜாவாகவும் (கிமு 767- கிமு 740) ஆட்சி செய்து வந்தனர். இராஜாவாகிய சாலமோன் ஆட்சி செய்த காலத்தை காட்டிலும் யெரொபெயாம் தன்னுடைய நாட்களில் இஸ்ரயேலின் எல்லைகளை விரிவுப்படுத்தினதால் இந்த வெற்றியின் நிமித்தம் அவன் பெருமை கொண்டான். "நாங்கள் எங்கள் பலத்தினாலே எங்களுக்குக்கொம்புகளை உண்டாக்கிக் கொள்ள வில்லையோ என்று சொல்லி, வீண் காரியத்தில் மகிழுகிறார்கள். " (ஆமோ 6:13) தேசம் விரிவாக்கப்பட்டதின் நிமித்தம் ஜாதிகள் ஐசுவரியமாகி, உயர்த்தப்படுவதற்கு தேவைப்படும் தொழில் சம்மந்தமான வழிகள், முழுமையாக இஸ்ரயேலின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இந்த வாழ்வு வளமிக்க மற்றும் சமாதானத்தின் காலமானது, இஸ்ரயேலை மிகுந்த பாவத்திற்குள்ளும், விக்கிரகாராதனையிலும் சமுதாய அநீதியிலும் மற்றும் ஒழுக்க கேட்டிற்கும் அதிகமாக வழி நடத்தியது. இந்நிலையை 14ம் வசனத்தில் தீர்க்கதரிசி விவரிக்கிறார். "இஸ்ரவேல் வம்சத்தாரே, இதோ, நான் ஒரு ஜாதியை உங்களுக்கு

விரோதமாக எழுப்புவேன்; அவர்கள் ஆமாத்துக்குள் பிரவேசிக்கிற வழி தொடங்கிச் சமனான நாட்டின் ஆறுமட்டாக உங்களை ஒடுக்குவார்கள் என்று சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்." (ஆமோ 6:14)

"பூமி அதிர்ச்சி ஏற்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்" (ஆமோஸ் 1:1) தேவனிடத்திலிருந்து, கட்டளையுள்ள தரிசனத்தை பெற்றார். இந்த சொற்கள் எஸ்றாவினால் புகுத்தப்பட்டதென்று சில வேத வல்லுநர்களும் யூத சட்டத்தை தொகுத்தவர்களும் நம்புகிறார்கள். இங்கு குறிப்பிடப்பட்ட பூமி அதிர்ச்சி, கிபி 760-வில் நடந்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது. சகரியா 14:5-ல் இதே செய்தி குறிப்பிடப்படுகிறது. இதில் எருசலேமுக்கு எதிராக **அனைத்து ஜாதிகளையும்** தேவன் கூட்டி சேர்ப்பார் என்று இஸ்ரயேலுக்கு ஒரு எச்சரிப்பின் செய்தி இருந்தது.

### ஆமோஸ் புத்தகத்தின் மேலோட்டமான பார்வை:

ஆமோஸின் புத்தகம் மூன்று முக்கிய பகுதிகளாக பிரிக்கப்படலாம். மற்ற தேசங்களுக்கு, கர்த்தருடைய தண்டனையை பற்றி முதல் இரண்டு அதிகாரங்கள் பேசுகிறது. அருகாமையில் உள்ள தமஸ்கு, காசா, தீரு, ஏதோம், அம்மோன் மற்றும் மோவாபோடு அவர் துவங்குகிறார். போர்களும் வன்முறைகளுமே அவர்களின் குற்றங்களாக இருந்தன. அதற்கு பின் அந்த தீர்க்கதரிசி வீட்டிற்கு நெருங்கி செல்கிறார். யூதா தென் திசையின் ஜனங்கள், கர்த்தருடைய பிரமாணத்தை புறக் கணித்ததினாலும், அவருடைய கட்டளைகளை காத்து கொள்ளாததினாலும், (ஆமோ2:4) தண்டிக்கப்படுவார்கள். இறுதியாக, அவர் இப்போது பேசி கொண்டிருக்கும் இஸ்ரயேல் பிரஜைகளின் சுற்று வந்தது. இங்கு ஆமோஸின் கோபம் உச்சக்கட்டத்திற்கு எழும்பியது. இவர்களின் பாவங்கள் தெளிவாகவும், குறிப்பிடத்தக்கதாக வரிசைப்படுத்தப்பட்டது. இவைகள் பக்தியற்றதும், ஒழுக்க கேடுள்ளதும், எல்லாவற்றிற்கும் மேலாக, உணர்ச்சியற்ற தன்மை கொண்டவர்களும் தங்களுடைய சக மனுஷரிடம் மனுஷத் தன்மையற்றவர்களாக, "அவர்கள் நீதிமானைப் பணத்திற்கும், எளியவனை ஒரு ஜோடு பாதரட்சைக்கும் விற்றுப் போட்டவர்களே." (ஆமோ 2:6)

அடுத்து வரும் மூன்று அதிகாரங்கள், எச்சரிப்புகளாக உள்ளது. "இந்த வார்த்தையை கேளுங்கள்." என்று வார்த்தைகளோடு ஒவ்வொரு எச்சரிப்பும் துவங்குகிறது. எஞ்சியுள்ள அதிகாரங்களில் நியாயத்தீர்ப்பின் அச்சுறுத்தல்கள் உறுதியான அடையாளங்களினால் சுட்டிகாட்டப்படுகிறது. பேரழிவை ஏற்படுத்தும் வெட்டுக்கிளிகள், அனைத்தையும் அழிக்கும் அக்கினி, கட்டுநரின் தூக்கு நூல், கோடை காலத்து பழங்களின் கூடை மற்றும் நொருக்கப்பட்ட பரிசுத்த ஸ்தலம்

அவர் அழிவை குறித்து உறைத்த தீர்க்கதரிசனத்திற்கு பின் ஒரு புதிய துவக்கத்தின் நம்பிக்கைக் கூறிய வாய்ப்பை இந்த புத்தகத்தின் கடைசி சில வசனங்களில் ஆமோஸ் கூறுகிறார். "இதோ கர்த்தராகிய ஆண்டவரின் கண்கள் பாவமுள்ள ராஜ்யத்துக்கு விரோதமாக வைக்கப்பட்டிருக்கிறது; அதைப் பூமியின்மேல் இராதபடிக்கு அழித்துப்போடுவேன்; ஆகிலும் அழிக்கமாட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஆமோஸ் 9:8) "ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக் கொள்ளும்படிக்கு," (ஆமோஸ் 9:11)

### ஆமோஸின் எச்சரிப்புகள்:

பாவமுள்ள நடக்கைக்கு எதிராக கடிந்துரைகள் வரக்கூடிய நியாயத்தீர்ப்பு மற்றும் நம்பிக்கை, தீர்க்கதரிசனமான வார்த்தைகளில் உள்ள எச்சரிப்புகள், ஆமோஸின் செய்தியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. செல்வாக்கற்றவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் ஆமோஸ் மிகுந்த இரக்கம் காட்டினார்.(ஆமோஸ் 9:9-11) மற்ற தீர்க்கதரிசிகள், தங்களுடைய செய்திகளில் இரட்சிப்பைப்பற்றியும் மறுசீரமைப்பை குறித்தும் ஆங்காங்கே கூறியுள்ளார்கள். ஆனால் இப்படிப்பட்ட துயராற்றுதலுக்கு இறுதியான ஐந்து வசங்களை மட்டுமே ஆமோஸ் தீர்க்கதரிசி பயன்படுத்துகிறார். பலவீனமானவர்கள் தங்களை ஒடுக்கின உறுதியாக வல்லமைக்கு எதிராக வருவார்கள் என்ற நம்பிக்கையை அவர் குறிப்பிடுகிறார். பாஸ்டர் ரசல் தன்னுடைய மறுபதிப்புகளில் (R 3425) விவரிப்பது போல, இது முடிவு கால தீர்க்கதரிசனம் போல தோன்றுகிறது.

நமது நாளின் அனுகூலங்களை சட்டப்பூர்வமாக செய்யும் போது, ஒரே நேரத்தில் நியாயமானதாக இருக்கும் சட்டங்களின் கீழ் ஒரு பெரும் துன்பத்தை உண்டாக்குவதற்கு வெளிப் படையாகவே பிணைக்கப் பட்டுள்ளது. உலகின் சக்தி மற்றும் நீதி கட்டுப்பாட்டை ஒப்பிட்டளவில் ஒரு சிலருக்கு கையில் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த சில ராட்சதர்கள் இவ்வெல்லாவற்றையும் அவற்றின் தேவைகள் மற்றும் ஒப்பந்தங்களிலில் மிதமாக இருக்கின்றனர். ஆனால், விருப்பத்தோடோ, விருப்பமில்லாமலோ, மனுக்குலத்தின் மீது பெறும் துயரங்களைக் கொண்டு வருவதைப் பொறுத்தவரை அது மிக நீண்டதாக இருக்காது என்று வேத வசனங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இந்த

நிலைப்பாட்டில் இருந்து கிறிஸ்தவ மண்டலத்தை பற்றி தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளின் மூலம் நன்கு புரிந்து கொள்ள முடியும். ஆனால் அந்த பதிவு மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்கள் ஆமோஸையோ அல்லது வேறு எவரையோ செவி சாய்க்க முடியாது என்று நாம் உறுதியாக நம்பலாம். ஆகையால், தேவ வசனங்கள் எல்லா இடங்களிலும் சுட்டிக் காட்டப்படுவதை எதிர் நோக்க வேண்டும். கிறிஸ்தவ மண்டலத்தின் வீழ்ச்சி திடீரென்று வரும், சிக்கலின் நேரத்தில் அது மாதிரி ஒரு நாடு இல்லாதது போல் இருக்கும். இந்த காலத்தில் பெலிஸ்தர், ஓரியோன் ஆகியோரை உருவாக்கிய தேவன் வலிமை வாய்ந்தவர்களுக்கு எதிராக கெட்டுப்போகப்பண்ணுவார். அதனால் கெட்டுப்போகிறவர்கள் அராஜகத்தின் வலுவான ஜனங்களுக்கு எதிராக எழுவார்கள். வசனம் 9

அக்காலத்தில் இஸ்ரயேலின் மனம் திரும்புதலையும் புறஜாதிகள் உட்பட மனுக்குலத்தின் மேல் கர்த்தரின் ஆசீர்வாதத்தை பற்றி ஆமோஸின் தீர்க்கதரிசனத்தின் முடிவு கூறுகிறது. எருசலேமில் நடந்த ஆலோசனை சங்கத்தில், அப்போஸ்தலனாகிய யாக்கோபு இந்த தீர்க்கதரிசனத்தை குறித்தே பேசினார். “எப்படியெனில், மற்ற மனுஷரும், என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும், கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப் பின்பு திரும்பி வந்து, விழுந்து போன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன் என்று இவைகளை யெல்லாஞ்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது.” (அப் 15:16,17) இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறக்கூடிய காலத்தில் தான், நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த பூமியில் தேவனுடைய இராஜ்யம் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும் போது மாம்ச இஸ்ரயேலின் திரும்ப கொடுத்தலின் காரியங்கள் நிறைவேற்றப் போகிறது. உண்மையில் மிகப்பெரிய தாவீதினால் நிஜமான இராஜ்யம் ஸ்தாபிக்கப்படவிருக்க நேசிக்கப்பட்ட இராஜாவாகிய தாவீதின் காலத்தில், நிழலான இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த இராஜ்யத்தின் கீழ், பரலோக அரசு இன்றும் சாதகமான சூழ்நிலைகளின் இராஜ்யத்தை மறுபடியும் ஸ்தாபிக்கும். இந்த பூமி முழுவதும் கர்த்தரை அறிகிற அறிவினால் நிரப்பப்படும் படியாக மீதியுள்ள மனுக்குலம், கர்த்தரை தேடக்கூடிய ஒரு வாய்ப்பை பெறுவார்கள்.

**இஸ்ரயேலின் குறைபாடுகள்:**

ஆமோஸ் தீர்க்கதரிசி இஸ்ரயேலை திட்டும் படிக்கு, அதில் அநேக செயல்கள் நடந்து கொண்டிருந்தது. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் சட்டரீதியான ஒழுங்குமுறைகளை, சமுதாய ரீதியாகவும், படுமோசமான வன்முறை செயல்களை அவர் சுட்டிகாட்டினார். நீதியுள்ள ஜனங்களை தண்டிப்பதற்கு இஸ்ரயேலின் நியாயாதிபதிகள் பரிதானம் வாங்கினர்கள். (ஆமோஸ் 2:6-8) “வருஷத்தில் மூன்று தரம் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையிலும், வாரங்களின் பண்டிகையிலும், கூடாரப்பண்டிகையிலும், உன் ஆண்மக்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்திலே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்படக்கடவர்கள். நியாயத்தைப் புரட்டாதிருப்பாயாக ; முகதாட்சிணியம் பண்ணாமலும், பரிதானம் வாங்காமலும் இருப்பாயாக ; பரிதானம் ஞானிகளின் கண்களைக் குருடாக்கி, நியாயங்களைத் தாறுமாறாக்கும்.” (உபா 17:16,19) சட்டத்திற்கு அத்துமீறி செயல்பட்டார்கள். 7ம் வசனத்தில் ஒரு தகப்பனும், மகனும் ஒரே ஸ்திரீயினிடம் பிரவேசித்ததை குறித்து ஆமோஸ் அவர்களை வன்மையாக கடிந்து கொள்கிறார். ஒருவேளை இது விக்கிரகங்களை வழிபடும் ஆலய ஆராதனையில் இந்த விபச்சாரம் நடந்திருக்க வேண்டும். அவர்கள் செய்த அதிகபட்சமான குற்றம் என்னவெனில், அவர்கள் மனம் அறிந்து,“தேவனுடைய பரிசுத்த நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள்.”

தரித்திரர்களையும், எளியவர்களையும் இஸ்ரயேலர்கள் மோசமாக நடத்தின காரியங்கள் ஆமோஸ்: 4:1-ம் வசனத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. “சமாரியாவின் மலைகளிலுள்ள பாசானின் மாடுகளே, நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்; தரித்திரரை ஒடுக்கி, எளியவர்களை நொறுக்கி, அவர்களுடைய எஜமான்களை நோக்கி: நாங்கள் குடிக்கும் படிக்கு கொண்டு வாருங்கள் என்று சொல்லுகிறீர்கள்.” அவர் இஸ்ரயேலர்களை பொதுவாக சமாரிய மலையில் திரியும் கொழுத்து, ஒழுக்கம் கெட்ட மாடுகளுக்கு ஒப்பிட்டு பேசுகிறார். அவர்களின் சிந்தை மற்றும் மனதில் உள்ளபடி தங்களுடைய மாம்சத்திலும் போதை (வெளி) ஊட்டும்படிக்கு, மதுவை கொண்டு வரும்படி சொல்லி, தங்களுடைய செயல்களை கொண்டாடுகிறார்கள். தேவனுடைய எச்சரிப்பு 2-ம் வசனத்தில் வருகிறது. “இதோ, கர்த்தராகிய ஆண்டவர் உங்களைத் துறடுகளாலும், உங்கள் பின் சந்ததியை மீன்பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துக்கொண்டுபோகும் நாட்கள் வருமென்று அவர் நம்முடைய பரிசுத்தத்தைக்கொண்டு ஆணையிட்டார்.” (ஆமோஸ் 4:2)

இதன் விளைவாக தேவன் இஸ்ரயேலர்களை அசீரியர்களின் கையில் ஒப்புவித்த போது இஸ்ரயேலின்

நீதி அமைப்பை “எட்டியின்” குளத்திற்கு ஆமோஸ் ஒப்பிடுகிறார். “நியாயத்தை எட்டியாக மாற்றி, நீதியைத் தரையிலே விழப்பண்ணுகிறவர்களே, அவரைத் தேடுங்கள்.” (ஆமோஸ் 5:7) நீதி மதுரமாயும், அநீதி எட்டியைப் போல கசப்பாகவும் இருக்கிறது. போப் மார்க்கம் சத்தியத்தை தரையில் விழப்பண்ணுவான் என்று இதற்கு பிந்தி தானியேல் தீர்க்கதரிசனம் உரைத்தது போல சொல்லர்த்தமாக இஸ்ரயேலர்கள் “நீதியை” தரையில் விழப்பண்ணினார்கள். (தானி 8:12)

தேவனை தேடும்படிக்கு ஆமோஸ் இஸ்ரயேலுக்கு ஆலோசனை கூறுகிறார். “அவர் அறுமீனையும் மிருகசீரிஷத்தையும் உண்டாக்கினார்; அவர் மரண இருளை விடியற்காலமாக மாற்றி, பகலை இராத்திரியாக அந்தகாரப்படுத்துகிறவர்; அவர் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரவழைத்து, அவைகளை பூமியின் விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம். அரணான ஸ்தலத்தின் மேல் பாழ் கடிப்பு வரத்தக்கதாக, அவர் கொள்ளை கொடுத்தவனைப் பலத்தவனுக்கு விரோதமாய் லகுவடையப்பண்ணுகிறவர். ஒலிமுக வாசலிலே கடிந்து கொள்ளுகிறவனை அவர்கள் பகைத்து, யதார்த்தமாய்ப் பேசுகிறவனை வெறுக்கிறார்கள்.” (ஆமோஸ் 5:8,9,10)

இஸ்ரயேலுக்கு “கள்ளி” என்ற பட்டைபெயர் கொடுக்கப்பட்டிருந்த காலத்தை ஆமோஸ் ஐந்தாம் அதிகாரத்தில் உற்று நோக்குகிறார். மேலும் அந்த அதிகாரத்தில் அவள் முந்திய நாட்களில் பெற்றிருந்த மகிமையை எடுத்துரைக்கிறார். ஆனால் ஐயோ, அவள் விழுந்தாள் “இனி அவள் எழுந்திருக்கமாட்டாள்” (பிரிந்து போன பத்து கோத்திரங்களின் இராஜ்யம் போல) வருங்கால இஸ்ரயேலை பற்றி முன்னறிவிக்கப்பட்டது. ஆயினும் ஆமோஸ் 9:11-ம் வசனத்தின்படி ஆயிரவருட ஆட்சியில் வருங்காலத்தில் அவள் எழுந்திருப்பாள் என்ற நம்பிக்கை கொடுக்கப்படுகிறது.

தன்னை தேடும் படிக்கும் கீழ்படிதலின் பலனால் வாழும் படிக்கும் இஸ்ரயேலரிடம் ஆண்டவர் மன்றாடுகிறார். தேவன் வானங்களையும் ஆகாய விரிவையும் சிருஷ்டித்தவர் என்று தன்னுடைய மகிமை மற்றும் நிலையைக் குறித்து விவரிக்கிறார். சந்தேகத்திற்கு இடமின்றி, ஒரு மேய்ப்பனாக இருந்த ஆமோஸ் வழக்கமாக இவைகளை தெளிவான இரவு நேரங்களில் கண்டிருக்க வேண்டும். (சங் 19:1)

ஐசுவரியமுள்ளவர்கள் நல்ல வசதிகளில் வாழ்ந்திருக்கும் போது எளியவர்களின் மேல் வரி சுமத்தினதற்காக இஸ்ரயேல் கடிந்து கொள்ளப்படுகிறது. எளியவர்களை புறக்கணிப்பதே, பொதுவாக இஸ்ரயேலின் குறைபாடாக இருந்தது. நித்தமும் நடைபெறும் வணிகத் தொடர்புகளில் தம்முடைய இனத்தாரிடம் அவர்களின் அநியாயம், தேவனுக்கு கடும் கோபம் உண்டாக்கியது. “நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்; அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார். (14) நீங்கள் தீமையை வெறுத்து, நன்மையை விரும்பி, ஒலிமுகவாசலில் நியாயத்தை நிலைப்படுத்துங்கள்; ஒருவேளை சேனைகளின் தேவனாகிய கர்த்தர் யோசேப்பிலே மீதியானவர்களுக்கு இரங்குவார்.” (ஆமோஸ் 5:14-15) என்று அவர்களிடம் தேவன் கூறினார்.

ஐந்தாம் அதிகாரத்தில் 18-ம் வசனத்தில் “கர்த்தருடைய நாள்” என்பதே தலைப்பானது. வழக்கமாக இஸ்ரயேலின் மனநிலைக்கு ஒரு கேள்வி வைக்கப்படுகிறது. கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! அதினால் உங்களுக்கு என்ன உண்டு? “கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும்.” (18) இப்படிப்பட்ட ஒரு கேள்வியை கேட்பதற்கு தூண்டியது என்ன? தங்களுடைய எல்லா எதிரிகளின் மேலும் வெற்றி அடையக்கூடிய நாளை இஸ்ரயேல் எதிர்நோக்கினார்களா அல்லது விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களை ஒரு சொப்பனத்தைப்போல கண்டு கொண்டிருந்தார்களா? அவர்களின் உள்ளத்தின் நோக்கங்களையும் பொருட்படுத்தாமல், கர்த்தருடைய நாள் கடுந்துயரம் நிறைந்ததாக இருக்கும்என்று யேகோவா தேவன் உரைக்கிறார். கர்த்தருடைய நாளை குறித்து அவர்களின் தவறான எதிர்பார்ப்பை பற்றிய தேவனுடைய வெளிப்படுத்துதல், அவர்களுக்கு அதிர்ச்சியாக இருந்திருக்கும். ஒருவேளை ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு நாம் வாழக்கூடிய முடிவு காலங்களை குறித்து அறிவிப்பதற்கும் ஆமோஸ் இந்த செய்தியை கொடுத்திருக்கலாம்.

இஸ்ரயேலரின் ஆவிக்குரிய போலி நடிப்பு (பாசாங்கு) க்காக தேவன் அவர்களை ஒழுங்கமைக்கிறார். நியாயப்பிரமாண உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் மத ரீதியான நடைமுறைகள், அவர்களின் பழக்கங்களை அவர் உறுதியாக மறுக்கிறார். “உங்கள் பண்டிகைகளை பகைத்து வெறுக்கிறேன்; உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை.(21) உங்கள் தகனபலிகளையும் , போஜனபலிகளையும் எனக்குப் படைத்தாலும் நான்அங்கீகரிக்கமாட்டேன்; கொழுமையான உங்கள் மிருகங்களின் ஸ்தோத்திர பலிகளையும் நான் நோக்கிப்

பார்க்கமாட்டேன். உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று; உன் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன்." (5:21-23) இஸ்ரயேலர்கள் ஒப்புக்காக தேவனை ஆராதித்தார்களே, தவிர கர்த்தரின் பணியில் தங்களுடைய இருதயங்களையும், மனங்களையும் அதற்கு ஏற்றவாறு மாற்றி கொள்ளவில்லை.

**முக்கியத்துவம் வாய்ந்த வசனங்கள்:**

**ஆமோஸ் 3:2** ஆமோஸின் செய்திகளில் சில அறிவிப்புகள் தனித்து நிற்கிறது. "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களை தண்டிப்பேன்." (ஆமோஸ் 3:2) சில விசேஷித்த ஒழுங்கின் செயல்பாடுகளுக்காக தேவனுடைய ஒரு உள்ளார்ந்த ஞானம் இஸ்ரயேலை பிரித்ததை பற்றி 12 கோத்திரங்களுக்கு அவர் ஒரு எச்சரிப்பை கூறுகிறார். (Yada - herbew - Strongs (H3045) Yada என்ற இந்த எபிரேய வார்த்தை "அறிந்து கொண்டேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மேலும் இதே எபிரெய வார்த்தை தன்னுடைய தாயின் வயிற்றிலிருக்கும் போதே தீர்க்கதரிசியாகிய எரேமியாவின் தேவ அன்பை விவரிக்கிறது. (எரேமி 1:5) ஆட்டுக்குட்டியானவரை பின்பற்றக்கூடிய நாம் நம்முடைய வாழ்க்கைகளை திரும்பி பார்த்து தேவனுடைய கரம் சுத்திகரிப்பின் வேலையின் வழியாக நம்மை உடன்படிக்கை செய்வதற்கு எவ்வாறு வழிநடத்தினதென்று உணர்ந்து தேவனுடைய இந்த அறிவிப்புகளை நாம் இருதயத்தில் ஏற்று கொள்ளலாம்.

**ஆமோஸ் 3:7** கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார் என்று ஆமோஸ் 3:7-ம் வசனம் கூறுகிறது. தேவன் ஆபிரகாமோடும் (ஆதி 18:17) தாவீதோடும் மற்றும் இயேசுவின் அப்போஸ்தலர்கள் மற்றும் அவருடைய சீஷர்களோடும் (யோவான் 15:15 மற்றும் யோவான் 17:25,26) கொண்டிருந்த செயல் தொடர்பில் இந்த கட்டளை எடுத்துகாட்டப்பட்டுள்ளது. நாம் மேம்படக்கூறிய நல்லொழுக்கமுள்ள போதனைகளை நாம் பெறுவதற்கு, நாம் சத்தியத்தையும், வரக்கூடிய தீர்க்கதரிசன நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கு தேவன் எவ்வளவு விருப்பமுள்ளவராக இருக்கிறார் என்று இந்த வசனங்கள் எடுத்துகாட்டுகிறது. எப்போதும் அச்சுறுத்தும் நியாயத்தீர்ப்புகளை குறித்து தேவன் முன்னதாகவே எச்சரித்திருந்தாலும், உகந்த கீழ்படிதலினாலும் விரும்பி செய்யக்கூடிய ஊழியத்தினாலும் அவருக்கு நெருக்க மானவர்களுக்காக அவருடைய "இரகசியங்களை" ஒதுக்கி வைத்திருக்கிறார்.

"உங்கள் பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்." (1கொலோ 26-28)

*"பூமியின் குடிகளே, நீங்கள் எல்லாரும் தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்."*

*(சங் 66:1)*

# ஏதோமின் தண்டனை



Joe Megacz

**"கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்; ஏதோம் யூதா வம்சத்தாரிடத்தில் குரோதந்தீர்த்து, பழிவாங்கி, பெரிய குற்றஞ்செய்தபடியினால், கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்: நான் ஏதோம் தேசத்துக்கு விரோதமாக என் கையை நீட்டி அதில் மனுஷரையும் மிருகங்களையும் இராதபடிக்குச் சங்காரம்பண்ணி, அதைத் தேமான் துவக்கித் தேதான் மட்டும் வனாந்தரமாக்குவேன்; பட்டயத்தால் விழுவார்கள். (எசேக் 25:12-13)**

ஒபதியாவை பற்றி மிக குறைவான காரியங்கள் காணப்படுகிறது. மிகச் சிறிய புத்தகமாகிய இதில் பழைய ஏற்பாட்டில் ஏதோமின் பாரம் மற்றும் இஸ்ரயேலின் திரும்ப கொடுத்தலைப் பற்றிய தரிசனங்கள் கொண்டுள்ளது. அவருடைய வார்த்தைகளும், சிந்தனைகளும், வேதாகமத்தின் மற்ற அசீரியர்கள் எரேமியா மற்றும் வெளிப்படுத்தின யோவானால் மீண்டும் மீண்டும் பதிவு செய்திருப்பதினால், அவரது செய்தி தெளிவாக இல்லை. ஒபதியாவின் புத்தகம் 21 வசனங்களை கொண்டுள்ளது. இஸ்ரயேலர்கள் மற்ற எதிராளிகளினால் தாக்கப்பட்டபோது ஏதோமியர்கள் செய்த துர்கிரியைகளினிமித்தம் அவர்கள் மேல் வந்த தேவனுடைய தண்டனையை பற்றி முதல் 16 வசனங்கள் விவரிக்கிறது. இஸ்ரயேலை தாக்கின வர்களோடு ஏதோமியர்கள் சேர்ந்து கொண்டு, எருசலேமை கொள்ளையிட்டு, தப்பிபோகும் யூதர்களாகிய தங்களுடைய உறவினர்களுக்கு உதவி செய்வதற்கு பதிலாக, அவர்கள் தப்பி ஓடுவதை தடுத்தார்கள்.

அடுத்த ஐந்து வசனங்கள், யாக்கோபின் வீட்டின் மேல் வரும் தேவனுடைய ஆசீர்வாதங்களை விவரிக்கிறது. சிறையிருப்பிலிருந்து விடுதலை, தங்களுடைய தேசம் திரும்புதல், எதிரிகளை ஜெயங்கொள்ளுதல், சீயோன் மலையை பரிசுத்தமாக்குதல்.

இந்த தீர்க்கதரிசனத்தை ஒபதியா எழுதின காலத்தை குறித்து, வேத வரலாற்று அசீரியர்கள் இரண்டு பிரிவுகளாக காண்கிறார்கள். ஒபதியாவினால் குறிப்படப்பட்ட இஸ்ரயேலின் தாக்குதல், கிமு 606-ல் நேபுகாத்நேச்சாரின் படையெடுப்பு என்று ஒரு வகுப்பினர் என்று கூறுகிறார்கள். ஆகவே ஒபதியா அவருடைய தீர்க்கதரிசனத்தை ஏறக்குறைய கிமு 606 வருடத்தின் அருகில் எழுதியிருக்க வேண்டும். எரேமியா ஒபதியாவின் வார்த்தைகளை கோடிட்டு காட்டுகிறார் என்று மற்ற வகுப்பார் குறிப்பிடுகிறார்கள். கிமு 606-க்கு சற்று பின் எரேமியாவின் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டதினாலே ஒபதியா எரேமியாவுக்கு முன்னதாகவே தீர்க்கதரிசனம் உரைத்திருக்க வேண்டும். 2 நாளா 21:16,17-ம் வசனங்களில் பதிவு செய்யப்பட்ட பெலிஸ்தியர்கள் மற்றும் அரபியர்களின் தாக்குதல்களை ஒபதியா விவரித்திருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள்.

ஒபதியாவின் எழுத்துக்கள் ஏறக்குறைய நேபுகாத்நேச்சாரின் தாக்குதலுக்கு 300 வருடங்களுக்கு முன், அதாவது கிட்டத்தட்ட கிமு 900-ல் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. (ஆசிரியர் குறிப்பு: இந்த 12 தீர்க்கதரிசிகளும் கால கணக்கு சார்ந்த வரிசையில் இருப்பதாக உறுதி செய்யப்படுகிறது. ஒபதியா ஆமோஸ்க்கு பின்னும், யோனா, மீகாவுக்கு முன்னும் வாழ்ந்தவர். ஆகவே ஒபதியா கிமு 765 நெருங்கி தீர்க்கதரினம் உரைத்திருக்க வேண்டும்.)

ஒபதியாவின் உறுதியற்ற சுருக்கமான விவரங்களில், தாக்குதலைப் பற்றி இது கிமு 606-ல் நடந்த நேபுகாத்நேச்சாரின் தாக்கல் அல்லது வேறு தாக்குதல் என்று சொல்வதற்கு கடினமாக உள்ளது. ஆனால்இதற்கு சில சிறிய ஆதாரங்கள் உள்ளன. ஒபதியாவின் தீர்க்கதரிசனத்தில் உள்ள அடையாளமான அம்சங்களின் விளக்கவுரை நமக்கு சில ஆதாரங்களை கொடுத்து உதவுகிறது.

ஏதோம் தேசம், யூதாவின் இராஜ்யத்தின் இரண்டு கோத்திரங்களுக்கு தெற்கிலும், சவக்கடல் மற்றும் சிவந்த சமுத்திரத்திற்கு இடையிலும் அமைந்துள்ளது. பண்டைய ஏதோமின் மேற்கில் பாதி பகுதி, நவீன கால இஸ்ரயேலில் உள்ளடக்குகிறது. கிழக்கில் உள்ள பாதி பகுதி, நவீன கால யோர்தானில் உள்ளது. ஏதோமின் தலைநகரம் போஜ்ரா.

1-9 வசனங்கள் ஆதோமின் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பையும், தண்டனையையும் கூறுகிறது. இங்கு ஏதோமை பற்றி பேசப்படுகிறது. ஆகவே நீ உன் என்ற வார்த்தைகள் ஏதோமை குறிப்பிடுகிறது என்று நாம் நினைவில் வைக்க வேண்டும். ஏதோம் எதற்காக தண்டிக்கப்பட வேண்டும் என்று அடுத்து வரும் ஏழு வசனங்கள் கூறுகிறது.

**வரலாற்று பின்னணி:**

தங்களுடைய சகோதரர்களாகிய இஸ்ரயேலர்களுக்கு (உங்கள் சகோதரன் யாக்கோபு) எதிராக, ஏதோமியர்கள் செய்த வன்முறை செயலுக்காக ஒபதியா அவர்களை 10-ம் வசனத்தில் கடிந்து கொள்கிறார். சுவிகார புத்திர பாகத்தை யாக்கோபுக்கு விற்று போட்ட பின், ஏசாவுக்கு ஏதோம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. (ஆதி

25:30) யாக்கோபுக்கும், ஏசாயாவுக்கும் உள்ள பகை அவர்களுடைய பிள்ளைகளின், பிள்ளைகளுக்கும் தொடர்ந்து ஒபதியாவின் காலம் வரையில் ஒரு ஆயிர வருடங்களாக தொடர்ந்தது.

எருசலேமின் ஒரு பக்கத்தில் ஏதோமும், மற்றொரு பக்கத்தில் எதிராளிகள் வந்தார்கள் "நீ எதிர்த்து நின்ற நாளிலும், அந்நியர் அவன் சேனையைச் சிறைபிடித்துப் போன நாளிலும், மறு தேசத்தார் அவன் வாசல்களுக்குள் பிரவேசித்து எருசலேமின் பேரில் சீட்டுப் போட்ட காலத்தில் நீயும் அவர்களில் ஒருவனைப் போல் இருந்தாய்."(ஒபதியா 1:111) என்று கூறுகிறது. ஏதோம் எருசலேமின் தென் திசையிலும் தாக்குதல் வடதிசையிலிருந்து வந்ததாக குறிப்பிடுகிறது. 14-ம் வசனம் இக்கருத்தை ஆதரிக்கிறது. "அவர்களில் தப்பினவர்களைச் சங்கரிக்கும்படி வழிச்சந்திகளிலே நிற்காமலும், இக்கட்டு நாளில் அவர்களில் மீதியானவர்களைக் காட்டிக் கொடாமலும் இருக்க வேண்டியதாயிருந்தது." (ஒபதியா 1:14)

தங்களுடைய எதிராளிகளிடமிருந்து தப்பித்து கொள்ள தென் திசையை நோக்க யூதர்கள் ஓடும் போது வடதிசையில் உள்ள ஏதோமியர்கள் அவர்களின் தப்பிக்கக்கூடிய பாதையை தடுத்தார்கள். உதவி செய்வதற்கு பதிலாக அவர்கள் ஒளிந்திருந்த இடத்திலிருந்து அவர்களை வேட்டையாடி எதிராளிகளின் கைகளில் ஒப்பு கொடுத்தார்கள். தாக்கியவர்களோ நேபுகாத்நேச்சாரின் கீழுள்ள பாபிலோனியர்களாக இருக்கக்கூடும். ஏனென்றால் அவர்கள் வடக்கே இருந்து வந்திருப்பார்கள், அதே சமயத்தில் பெலிஸ்தியர்களும் அரேபியர்களும் மேற்கு மற்றும் தெற்கிலிருந்து தாக்கியிருக்க வேண்டும். ஏதோம் எதிரிகளின் எதிரிக்கு எதிராகவும், தப்பி ஓடும் இஸ்ரயேலர்கள் தடை செய்வதைப் பற்றியும் வசனம் 10 மற்றும் 14 கூறுகிறது.

இந்த பாபிலோனியர்கள் இக்காலத்தில் உள்ள துருக்கி மலைகளின் வடதிசையின் கறைகளை தொடர்ந்து ஐபிராத் நதியின் வந்து அதற்கு பின் தென் திசையின் மத்திய தரைகடலின் ஓரமாக வந்து வடதிசையிலிருந்து இஸ்ரயேலர்களை தாக்கியிருக்க வேண்டும். இந்த ஏதோமியர்கள், பாபிலோனியரோடு சேர்ந்து கொள்ளை அடித்து ஆயிர வருட பகையை பழித்தீர்த்தார்கள். இந்த ஏதோமியர்கள் சந்தர்ப்பவாதிகளாக இருந்தார்கள். பாபிலோனியர்கள் தங்களுக்கு எதிராக திரும்புவார்கள் என்று ஏதோமியர்கள் எதிர்ப்பார்க்கவில்லை.

**ஏதோமின் மேல் நியாயத்தீர்ப்பு:**

முதலில் பாபிலோனியர்கள் இஸ்ரயேலர்களுக்கு விரோதமாக ஏதோமியர்களோடு ஒப்பந்தத்தை வர வேற்றார்கள். அதற்குபின் அவர்கள் ஏதோமியர்களையும் சிறைபிடித்தார்கள். "ஒபதியாவின் தரிசனம்: கர்த்தராகிய ஆண்டவர் ஏதோமைக் குறித்துச் சொல்லுகிறது என்னவென்றால்: எழும்புங்கள், அதற்கு விரோதமாக யுத்தம்பண்ண எழும்புவோம் வாருங்கள் என்று அறிவிக்க ஸ்தானாபதி ஜாதிகளிடத்தில் அனுப்பப்படும் செய்தியைக கர்த்தர் சொல்லக்கேட்டோம். உன்னோடு உடன்படிக்கை செய்த எல்லா மனுஷரும் உன்னை எல்லைமட்டும் துரத்திவிட்டார்கள். உன்னோடு சமாதானமாயிருந்த மனுஷர் உன்னை மோசம்போக்கி, உன்னை மேற்கொண்டார்கள்; உன் அப்பத்தைச் சாப்பிட்டவர்கள் உனக்குக் கீழே கண்ணிவைத்தார்கள். அவனுக்கு உணர்வில்லை." (ஒபதியா 1:1,7) எல்லாம் முடிந்தது. கைப்பற்றுதல் நிறைவடைந்தது. "நீ எவ்வளவாய் சங்கரிப்பட்டுப் போனாய்! திருடராகிலும் இராத்திரியில் கொள்ளையடிக்கிறவர்களாகிலும் உன்னிடத்தில் வந்தால், தங்களுக்குப் போதுமானமட்டும் திருடுவார்கள் அல்லவோ? திராட்சப்பழங்களை அறுக்கிறவர்கள் உன்னிடத்தில் வந்தால், சில பழங்களை விட்டுவிடுவார்கள் அல்லவோ?" (ஒபதியா 1:5) திருடர்களுக்கு ஏதோமை கொள்ளை அடிக்க எளிதாக இருந்திருக்கும். திருடர்கள் தங்களால் சுமக்க முடிந்தவரையில், எடுத்து கொண்டு மீதியை விட்டு சென்றிருப்பார்கள். அதேபோல, அறுவடை வேலையாட்கள் திராட்சை பழங்களை எடுத்து கொண்டு மீதியுள்ள சில திராட்ச பழங்களை விட்டு செல்வார்கள். அல்லது பின் பறிப்புக்காக விட்டு விடுவார்கள். ஆனால் பாபிலோனியர்கள் ஏதோமில் எதையும் விட்டு வைக்கவில்லை. நாம் 8 மற்றும் 9-ம் வசனங்களில் வாசிக்கிறபடி வசனம் 3 மற்றும் 4-ல் ஏதோம் நித்தியமாக அறுப்புண்டு போனது. இஸ்ரயேலுக்கு எதிராக பாபிலோனோடு துணை நின்ற ஏதோமின் நம்பிக்கை துரோகத்திற்கு சரியான கைமாறு செய்யப்பட்டது. இந்த பாபிலோன் ஏதோமுக்கு எதிராக திரும்பி அவர்களை வென்று சிறைபிடித்தார்கள். 15-ம் வசனத்தின் கடைசி பகுதியை பார்க்கவும் .

**அடையாளமான பயன்பாடு:**

ஒபதியா 1 மற்றும் 2ம் வசனம், வெளிப்படுத்தல் "அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள்." (17:4) 16ம் அதிகாரத்தை நினைப்பூட்டுகிறது. இங்கு அந்த ஸ்திரீ போப் மார்க்கத்தையும், மிருகம் கிபி 539 கிபி 1799 வரையில் சபையோடு இணைந்திருந்த தேசங்களை 16-ம் வசனம் அடையாளப்படுத்துகிறது. இன்றும் வருங்காலத்தில் நடக்கக்கூடிய சம்பவத்தை விவரிக்கிறது. அப்போது மிருகத்தின் பத்து கொம்புகள் கிறிஸ்துவ மண்டலத்தின்

பத்து பிரிவுகளை அடையாளப்படுத்தும். கிறிஸ்துவ தேசங்கள் என்று அழைக்கப்படும் ஜனங்கள் பெயர் சபை அமைப்புகளுக்கு எதிராக அழிக்ககூடிய கடுங் கோபத்துடன் எழும்புவார்கள். வெளி 18:7,8-ம் வசனங்களில் காணப்படும் அதே நடையை ஒபதியா 3-6 வசனங்களில் விவரிக்கப்படுவதை நாம் காணலாம்...

ஒபதியா 8 மற்றும் 9ம்வசனங்களில் ஏதோமின் மூப்பர்களின் திகிலைப் பற்றி பேசக்கூடியவைகள் "அவளுடனே வேசித்தனஞ்செய்து செல்வச்செருக்காய் வாழ்ந்த பூமியின் ராஜாக்களும் அவள் வேகிறதினால் உண்டான புகையைக் காணும்போது அவளுக்காக அழுது புலம்பி, அவளுக்கு உண்டான வாதையினால் பயந்து, தூரத்திலே நின்று: ஐயையோ! பாபிலோன், மகா நகரமே! பலமான பட்டணமே! ஒரே நாழிகையில் உனக்கு ஆக்கினை வந்ததே! என்பார்கள். பூமியின் வர்த்தகர்களும் தங்கள் தங்கள் சரக்குகளாகிய பொன்னையும், வெள்ளியையும், இரத்தினங்களையும் முத்துக்களையும், சல்லாவையும், இரத்தாம்பரத்தையும், பட்டாடைகளையும், சிவப்பாடைகளையும்" வெளி 18:9-11 வசனத்திற்கு இணையாக உள்ளது.

மாம்ச இஸ்ரயேலுக்கு விரோதமாக ஏதோமியர்கள் நடத்திட்ட பழிவாங்குதலை ஒபதியா 10-14 வசனங்கள் பேசுகிறது என்று நாம் முன்னதாகவே பார்த்தோம். இதற்கு இணையான பல வசனங்கள் வெளிப்படுத்துதலில் காணப்படுகிறது. இதில் உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள், வேசி, விலைமகள், பாபிலோன் அல்லது பெயரளவில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களால் உபத்திரவப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. இந்த வசனங்களில் வெளி 18:24 "தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் பரிசுத்தவான்களுடைய இரத்தமும் பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது என்று விளம்பினான்." (வெளி 18:24)

ஒபதியா 15 மற்றும் 16 வசனங்கள் தீர்க்கதரிசியின் தரிசனத்தின் முதல் பகுதியின் கடைசி இரண்டு வசனங்கள் ஆகும். இது ஏதோமின் பாரத்தைக் குறித்து பேசுகிறது. இவைகளின் இணை வெளி 18:3,6-ம் வசனங்களில் காணப்படுகிறது. அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்; பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம் பண்ணினார்கள்; பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச் செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான் களானார்கள் என்று விளம்பினான். அவள் உங்களுக்குப் பலனளித்தது போல நீங்களும் அவளுக்குப் பலனளியுங்கள்; அவளுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவளுக்கு இரட்டிப்பாகக் கொடுத்துத் தீருங்கள்; அவள் உங்களுக்குக் கலந்து கொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்கு கலந்து கொடுங்கள்." ஒபதியாவின் அறிக்கையில் ஏதோம் மற்றும் ஏதோமுக்கு எதிராக எழும்பிய புறஜாதியார், வெற்றி அக்களிப்பின் வெளியூட்டும் மதுபானத்தை குடித்து கிமு 606-ல் தேவனுடைய சொல்லர்த்தமான மலை எருசலேம் நகரத்தை கீழ்படுத்தினார். இதற்கு இணையான வெளிப்படுத்தல் 18-ம் அதிகாரத்தில் பெயர் சபைகளும், ஆட்சி செய்யும் அரசாங்கமும் வேசித்தனத்தின் மதுபானத்தை குடித்து உண்மையான சபையின் மேல் கொண்ட தற்காலிகமான வெற்றியை அடையாளமான தேவனுடைய பரிசுத்த பர்வத்தின் மேல் கொண்டாடுகிறார்கள். கொஞ்சகாலம் சபை மற்றும் அரசாங்கம், ஒரு அசுத்தமான ஐக்கியத்தில் இணைந்து மதுபானம் அருந்துகிறார்கள். ஆனால் முடிவிலே ஒபதியா 16-ம் வசனம் குறிப்பிடுகிறபடி "நீங்கள் என் பரிசுத்த பர்வதத்தின் மேல் மதுபானம் பண்ணினபடியே" அரசாங்கங்கள் தனிமையில் பெயர் சபைகளின் இடத்தில் மதுபானம் அருந்துவார்கள். கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது தேசங்களும் நிலைகுலையும் போது அவர்கள் அதற்கு பின் (16-ம் வசனத்தில் சபை அமைப்புகள் அழிக்கப்பட்டபின் உள்ள புறஜாதியார்) "நீங்கள் என் பரிசுத்த பர்வதத்தின்மேல் மதுபானம்பண்ணினபடியே எல்லா ஜாதிகளும் எப்பொழுதும் மதுபானம்பண்ணுவார்கள்; அவர்கள் குடித்து விழுங்குவார்கள், இராதவர்களைப்போல் இருப்பார்கள்." (ஒபதியா 1:16) இணையான பகுதி வெளி 18:15-21-ம் வசனங்களில் காண்கிறோம். ஏதோமின் பாரத்தைக்குறித்த ஒபதியாவின் தரிசனங்கள் மற்றும் பாபிலோனின் அழிவைக் குறித்து யோவான் கண்ட வெளிப்படுத்துதலின் சாட்சிகளில் உள்ள இணைகளும், ஒற்றுமைகளும் கவர்ந்து பற்றுகிறதாக உள்ளது.

### ஒரு முரண்பாடான தோற்றமா?

ஒபதியாவில் சொல்லப்பட்ட சொல்லர்த்தமான சம்பவங்களின் பயன்பாட்டில் ஒரு முரண்பாடான காரியம் தோன்றுகிறது. சொல்லர்த்தமான ஏதோம், சொல்லர்த்தமான பாபிலோனால் (கிமு 606-ற்கு பின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சரால்) தாக்கப்பட்டு அழிக்கப்பட்டிருந்தால் மற்றும் சொல்லர்த்தமான ஏதோம் அடையாளமான பாபிலோனை சுட்டிகாண்பித்தால், நேபுகாத்நேச்சாருக்கு கீழ் செயல்பட்ட சொல்லர்த்தமான பாபிலோன் யாரை அடையாளப்படுத்தும்? பாபிலோனை தாக்கமுடியுமா?

ஒபதியாவில் பாபிலோனின் என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை ; ஆகவே உண்மையில் இதில் எந்த விதமான முரண்பாடும் இல்லை. ஆயினும் பாபிலோனுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட அர்த்தங்களை வேத நூலில் பயன்படுத்தப்படுகிறது. கத்தோலிக்க சபை அல்லது

கத்தோலிக்க மற்றும் புரோட்டஸ்டன்ட்டு சபைகளின் கூடுகையையும் பாபிலோன் என்ற பெயரால் அடையாளப்படுத்துவதை போல சில நேரங்களில் பாபிலோனுக்கு ஒரு குறுகிய குறிப்பிட்ட அர்த்தம் உள்ளது. சில நேரங்களில் கத்தோலிக்க மற்றும் புரோட்டஸ்டண்டு சபைகளை மட்டும் அல்ல தேசங்களையும் அரசியல் அமைப்புகளையும் பாபிலோன் என்ற பெயரால், விரிவாக அடையாளப்படுத்தப்படுகிறது.

ஒபதியாவில் வெளிப்படுத்தலில் இருப்பது போல அவர்கள் முந்தி செய்ததிற்கான கூலியாக கிறிஸ்துவ மண்டலத்தின் சமுதாய மூலத்துவங்கள் மதரீதியான ஆக்கங்களுக்கு எதிராக எழும்பக்கூடிய ஒரு சித்திரத்தை காணலாம். ஒபதியாவில் ஏசா ஏதோம், யாக்கோபின் / இஸ்ரயேலின் சகோதரராக இருந்தார். இது சேஷ்டப்புத்திர பாகத்தை இக்காலத்து பூமிக்குரிய நன்மைகளுக்காக விற்று போட்ட பொய் மத கிறிஸ்தவர்களையும் அடையாளப்படுத்துகிறது. ஒபதியாவில், ஏதோமின் எந்த ஒரு மிகப்பெரிய எதிரியைப் பற்றியும் குறிப்பிடாததினால் நாம் அதை பாபிலோன் என்று கருதுகிறோம். வெளிப்படுத்துதலில் அந்த ஸ்திரீயும், மிருகமும், மதம் மற்றும் ரோமாபுரியின் அரசியல் சம்மந்தப்பட்டும் உள்ளது. பொய் கிறிஸ்தவத்திற்கு மிகப் பெரிய எதிரி வெளி 17:16-ல் "பத்து கொம்புகள்" என்று அடையாளப்படுத்தியிருக்கும் முதலில் போப் அமைப்பை ஆதரித்த அரசியலின் பெரும் பகுதியான பாபிலோன். ஏற்கனவே மேற்கு மற்றும் மத்திய ஐரோப்பாவின் இன்றைய அரசாங்கம் நாஸ்திகர்களாகும், இடது சாரிகளாகவும் இருக்கிறார்கள். எனவே ரோமின் போப் மார்க்கத்திற்கு எதிராக இருக்கிறார்கள்.

**திரும்பகொடுத்தல்:**

"ஆனாலும் சீயோன் பர்வதத்திலே தப்பியிருப்பார் உண்டு, அவர்கள் பரிசுத்தமாயிருப்பார்கள்; யாக்கோபின் வம்சத்தார் தங்களுடைய சுதந்தரங்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். யாக்கோபு வம்சத்தார் அக்கினியும், யோசேப்பு வம்சத்தார் அக்கினி ஜுவாலையுமாயிருப்பார்கள்; ஏசா வம்சத்தாரோ வைக்கோல் துரும்பாயிருப்பார்கள்; அவர்கள் இவர்களைக் கொளுத்தி, ஏசாவின் வம்சத்தில் மீதியிராதபடி இவர்களைப் பட்சிப்பார்கள்; கர்த்தர் இதைச் சொன்னார். தென் தேசத்தார் ஏசாவின் மலையையும், சமனான தேசத்தார் பெலிஸ்தரின் தேசத்தையும் சுதந்தரித்துக் கொள்வார்கள்; பென்யமீன் மனுஷர் கீலேயாத்தையும் சுதந்தரித்துக் கொள்வார்கள். சர்பாத் மட்டும் கானானியருக்குள்ளே சிறைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரராகிய இந்தச் சேனையும், சேப்பாராத்தில் சிறைப்பட்டுப்போன எருசலேம் நகரத்தாரும் தென் திசைப்பட்டணங்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். ஏசாவின் பர்வதத்தை நியாயத்தீர்ப்பதற்காக இரட்சகர்கள் சீயோன் பர்வதத்தில் வந்தேறுவார்கள்; அப்பொழுது ராஜ்யம் கர்த்தருடையதாய் இருக்கும்." (ஒபதி 1:17;21)

17ம் வசனத்தில் யாக்கோபு தனக்கு சொந்தமான வீட்டிற்க்கு திரும்பக்கூடியதை பற்றிய தீர்க்தரிசனத்திற்கு, கிமு 536-ம் வருடத்தில் பெர்சியனாகிய கோரேஸ், நேபுகாத்நேச்சாரால் சிறைபிடிக்கப்பட்ட யூதர்களை தங்களுடைய தேசத்திற்கு திரும்பி அனுப்பக்கூடிய கட்டளையை கொடுத்தபோது சொல்லர்த்தமான ஒரு நிறைவேற்றம் நிகழ்ந்தது. இஸ்ரயேலர்கள் வீடு திரும்பும் போது சொல்லர்த்தமான ஏதோமியர்களை பழி தீர்த்து கொண்ட காரியமானது, மேற்கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தின் சொல்லர்த்தமான நிறைவேற்றமாக இருக்கலாம். பாபிலோனின் தாக்குதலில் அநேகரை வெட்டி வீழ்த்தி, தப்பியிருந்த வெகு ஏதோமியர்களுக்கு எதிராக யூதாஸ் மக்கபீஸ் எவ்வாறு தன்னுடைய சேனைகளை நடத்தினார் என்று வரலாற்று ஆசிரியர் ஜோசபஸ் எழுதுகிறார். யூதர்களை சேவிக்கும்படியாக, ஏதோமியர்கள் அடிமைகளாக சிறைபிடித்து செல்லப்பட்டார்கள் என்று "apocryphal" புத்தகங்களின் முதல் மற்றும் இரண்டாம் மக்க பேரிலும் காணப்படுகிறது.

இஸ்ரயேல் தேசம் மீண்டும் பெறப்படும் என்று 19-ம் வசனம் விவரிக்கிறது. ஏசா அல்லது ஏதோம் தென் திசையின் எல்லை பெலிஸ்தியர்கள் மேற்கில் இருந்தனர். இப்போது காசா பகுதியாக இருக்கும் இடமாகும். எப்பிராயீமை காட்டிலும் வடதிசையில் கோத்திரங்கள் இருந்தாலும் எபிராயீம் எருசலேமுக்கு வடக்கில் இருந்தது. கீலேயாத் கிழக்கிலும், யோர்தான் நதியின் கிழக்கு கறையிலும் இருந்தது. ஒபதியா விவரிக்கும் இஸ்ரயேலின் பெரும்பாலான பகுதிகள், அதன் கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும் இன்னும் அதிகமான பகுதிகளையும் மற்றும் வீடு திரும்பும் யூதர்கள் தேசத்தில் சேர்க்கப்படுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

எருசலேமின் சிறையிருப்பை குறிப்பிடுவதோடு 20-ம் வசனம் மேற்கோள் காட்டுகிறது. இது Sepharad உள்ளது.Sepharad -ன் இட அமைப்பை பொருத்தவரையில் வேத விரித்துரைப்பவர் பல்வேறு விளக்கங்களை கொடுக்கிறார்கள். சிலர் Sepharad-ஐ பற்றிய ஸ்பானியா மற்றும் பிரான்ஸ் என்றும் சிலர் தூரத்தில் மேற்கு திசையில் உள்ள ஐபிராத்திற்கு அருகில் உள்ள பாபிலோனில் ஒரு பகுதி என்றும் சொல்லுகிறார்கள். சிறைபிடிக்கப்பட்டவர்கள் எங்கிருந்தாலும் சரி கிழக்கிலோ, மேற்கிலோ அவர்கள் திரும்புவார்கள் என்று இந்த உறுதியற்ற குறிப்பு ஒருவேளை பொருள்படுத்தலாம் யூதர்கள் தங்களுடைய தேசத்திற்கு திரும்புவதற்கு தேவன் எல்லா தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றங்களை இனி காண வேண்டியதாக உள்ளது.

இந்த அனைத்து தீர்க்கதரிசனங்களும் நிறைவேறும் போது யாக்கோபின் உபத்திரவத்தின் முழுமையான எல்லை, கூட்டி சேர்க்கப்பட்ட இஸ்ரயேல் மேல் வரும், அதை தொடர்ந்து 21-ம் வசனத்தில் விவரித்தபடி கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்.

**பூமிக்குரிய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல்:**

ஒபதியாவின் இறுதி ஐந்து வசனங்களின் அடையாள செயல்பாட்டில், சீயோன் மலை தேவனுடைய இராஜ்யத்தின் பரலோக பகுதியை அடையாளப் படுத்துகிறது. இராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படும்போது, கிறிஸ்துவின் மூலமாக பாவத்திலிருந்து, மீட்பு, விடுதலை மற்றும் உயிர்த்தெழுதலின் வல்லமை-இவ்வனைத்தும் சீயோன் மலையிலிருந்து பூமியின் குடிகளின் மேல் வழங்கப்படும். மேசியாவின் ஆளுகையின் கீழ் அங்கு பரிசுத்தமும் நீதியும் உண்டாயிருக்கும்.

பரிசுத்தமுள்ள இராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படுவதற்கு முன், இக்காலத்து தீமையான உலகத்தின் பழைய ஒழுங்குகளின் கடைசியாக இருக்கும் மீதியானவைகள் முற்றிலுமாக அகற்றப்படவேண்டும் என்று 18-ம் வசனம் கூறுகிறது. ஒருவேளை 18-ம் வசனத்தில் குறிப்பிடப்படும், யாக்கோபின் வீடு திரும்பக் கூட்டி சேர்க்கப்பட்ட இஸ்ரயேலையும் யோசேப்பின் வீடு முற்பிதாக்களின் உயிர்த்தெழுதலையும் அடையாளப் படுத்தும் இவர்கள் தங்களுடைய சகல ஜாதிகளையும் எருசலேமிடம் திருப்பி எல்லாவிதமான கலகத்தையும் ஒழித்து புதிய இராஜ்யத்தின் ஒழுங்கை ஏற்படுத்தும் துவக்க வேலைகளை இவர்கள் செய்வதினாலும் இப்படியாக குறிப்பிடப்பட்டிருக்கலாம். இவர்களின் மேல் நிறைவு பெற்றபின், என்பதற்கு கிறிஸ்தவ மண்டலத்தின் கடைசி தடமும் இராமல் போய்விடும் என்று பொருள். ஏனெனில், இராஜ்யத்தின் எல்லைகள் உலகமெங்கும் வடக்கிலிருந்து தெற்கிலும், கிழக்கிலிருந்து மேற்கிலும் பர்வதங்கள், சமவெளிகள், வயல்கள் மற்றும் கீலேயாத் விரிவாக்கப்படும் என்று 19-ம் வசனம் அடையாளமாக கூறுகிறது. சுகமளிக்கும் பிசின் ஸ்தலம் கீலேயாத்தில் உருவாக்கப்பட்டது. உண்மையில், மனுக்குலத்தின் எல்லா பாவங்களையும் இந்த இராஜ்யம் சுகமளிக்கும் குறிப்பிடப்பட்டுள்ள தேவனுடைய முன்னால் பெலிஸ்தியர் எதிரிகளை ஏசா இராஜ்யத்தின் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவார்கள்.

20-ம் வசனம் சிறைப்பட்ட இஸ்ரயேலின் திரும்புதலை குறித்து பேசுகிறது. சொல்லர்த்தமாக, பாபிலோனியர்களால் சிறைப்படுத்தப்பட்டவர் அடையாளமாக மரணத்தின் மகா சிறையில் இருக்ககூடிய முழு மனுக்குலமும் திரும்புவார்கள். கல்லறையில் இருக்கக்கூடிய அனைவரும வெளயே வருவார்கள்.

இறுதியாக எழுதுவதற்கு ஒபதியா கண்ட காட்சிகளின் இந்த வார்த்தைகளை தனக்குள் பத்திரப்படுத்தினார். 21-ம் வசனத்தில் சொல்லப்பட்ட இரட்சகர்கள், பரலோகத்தில், சீயோன் மலையின் மீது இராஜாக்களும் ஆசாரியர்களுமாக இருக்கக்கூடிய ஆண்டவராம் இயேசுவை அவருடைய மணவாட்டியுமாம். மேலும் பழைய ஒழுங்கின்படி முந்தி ஏசாவின் மலையில் இருந்தது போல, பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள் பூமிக்குரிய இராஜ்யத்தின் காணக்கூடிய பிரதிநிதிகளாக, பூமியின் மேல் நியாயாதிபதிகளாகவும் இருப்பார்கள். இந்த முற்பிதாக்கள் ஜனங்களை நீதியின் படி நடத்தி பரிசுத்தமான பெறும்பாதையில் நடப்பதற்கு கற்பிப்பார்கள். இராஜ்யத்தை குறித்த எவ்வளவு நேர்த்தியான பாடம்!

இறுதியாக ஒபதியா என்ற பெயரில் வரும் கடைசி எழுத்து “யா” என்பதற்கு கடவுள் என்று பொருள், எபிரெய பதத்தில் “யாவே” அல்லது சுருக்கமாக “யா” என்பது கடவுளின் நாமம். ஒப-தி-யா என்பதற்கு “கடவுளின் ஊழியக்காரன்” என்று பொருள். இதற்கு எதிரிடையாக அரபு மொழியில் ஒபதியா என்பதை அப்த-உ-அல்லா அல்லது அப்துலா அல்லது அப்துல் என்று சொல்லப்படுகிறது. மத்திய கிழக்கு பகுதிகளில் இந்த பெயர் மிக பரீட்சையமானது.

ஒபதியா, உன்னதமான தேவனுடைய ஊழியக்காரன் என்று அவருடைய பெயர், அவரைக்குறித்து அறிவிக்கிறது. அதுபோல நாமும் தேவனுடைய ஊழியக்காரர்கள். ஒபதியா ஒரு தீர்க்கதரிசியும் ஒரு பிரதிநியுமாக இருந்தார். அதுபோல நாமும் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இருக்கிறோம். எருசலேம் உபத்திரவப்படுதை ஒபதியா கண்டும், பழைய ஒழுங்கில் உள்ள காரியங்களின் அழிவைப்பற்றியும் அதற்கு பின் ஸ்தாபிக்கப்படும் புதிய ஒழுங்கின் தரிசனத்தை பெற்று கொண்டார். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களாகிய நமக்கும், யுகங்களை பற்றிய தெய்வீக திட்டத்தின் காட்சி மற்றும் இப்போது நிறைவேறி கொண்டிருக்கும். தீர்க்கரிசனத்தின் மிக உறுதியான வார்த்தைகளையும் பெற்றிருக்கிறோம். வெகு சீக்கிரத்தில் பழைய ஒழுங்கின் இறுதியான அழிவு, இஸ்ரயேல் முழுமையாக கூட்டி சேர்க்கப்படுதல் மற்றும் தேவனுடைய இராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படும் போது, இந்த தீர்க்கதரிசனத்தின் உச்சக்கட்டம் நிறைவடையும்.

இராஜ்யம் கர்த்தருடையது ........என்று முடிவில் ஒபதியா கூறினார். இதுவே ஒபதியா கண்ட தரிசனம்: நாம் காணக்கூடிய தரிசனமும் இதுவே.

# தமக்கு ஆறுதலூட்டும் பகுதிக்கு வெளியே உள்ள ஒரு தீர்க்கதரிசி



**“தேவன் யூதருக்குமாத்திரமா தேவன்? புறஜாதிகளுக்கும் தேவனல்லவா? ஆம் புறஜாதிகளுக்கும் அவர் தேவன்தான். விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தினாலும், விருத்த சேதனமில்லாவர்களை விசுவாசத்தின் மூலமாயும் நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே. (ரோமர் 3:29-30)**

**Tom Gilbert**

மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம்முன்னாக கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது. (கலா 3:8)

யோனாவின் வரலாற்றில், தேவனை அறியாத ஜனங்கள் அல்லது பக்தியற்ற ஜனங்களுக்கும் தேவன் எவ்வாறு தம்முடைய இரக்கம், கிருபை மற்றும் இரட்சிப்பை கொடுத்து கொண்டும், இனிமேலும் கொடுப்பார் என்பதை குறித்து ஒருவருடைய உண்மையான வாழ்க்கையில் உள்ள செயல்முறை விளக்கம் நமக்கு கொடுக்க நினிவே பட்டணத்து ஜனங்கள் இப்படிப்பட்ட ஜனங்களாக இருந்தார்கள். இவர்கள் யோனாவின் தகவலுக்கு செவி கொடுத்த விதமாவது சுவிசேஷ யுகம் மற்றும் மேசியாவின் யுகத்தில், தேவனுடைய தெய்வீக திட்டத்தின் வேலைகளை, நிழலாக காட்டுகிறது.

யோனா என்ற பெயருக்கு “புறா” என்று பொருள். இவர் “அமித்தாயின் குமாரனும்,” கிட்டத்தட்ட நாசரேத்திலிருந்து 2 மைல் வடக்கில் செபுலோன் கோத்திரத்தின் எல்லை பட்டணத்தின் ஆட்சி பகுதியில் உள்ள காத்தேப்பேரில் பிறந்தவருமாக இருந்தார். (2 இராஜா 14;25) புறஜாதிகளின் பட்டணத்திற்கு போதிப்பதே அவரின் முதல் வேலையாக இருந்ததினால், தீர்க்கதரிசியாக பணியாற்றின யோனாவில் வேலை இயல்புக்கு மாறாக இருந்தது. அவருடைய செய்தி, வெறும் ஐந்து எபிரேய வார்த்தைகளை கொண்டதாக இருந்தது. (யோனா 3:4) பழைய ஏற்பாட்டில் அவருடைய நாமத்தை கொண்டிருக்கும் புத்தகம் மற்றும் மத் 12:39;41 லூக் 11:29;32) வசனங்களில் இயேசு அவரை பற்றி சுட்டிகாட்டும் குறிப்புகளை காட்டிலும், 2 இராஜா 14-ம் அதிகாரத்தில் நம் அவரை பற்றி அறிந்திருக்கும் அனைத்து காரியங்களையும் காணலாம்.

வட திசையின் இஸ்ரயேல் இராஜ்யத்தின் பத்து கோத்திரங்களை ஆட்சி செய்த 2ம் யெரொபெயாமின் ஆளுகையோடு யோனா தீர்க்கதரிசியின் பணி, ஆவிக்குரிய மற்றும் காலகணக்கின் ரீதியிலும் இணைக்கப்பட்டிருந்த இராஜாவாகிய 2-ம் யெரொபெயாம் கிமு 825-கிமு 784 வரை 41 வருடங்கள் ஆட்சி செய்தார்.

**வரலாற்று பின்னணி:**

2இராஜா 14:23-29 வசனங்களின்படி யெரொபெயாம் கர்த்தரின் பார்வையில் தீமையானதை செய்தான். அவன் I யெரொபெயாம் செய்த பொன் கன்று குட்டிகளை தொடர்ந்து சேவித்து விக்கிரகாராதனை செய்து வந்தான். யெரொபெயாமுக்கு தேவன் யோனாவை தீர்க்கதரிசனம் உரைக்க அனுப்பினப்படியே அவர் இஸ்ரயேலின் வடக்கு மற்றும் கிழக்கு எல்லையை மீட்க இராணுவப் பிரச்சாரங்களை ஆரம்பித்தது, தாவீது மற்றும் பகுதியாக இருந்த பிராந்தியத்தை மீண்டும் கைப்பற்றினார்.

“யூதாவின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் அமத்சியாவின் பதினைந்தாம் வருஷத்தில், இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் யெரொபெயாம் ராஜாவாகி சமாரியாவில் நாற்பத்தொரு வருஷம் அரசாண்டு, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய யெரொபெயாவின் பாவங்கள் ஒன்றையும் அவன் விட்டு விலகவில்லை. காத்தேப்பேர் ஊரானாகிய அமித்தாய் என்னும் தீர்க்கதரிசியின் குமாரன் யோனா என்னும் தம்முடைய ஊழியக்காரனைக் கொண்டு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின் படியே, அவன் ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு சமபூமியின் கடல் மட்டுமுள்ள இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச் சேர்த்துக் கொண்டான்.” (இராஜா 14:23-25) ஆயினும், இராஜாவிடம் யோனா பேசின வார்த்தைகளுக்கு நம்மிடம் பதிவுகள் இல்லை.

தேவனுடைய வழிநடத்துதலின்படி II யெரொபெயாம் செய்து, இந்த பெருமுயற்சிகளில் இராணுவ வெற்றிகளில்

மகிழ்ந்தார்கள். வடதிசை இராஜ்யத்தின் நடவடிக்கைகளில், ஒரு தீர்க்கதரிசியாக யோனா செயல்பட்ட இந்த ஒரு சம்பவம் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. தீர்க்கதரிசனமாக ஒரு எச்சரிப்பின் செய்தியை 120,000 ஜனங்களை கொண்ட அசீரிய சாம்ராஜ்யத்தின், மகா பெரிய பட்டணமாகிய நினிவேயின் புறஜாதி குடியிருப்பவர்களுக்கு அறிவித்ததேயாகும்.

**யோனாவோடு உடன் வாழ்ந்தவர்கள்:**

யோனா வாழ்ந்த காலத்தில் இஸ்ரயேல் இராஜ்யத்தின் ஜனங்கள் மற்றும் அவர்களின் தலைவர்களோடும், தேவன் தொடர்பு கொள்வதற்கு வேறு இரண்டு தீர்க்கதரிசிகள் இருந்தார்கள். இஸ்ரயேல் மற்றும் யூதாவின் மேல் வரும் தேவனுடைய நியாயத் தீர்ப்புகளையும் தண்டனைகளையும் ஓசியா அறிவித்தார்.

“யூதாதேசத்து ராஜாக்களாகிய உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் நாட்களிலும், யோவாசின் குமாரனாகிய யெஸ்ரயேலின் ராஜாவாகிய யெரொபெயாம் என்பவனின் நாட்களிலும், பெயேரியின் குமாரனாகிய ஓசியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம். (ஓசியா 1:1) இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்: தேசத்துக்குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; அதேனென்றால் தேசத்திலே உண்மையும் இல்லை, இரக்கமும் இல்லை தேவனைப்பற்றிய அறிவும் இல்லை. பொய்யாணையிட்டு, பொய்சொல்லி, கொலைசெய்து, திருடி, விபசாரம்பண்ணி, மிஞ்சி மிஞ்சிப்போகிறார்கள்; இரத்தப்பழிகளோடே இரத்தப்பழிகள் சேருகிறது.” (ஓசியா 4:1-2)

தீர்க்கதரிசியாகிய ஆமோசும் யோனாவின் காலத்தில் வாழ்ந்தவரும், இஸ்ரயேல் மற்றும் யூதாவுக்கு தேவனுடைய வார்த்தைகளை அறிவித்தவருமாக இருந்தார். “தெக்கோவா ஊர் மேய்ப்பருக்குள் இருந்த ஆமோஸ், யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களிலும் , இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாசுடைய குமாரனாகிய யெரொபெயாவின் நாட்களிலும், பூமி அதிர்ச்சி உண்டாக இரண்டு வருஷத்துக்கு முன்னே, இஸ்ரவேலைக்குறித்துத் தரிசனங்கண்டு சொன்ன வார்த்தைகள்.”(ஆமோஸ் 1:1)

இஸ்ரயேலின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள எல்லை பகுதிகளில் உள்ள ஜனங்களுக்கு எதிராக முதல் முதலில் ஆமோஸ் தீர்க்கத்தரிசியினால் நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. (ஆமோஸ் 1:3-5) யோனா தீர்க்கதரிசியினால் அறிவிக்கப்பட்டபடியும், மேலே கூறப்பட்டபடியேயும், இஸ்ரயேலின் எல்லைகளை விரிவாக்குவதற்கு இராஜாவாகிய யெரொபெயாம் ராணுவத்தினால் கீழ்ப்படுத்துவதே அவர்களின் பாவங்களின் விளைவுகளாகும். (2இராஜா 14:25)

ஆயினும் தேசத்தின் எல்லைகளை விரிவாக்கி தொடர்ந்து பொருளாதாரத்தின் செழுமைகளை ஆசீர்வாதமாக பிதாவாகிய யேகோவா தேவன் இராஜாவாகிய யெரொபெயாம் 2 மற்றும் இஸ்ரயேலின் ஜனங்களின் மேல் பொழிந்தாலும் அவர்கள் விக்கிரகாராதனையிலிருந்தும், தீமையான வழிகளிலிருந்தும் திரும்பவில்லை. தேசம் ஒழுக்கத்திலும், ஆவிக்குரிய காரியங்களிலும் பின்தங்கியே இருந்தது. இதன் விளைவாக ஆமோஸ் தீர்க்கதரிசி தேவனுடைய நியாயத்தீர்ப்பை அவர்களுக்கு அறிவித்தார். (ஆமோஸ் 2:6-7; 3:14-15)

**யோனா மேற்கொண்ட பணி:**

இந்த வரலாற்று சூழ்நிலையில் யேகோவா தேவன் ஒரு வழக்கத்திற்கு மாறான ஒரு தீர்க்கதரிசன வேலையை கொடுத்தார். இந்த காட்சியை விட்டு எதிரான திசையில் தேவனுடைய தீர்க்கதரிசியாக பணி புரிந்ததற்கும், தன்னை குறித்து அவர் சிந்திக்கும் விதத்திற்கும் அந்த வேலை அன்னியமாக இருந்தது.

தன்னுடைய தாய் நாடாகிய காத்தேப்பேரிலிருந்து 500 மைல்களுக்கு மேல் பயணமாக செல்ல வேண்டிய நினிவே பட்டணத்திற்கு சென்று, அங்குள்ள பட்டணத்திற்கும், ஜனங்களுக்கு எதிராக அவர்களின் எல்லை மீறிய துன்மார்க்கத்தின் நிமித்தம் அவருடைய நியாயத்தீர்ப்பை அறிவிக்கும்படி தேவன் யோனாவுக்கு கட்டளையிட்டார். (யோனா 1:1,2) இதற்கு பதிலாக யோனா தென் மேற்கில் உள்ள யோப்பா பட்டணத்தின் கடற்கரைக்கு சென்று தர்ஷீசுக்கு செல்லும் ஒரு கப்பலில் ஏறினார். சுமார் 2,500 மைல்கள் மேற்கில் இருந்தது. அந்நாட்களில் இது பூமியின் எல்லை என்று என்னப்பட்டது. (யோனா 1:3)

யோனாவின் கணிப்பின்படி, கப்பல் உடையத்தக்கதாக கர்த்தர் ஒரு கடுமையான புயலை ஏற்படுத்தினார். ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்த தெய்வங்களை நோக்கி வேண்டுதல் செய்து கொண்டு கப்பலின் சுமையை குறைக்கும் படிக்கு அதில் உள்ள சரக்குகளை வெளியே எரிந்து கொண்டிருந்தார்கள். ஆச்சரியமூட்டும் வகையில் யோனா அடித்தட்டில் அயர்ந்த நித்திரை செய்து கொண்டிருந்தார். கப்பலின் மாலுமி, அவரை எழுப்பி, விடிவிக்கும்படிக்கு தம்முடைய ஆண்டவரை நோக்கி வேண்டி கொள்ளும்படிக்கு கூறினார். (யோனா 1:4-6)

இதற்கு இடையில், இந்த பேரிடருக்கு

காரணமானவரை கண்டுபிடிக்கும் படிக்கு கப்பலில் இருந்தவர்கள் சீட்டு போட்டார்கள். சீட்டு யோனாவின் பெயரில் விழுந்தது. அவர் யேகோவா தேவனைவிட்டு விலகி ஓடிக்கொண்டிருப்பதை யோனா முன்னதாகவே அவர்களுக்கு அறிவித்ததினால், இது அவர்களுக்கு வியப்பூட்ட வாய்ப்பில்லை. கடல் அமரும்படியாக தன்னை கடலில் தூக்கி போடும்படியாக யோனா கூறினார். ஆனால் கப்பலில் இருப்பவர்கள் தயங்கி, கப்பலை கறைசேர்க்கும் படியாக தங்களால் முடிந்த வரையில் தண்டு வலித்தார்கள். ஆனால் கடல் அதிகமாக கொந்தளித்தது. இறுதியாக அவர்கள் செய்யும் காரியத்திற்காக தேவனிடத்தில் மன்னிப்பை வேண்டி கொண்டு யோனாவை கடலில் தூக்கி போட்டார்கள். இதன் விளைவாக கடல் அமர்ந்தது. கப்பலோட்டிகள் யோனாவின் தேவன் மேல் விசுவாசம் வைத்து அவருக்கு பொருத்தனை செலுத்தினார்கள். (யோனா 1:7-16)

யோனா அழிந்து போகவில்லை. “யோனாவை விழுங்கும்படி ஒரு பெரிய மீனைக் கர்த்தர் ஆயத்தப்படுத்தியிருந்தார். அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான்.” (யோனா 1:17) என்று அவர் பதிவு செய்திருக்கிறார். மீனுக்குள் இருந்து யோனா தேவனை நோக்கி ஜெபித்தார். அவர் கதறி அழும் போது தேவன் அவர் ஜெபத்தை கேட்டார். (யோனா 2:7,9) அவர் தேவனுடைய கட்டளையை நிறைவேற்ற உறுதி அளித்தார். இதன் விளைவாக “கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார்; அது யோனாவைக் கரையிலே கக்கிவிட்டது.” (யோனா 2:10)

### யோனாவின் கதையை இயேசு உறுதிப்படுத்தினார்:

இந்த நம்புதற்குரிய சம்பவங்கள், யோனாவின் புத்தகத்தை ஒரு உண்மையில்லா கதை என்று குறைகூறி அதை விளக்குவதற்கு பலரை வழி நடத்தியது. இப்படிப் பட்டவர்களுக்கு பல பதில்கள் கொடுக்கப்படலாம். ஆனால் மனுக்குலத்திற்காக கொடுக்கப்படும் ஈடுபலியின் போது இயேசுவின் அனுபவங்களை குறித்த எடுத்துக்காட்டை யோனாவின் அனுபவங்களோடு தேவகுமாரன் மேற்கோள் காட்டியது ஒரு உறுதியான ஆதாரமாகும்.

“அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் **யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி** வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப் படுவதில்லை. யோனா இரவும், பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்று நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார். யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு **நினிவே** பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, **யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்**. ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததி யாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ் சுமத்துவார்கள்.” (மத் 12:39-41) என்று இயேசு பதில் அளித்தார்.

தேவனுடைய பணியில் பிரவேசித்த யார் ஒருவரையும், அவர் எளிதாக விட்டுவிட மாட்டார் என்ற ஒரு முக்கியமான பாடம் இந்த பகுதியிலிருந்து பெறப்படுகிறது. ஒருவர் இதை செய்ய முயற்சித்தால், அவர்கள் வேறு திசையை நோக்கி சென்றாலும் தேவன் அவர்களை சரியான வழியில் நடக்க ஏவுவார். மூன்று விலையேறபெற்ற வாக்குத்தத்தங்களை இதற்கு ஆதரவளிக்கிறது.

❋ “நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை ; உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.” (எபிரெ 13:5)

❋ “பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.”(யோவான் 6:37)

❋ “நான் உங்களை நினைக்கிற பொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கறேன்.” (பிலி 1;6)

யோனாவை தன்னுடைய தீர்க்கதரிசன கடமைகளை செய்வதற்கு இந்த அனுபவங்கள் அவரை புதுப்பித்ததாக தோன்றுகிறது. தேவன் மீண்டுமாக அவருடைய வேலைகளை யோனாவுக்கு அறிவித்தார். “நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய் நான் உனக்குக் கற்பிக்கும் வார்த்தையை அதற்கு விரோதமாய்ப் பிரசங்கி என்றார். ” (யோனா 3:2) ஆகவே யோனா நினிவேக்கு சென்று வரவிருக்கும் பட்டணத்தின் அழிவை குறித்தும், தேவனுடைய நியாயத்தீர்ப்பை அறிவித்தார். ஆயினும் யோனாவின் இருதயம் தேவனுடைய நோக்கத்தோடு முழு இசைவாக இல்லை என்று நாம் அறிந்திருக்கிறோம். “யோனா பட்டணதிற்குள் பிரவேசித்தபோது ஒருநாள் பிரயாணம்பண்ணி: இன்னும் நாற்பதுநாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான். ”(யோனா 3:4) என்று அறிவித்தார். தீர்க்கதரிசியாகிய யோனா பேசின செய்தியை பற்றிய பதிவுகள், இது மட்டுமே காணப்படுகிறது. வெறும் ஐந்து எபிரெய வார்த்தைகள்.

### நினிவேயின் மனம் வருந்துதல்:

நினிவே பட்டணத்தாரின் மனம் வருந்துதலுக்கான செயலுக்கு யோனா ஆயத்தமாக இல்லை. அவர்கள்

பெரியோர் முதல் சிறியோர் வரை ஒருமித்து உபவாசித்து இரட்டு உடுத்தி சாம்பலில் உட்கார்ந்தார்கள். அந்த பட்டணத்து ராஜாவும் தன்னுடைய ராஜரீகமான வஸ்திரத்தை கழற்றி இரட்டுத்தி, சாம்பலில் உட்கார்ந்தான். அனைவரும் தங்களுடைய பொல்லாத வழிகளைவிட்டு திரும்பி, தேவன் அவர்களுக்கு கொடுத்த தண்டனையை தளர்த்திக்கொள்வதற்கு அவரிடம் மன்றாடும் படிக்கு அனைவரும் இரட்டுத்தி, சாம்பலில் உட்காரும்படிக்கு இராஜா ஒரு கட்டளையை பிறப்பித்தான். நினிவே பட்டணத்தார் தங்களுடைய பொல்லாத வழிகளை விட்டு திரும்பி உணர்வுபூர்வமான மனம்திரும்புதலுக்கு தேவன் அவர்கள் மேல் இரக்கம் பாராட்டினார். (யோனா 3:5-10)

**நினிவே பட்டணத்தின் மேல் தேவன் பாராட்டின இரக்கத்தை கண்ட யோனாவின் செயல்பாடு:**

நினிவே பட்டணத்தாரின் செயலுக்கு தக்க பலனை அவர்கள் அடையாததினால், யோனா மிகவும் எரிச்சல் அடைந்தார். அவர் தேவனிடம் கோபம் கொண்டார். தேவன் இரக்கமும் மன உருக்கமும் மன்னிக்ககூடிய தேவன் என்பதை அறிந்திருந்த காரணத்தினால் தான் துவக்கத்தில் அவருக்கு நியமிக்கப்பட்ட வேலையை விட்டு ஓடினார் என்ற காரணத்தை யோனா விளக்கினார். ஜனங்களை எச்சரித்து, அவர்கள் மனம் திரும்புவதற்கு வாய்ப்பை கொடுப்பதற்கான ஒரு செயலாளராக இருப்பதற்கு யோனா விரும்பவில்லை போல தோன்றுகிறது. (யோனா 4:1,2) பக்தியற்ற இந்த புறஜாதியார், இந்த ஒரு வாய்ப்பை பெறுவதற்கு தகுதியற்றவர்கள் என்று அவர் மனதார உணர்ந்தார். அதற்கு பதிலாக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்தார். இதே பெரும்பாலான கிறிஸ்துவ மண்டலத்திலும், இஸ்லாமியர்களும், நித்திய ஆக்கினை என்ற தவறான உபதேசத்திற்குள் இதே ஆவி புதைந்திருப்பதை காணலாம்.

இஸ்ரயேல் யாவே தேவன் மேல் அதிக ஆர்வத்தோடும், பிரியத்தோடும் இருந்தார்கள். யோனா அதை பிரத்தியேக கூற்று என்று தவறாக எண்ணினார். யோனா கடவுள் முன்பு இஸ்ரயேல் ஜனங்கள் விக்கிரகாராதனையிலிருந்து விலகும் போது அவர்களுக்கு கிருபை அளித்தது போல இவர்களுக்கும் மனம் இரங்குவார் என்று எண்ணினார்.

தேவனிடம் தன்னுடைய ஜீவனை எடுத்துக் கொள்ளும்படி கோரும் அளவுக்கு அவர் மனம் தளர்ச்சி அடைந்தது. அவர் பட்டணத்தை விட்டு புறப்பட்டு கிழக்கில் ஒரு இடத்தில் அமர்ந்தார். அங்கு தனக்கு நிழல் உண்டாகும்படி ஒரு கூரையை போட்டு கொண்டார். அதற்கு பின் யோனாவின் மேல் தேவன் கொண்டிருக்கும் அக்கறையை வெளிப்படுத்தும் படிக்கு கொடிய வெயிலிலிருந்து யோனாவுக்கு மேலும் நிழல் கொடுக்கும் படியாக அவர் ஒரு ஆமணக்கு செடியை முளைக்கும்படி செய்தார். இதைக்குறித்து யோனா மிகவும் சந்தோஷப் பட்டார். ஆனால் மறுநாள் காலையில் அந்த ஆமணக்கு பட்டுபோகும் படியாக தேவன் ஒரு பூச்சிக்கு கட்டளையிட்டார். சூரியன் எழும்பி சூடான கீழ்காற்று வீசிய போது யோனா மிகவும் சோர்ந்து போனார். (யோனா 4:5-8)

அவர் உடனே மரித்தால் நலமாயிருக்கும் என்று மறுபடியும் புலம்பினார். இந்த சூழ்நிலையை கண்டு அவர் மிகவும் கோபம் அடைந்தார். கோபப்படுவதற்கு நியாயம் உண்டா என்று தேவன் யோனாவிடம் சவால் விட்டார். (யோனா 4:9) எல்லாவற்றிற்கும் பின் அதற்கு எதிரிடையாக இந்த பாடத்தோடு தேவன் நிறைவு செய்தார்.

"அதற்கு கர்த்தர்: நீ பிரயாசப் படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்து போனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே. வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார். (யோனா 4:10-11)

இஸ்ரயேலர்கள் தங்களுடைய மேசியாவை புறக்கணித்தபோது ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாகிய பரலோக சபைக்கு உண்டான வாய்ப்பை புறஜாதிகளிடம் கொடுக்கப்பட்டதை, யோனாவின் ஊழியத்தில் காணப்படும் இந்த கதையில் தேவன் நிழலிட்டு காட்டுகிறார். நினிவே பட்டணத்தாரை பற்றிய பொது பேச்சுக்களை இஸ்ரயேலர்கள் கேள்விப்படும் போது அவர்களுக்குள் பொறாமை ஏற்படும்படியாகவே தேவன் முயற்சித்திருக்கலாம். சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் சாரத்தை நிரப்பும்படியாக புறஜாதிகளை அழைத்து இஸ்ரயேலை கோபத்திற்குள்ளும் எரிச்சலை மூட்டும்படிக்கு தேவன் இஸ்ரயேலை தூண்டினார் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்.

"இஸ்ரவேலர் அதை அறியவில்லையா என்று கேட்கிறேன், அறிந்தார்கள். முதலாவது, மோசே: எனக்கு ஜனங்களல்லாதவர்களைக் கொண்டு நான் உங்களுக்கு எரிச்சல் உண்டாக்குவேன்; புத்தியீனமுள்ள ஜனங்களாலே உங்களுக்குப் கோப மூட்டுவேன் என்றான். அல்லாமலும் ஏசாயா: என்னைத் தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன், என்னை விசாரித்துக் கேளாதவர்களுக்கு வெளியரங்க மானேன் என்று தைரியங்கொண்டு சொல்லுகிறேன்." (ரோமர் 10:19-21)

**பாடங்கள்:**

கடவுள் பட்சபாதமுள்ளவரல்ல, அவருடைய பேரரசுரிமையை அங்கீகரிப்பதன் முக்கியத்துவம் ஒரு பாடமாகும். (அப் 10:34-35) மற்றும் இது "அவர் மோசேயை நோக்கி: எவன் மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன் மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன் மேல் உருக்கமாயிருப்பேன் என்றார்."(ரோமர் 9:15) இது மனித வரலாற்றின் எல்லா யுகங்களிலும் ஒரு பொதுவான ஆய்வுப்பொருளாக காணப்படுகிறது. தேவனுடைய கிருபையின் அடிப்படையில் ஜனங்கள் தங்களுடைய சொந்த கண்டுபிடிப்புகளை உருவாக்கி, நம்பி அதிகாரத்தோடு அறவித்திருக்கிறார்கள்.

அடுத்து அனைத்து ஜனங்களின் மேல் அன்பும் அக்கறையும் கொள்ளவேண்டும் என்ற மற்றொரு பாடமும் உள்ளது. யோனா நினிவே பட்டணத்து ஜனங்களை காட்டிலும் தனக்கு இன்பமளிக்கும் ஆமணக்கு செடிக்காக கவலைப்பட்டார், தேவனுடைய சகல சிருஷ்டிப்புகளிலும் மனுஷனுக்கு தேவன் எவ்வளவு மதிப்பு கொடுக்கிறார், என்பதை ஆழமாக புரிந்து கொள்வதற்கு இயேசு பறவைகளை பற்றிய ஒரு எடுத்துகாட்டை பயன்படுத்தி இருக்கிறார். "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறது மில்லை, அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?" (மத் 6:25)

தேவன் மற்றும்அவருடைய குமாரனாகிய இயேசு செயலாற்றினது போல தேவனுடைய ஊழியக்காரர்களாக, இருக்கக்கூடிய நாம் அனைவரையும் நேசிக்க வேண்டியது நமது கடமையாகும்.

"தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்." (1யோவான் 4:20-21) நீங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருங்கள்; அக்காலமுதற்கொண்டு நான் அதை உனக்கு விளங்கப்பண்ணினதும் முன்னறிவித்ததும் இல்லையோ? இதற்கு நீங்களே என் சாட்சிகள்;

*என்னைத்தவிர தேவனுண்டோ? வேறொரு கன்மலையும் இல்லையே ;*

*ஒருவனையும் அறியேன். (ஏசா 44:8)*

மீகா– பகுதி 1 :சோதனை மற்றும் நியாயத்தீர்ப்பு:

# கவிஞராகிய தீர்க்கதரிசி



**"நானோவென்றால் கர்த்தரை நோக்கிக்கொண்டு, என் இரட்சிப்பின் தேவனுக்குக் காத்திருப்பேன்; என் தேவன் என்னைக் கேட்டருளுவார். (மீகா 7:7)**

**Jeff Mezera**

அவருக்கு முன்னிருந்த தாவீது ராஜாவை போல, தீர்க்கதரிசியாகிய மீகாவும் சில அருமையான கவிதைகளை வசனங்களில் எழுதியிருக்கிறார். ஆனால் மீகா சொல்லுகிற செய்திகள் எப்பொழுதும் அழகாக இருப்பதில்லை. ஏனெனில், விக்கிரகாராதனையினால், அவர்கள் தாழ்த்தப்பட்டு, கொண்டு செல்லப்படுவார்கள் என்று உறுப்படுத்தி காட்டினார். இந்த தீர்க்கதரிசனத்தின் முதல் வசனத்தில் மூன்று இராஜாக்கள் குறிப்பிடப் படுகிறார்கள்.

"யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்னும் யூதா ராஜாக்களுடைய நாட்களில், மொரேசா ஊரானாகிய மீகாவுக்கு உண்டானதும், அவன் சமாரியாவுக்கும் எருசலேமுக்கும் விரோதமாய்த் தரிசித்ததுமான கர்த்தருடைய வார்த்தை." (மீகா 1:1)

உசியா ராஜா அவருடைய குஷ்டரோகத்தினால், ஆட்சியை தொடர முடியாததினால்,அவருடைய குமாரனாகிய யோதாம் முதல் ராஜாவானார். இவர் ஒரு நீதியுள்ள இராஜாவாக இருந்தாலும், உயர்ந்த மேடைகளில் இருந்த விக்கிரகங்களை அகற்றவில்லை. (2 இராஜா 15:35)

இரண்டாவது யோதாமின் குமாரன் ஆகாஸ் ராஜாவானான். இவர் வடதேசத்தின் இஸ்ரயேலை போல யூதாவையும் விக்கிரகாராதனைக்குள் நடத்தினான். (2இராஜா 16:3) ஆகாஸ் ராஜாவின் கீழ் அரசாங்கம் மற்றும் மதத்தின் தலைமை இன்னும் தாழ்வான நிலைக்கு இறங்கியது. சாலொமோனின் வெண்கல பலிபீடத்திற்கு பதிலாக அசீரியர்களின் பலிபீடத்தை வைத்தான். அவன் ஆலயத்தின் மற்ற பகுதிகளையும் மாற்றி "தன்னுடைய குமாரனை, தீக்கடக்க செய்தான்." (2இராஜா 16:3) இதை கடவுள் வெறுத்தார் மற்றும் இதை மீகா கண்டித்தார்.

ஆகாஸின் குமாரன் எசேக்கியா வித்தியாசமானவராக இருந்தார். அவர் உயர்ந்த மேடைகளில் உள்ள தோப்புகளை அகற்றி (2இராஜா 18:4) தேசத்தை மீண்டும் உண்மையான தேவ ஆராதனைக்கு திருப்பினார். "அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை." (2இராஜா 18:5) எசேக்கியாவின் ஆட்சியின் போது "கூண்டில் அடைக்கப்பட்ட பறவை" போல சிறைவைத்த சனகரீப்பிடமிருந்து தேவன் யூதாவை இரட்சித்தார். அதற்கு பின், சீர்ப்படுத்தப்பட்ட சகலத்தையும் எசேக்கியாவின் குமாரன் சீர்குலைத்து ஒரு நூற்றாண்டிற்கு பின் நேபுகாத்நேச்சாரினால் எருசலேம் கைப்பற்றப்பட்டு, ஆலயம் அழிக்கப்பட்டது.

மீகா என்ற பெயருக்கு "யாவேயை போல்" அல்லது "யேகோவாவை போலிருப்பவர்" என்று பொருள். மீகாயேல் என்ற நாமத்திற்கும் இதே பொருள். "ஏழை போன்றவர்" அல்லது "தேவனை போன்றவர்." மீகாவின் தீர்க்கதரினத்திற்கு முக்கியமான மூன்று பகுதிகள் உள்ளது. (1) சோதனை அல்லது பரீட்சை (2) நியாயத்தீர்ப்பு (3) மீட்பு அல்லது திரும்ப கொடுத்தல்.

### சோதனை மற்றும் நியாயத்தீர்ப்பு:

கிட்டத்தட்ட மீகா புத்தகம் முழுவதும் கவிதை பாணியில் எழுதப்பட்டுள்ளது. சில நேரங்களில் வெவ்வேறு விதமான கவிதை பயன்படுத்தப்பட்டுள்ளது. முதல் அதிகாரத்தில் கவிதை தொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த விதத்தில், ஒரே காரியத்தை கூறுவதற்கு இரண்டு வரிகளில் இரண்டு வேறுவித வார்த்தைகள் பயன்படுத்தப்படுகிறது. இது சோதனையின் பகுதி துவங்கும் போது இரண்டு மற்றும் மூன்றாம்வசனங்களில் காணப்படுகிறது. துரதிஷ்டவசமாக, மொழிபெயர்ப்பின் போது, இந்த கவிதையின் அழகு நிச்சியமாக தொலைந்து விட்டது.

"சகல ஜனங்களே, கேளுங்கள்; பூமியே, அதிலுள்ளவைகளே, செவி கொடுங்கள்; கர்த்தராகிய ஆண்டவர், தம்முடைய பரிசுத்த ஆலயத்திலிருக்கிற ஆண்டவரே, உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருப்பார். இதோ, கர்த்தர் தமது ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறார்; அவர் இறங்கிப் பூமியின் உயர்ந்த இடங்களை மிதிப்பார்." (மீகா 1:2,3)

2 மற்றும் 3-ம் வசனத்தில் மீகாவால் குறிப்பிடப்படும் "ஜனங்கள்" இஸ்ரயேலில் உள்ளவர்களா அல்லது முழு உலகத்தில் உள்ளவர்களா? மீகாவின் கவிதை தொடர் இதை நமக்கு வெளிப்படுத்துகிறது. முதல் வரியில் "ஜனங்கள்" என்றும் இரண்டாவது வரியில் "பூமி"

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்றம் அமர்வில் உள்ளது எனஇரண்டாம் வசனம் படிப்பது என்று மீகாவின் கவிதைகளில் பரவலாக நீதிமன்றம் நாடகத்தை தெளிவாக காண்பிக்கிறது. பிதா தாமே தலையை சாட்சியாக கொண்டு பூமி, யூதா மற்றும் இஸ்ரயேலுக்கு எதிராக சட்டபூர்வமான வழக்கு துவங்குகிறது. "மெழுகு அக்கினிக்கு முன்பாக உருகுகிறதுபோலவும், மலைகளிலிருந்து பாயுந்தண்ணீர் தரையைப் பிளக்கிறது போலவும், பர்வதங்கள் அவர் கீழே உருகி, பள்ளத்தாக்குகள் பிளந்துபோகும்." (மீகா 1:4) பர்வதங்கள் தண்ணீரை போல உருகி ஊற்றுவதை இந்த கவிதை எவ்வளவு துரிதமாக வரும் என்று இதுகாட்டுகிறது.

"இது எல்லாம் யாக்கோபுடைய மீறுதலினிமித்தமும், இஸ்ரவேல் வம்சத்தாருடைய பாவங்களினிமித்தமும் சம்பவிக்கும்; யாக்கோபின் மீறுதலுக்குக் காரணமென்ன? சமாரியா அல்லவோ? யூதாவின் மேடைகளுக்குக் காரணமென்ன? எருசலேம் அல்லவோ?" (மீகா 1:5) உயர்ந்த மேடுகள் எதை குறிக்கும் என்று வசனம் 5 கூறுகிறது. இங்கு மீகா விக்கிரகாராதனையின் நிமித்தம் தேவனுடைய பரந்து விரிந்திருக்கும் நியாயத்தீர்ப்பை தம்முடைய சொந்த ஜனத்திற்கு ஒடுக்கினார்.

"ஆகையால் நான் சமாரியாவை வெளியான மண்மேடும், திராட்சச்செடி நடுகிற நிலமுமாக்கி, அதின் கற்களைப் பள்ளத்தாக்கிலே புரண்டு விழப்பண்ணி, அதின் அஸ்திபாரங்களைத் திறந்துவைப்பேன். அதின் சுரூபங்கள் எல்லாம் நொறுக்கப்படும்; அதின் பணையங்கள் எல்லாம் அக்கினியால் எரித்தப்போடப்படும்; அதின் விக்கிரகங்களை எல்லாம் பாழாக்குவேன்; வேசிப்பணையத்தினால் சேர்க்கப்பட்டது. திரும்ப வேசிப்பணையமாய்ப் போகும். " (மீகா 1:6-7)

சமாரியா அனுபவிக்கக்கூடிய அழிவை அடையாளப்படுத்தும் படிக்கு தேவன் அவனுடைய கற்களை பள்ளத்தாக்கில் புரண்டு விழப்பண்ணுவார். என்று மீகா 1:6-ம் வசனம் கூறுகிறது. அவன் மீண்டும் கட்டப்படாமல் விட்டு விடப்படுவான் என்பதை அடையாளப்படுத்தும் படிக்கு அஸ்திபாரத்தை திறந்து வைப்பேன் என்கிறார். இந்த பெயரில் எந்த ஒரு தேசமும், இனி இராது என்றும் அல்லது அந்த தேசத்தின் பகுதியாகவும் இராதென்றும் "திராட்சச்செடி நடுகிற நிலமுமாக்கி" என்ற சொற்றொடர் காட்டுகிறது.

பல தீர்க்கதரிசனத்தின் உடனடியான நிறைவேற்றம் அந்த தீர்க்கதரிசியின் நாட்களில் நிறைவேறியது. மேலும் அதன் முழுமையான நிறைவேற்றம், புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்பட்டபடி இனி வரக்கூடிய காலங்களில் நிறைவேறும். அவிசுவாசமுள்ள இஸ்ரயேலுக்கு எதிராக, மீகாவீனால் உரைக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு வருங்காலத்தில் விழுந்து போகும் அவிசுவாசமுள்ள கிறிஸ்துவ மண்டலத்திற்கு தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டதாகும். மகா வேசியான பாபிலோன், முழுமையாக அழிக்கப்பட்டு, இனி ஒரு போதும் மீண்டும் கட்டப்படுவதில்லை (வெளி 18)

"இதினிமித்தம் நான் புலம்பி அலறுவேன்; பறி கொடுத்தவனாகவும் அம்மணமாகவும் நடப்பேன்; நான் ஓரிகளைப் போல ஊளையிட்டு, ஆந்தைகளைப்போல அலறுவேன்." (மீகா 1:8) கவிதை தொடர் தொடருகிறது. மீகாவின் புலம்பலும் அழுகையும் குள்ள நரிகளின் புலம்பலுக்கும் தீக்கோழி துயரம் கொண்டாடுதலுக்கும் இணையாக சொல்லப்படுகிறது. இந்த துயரத்தின் சத்தமானது தம்முடைய ஜனங்கள் மேல் வரவிருக்கும் அழிவுக்காக மீகாவின் புலம்பலை காட்டுகிறது. இதேபோல மத்திய காலங்களில், கத்தோலிக்க சபையின் தீராத காயங்களை எண்ணி சீர்த்திருத்தவாதிகள் புலம்பினார்கள். இது மட்டும் அல்லாமல் இது போல இனி சபையின் வாயிலில் சம்பவிக்கக்கூடிய சம்பவங்களையும் எண்ணி புலம்பினார்கள். பல கிறிஸ்துவ வட்டங்களின் போக்கை நாம் காணும்போது ஆண்டவரின் வார்த்தையைப் பற்றிய அறிவு மேலும் சரிந்து கொண்டிருப்பதை காணலாம்.

உலகியல் சார்ந்த கடுந்தாக்குதலுக்கு தப்பி வாழ்வதற்கு ஏற்ற பழங்காலத்து விசுவாசத்தின் படிவத்தை சுவிசேஷகர்கள் நம்முடைய இளைஞர்களுக்கு கற்று கொடுப்பதற்கு தவறிவிட்டார்கள். நம்முடைய இளைஞர்கள் வசனங்களுக்கு ஏன் கீழ்படிய வேண்டும் என்றும் ஆன்மீகத்தின் முக்கியத்துவம் அல்லது ஆவிக்குரிய ஒழுங்கு மற்றும் சமுதாயத்தின் அனுபவங்களை குறித்து அறியாதிருக்கிறார்கள். "(The coming Evengelical Collapse," march 10, 2009, Christian Science Monitor).

சில நேரங்களில் பெயர்களின் அர்த்தங்கள் தீர்க்கதரிசனமான கவிதை தொடரை காட்டும். இதை நாம் வெளிப்படுத்தலில் காணலாம். இதில் ஒரு சீஷன் நடக்க வேண்டிய பாதையை வரிசைபடுத்தியிருக்கும் ஏழு சபைகளை காணலாம். சபையின் பாதை சரிய துவங்கி குறுக்குமறுக்கு வழியில் புறஜாதியாரின் தத்துவங்களோடு, சபையை சித்திரவதை படுத்தும் வல்லமை கலந்துவிடும் என்று இந்த சபைகளின் பெயர்கள் தீர்க்கதரிசனமாக உரைக்கிறது. இதேபோல் ஒரு பட்டியலை மீகா முதலாம் அதிகாரத்தின் முடிவுபகுதியில் காணப்படுகிறது. இந்த செய்தியை வேதாகமம் இவ்வழியில் மொழி

பெயர்த்துள்ளது. "அதைக் காத்பட்டணத்திலே அறிவியாதேயுங்கள்; அழவே வேண்டாம்; பெத் அப்ராவிலே புழுதியில் புரளு. (11)சாப்பீரில் குடியிருக்கிறவளே, வெட்கத்துடன் அம்மணமாய் அப்பாலே போ; சாயனானில் குடியிருக்கிறவள் வெளியே வருவதில்லை ; பெத்ஏசேலின் புலம்பல் உங்களுக்கு அடைக்கலமாயிராது. (12) மாரோத்தில் குடியிருக்கிறவள் நன்மை வருமென்று எதிர் பார்த்திருந்தாள்; ஆனாலும் தீமை கர்த்தரிடத்திலிருந்து எருசலேமின் வாசல் வரைக்கும் வந்தது.(13) லாகீசில் குடியிருக்கிறவளே, வேகமான குதிரைகளை இரதத்திலே பூட்டு; நீயே சீயோன் குமாரத்தியின் பாவத்துக்குக் காரணி; உன்னிடத்தில் இஸ்ரவேலின் பாதகங்கள் காணப்பட்டது. (14) ஆகையால் மோர்ஷேக்காத்தினிடத்தில் உனக்கு இருக்கிறதைக் கொடுத்துவிடுவாய்; அக்சீபின் வீடுகள் இஸ்ரவேலின் ராஜாக்களுக்கு அபத்தமாய்ப் போகும்.(15) மரோஷாவில் குடியிருக்கிறவளே, உனக்கு இன்னும் ஒரு சுதந்தரவாளியை வரப்பண்ணுவேன்; அவன் இஸ்ரவேலின் மகிமையாகிய அதுல்லாம் மட்டும் வருவான். (16) உனக்கு அருமையான உன் பிள்ளைகளினிமித்தம் நீ உன் தலையைச் சிரைத்து மொட்டையிட்டுக்கொள்; கழுகை போல முழுமொட்டையாயிரு, அவர்கள் உன்னைவிட்டுச் சிறைப்பட்டுப்போகிறார்கள்."

இஸ்ரயேல் மற்றும் யூதாவின் பாவங்கள், இஸ்ரயேலுக்கு வெளியிலிருந்து நியாயத்தீர்ப்பையும் அழிவையும் கொண்டுவரும். "சேனைகளையுடைய நகரமே, இப்போது தண்டு தண்டாகக் கூடிக்கொள்; நமக்கு விரோதமாக முற்றுகை போடப்படும்; இஸ்ரவேலுடைய நியாயாதிபதியைக் கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள்." (மீகா5:1) இதை குறித்து காரில்ஸேகன்சிக்கின் வார்த்தைகள்:

"முதல் வசனம் இரண்டு விளக்கவுரைகளை கொடுக்கக்கூடியதாக உள்ளது. ஒருவேளை, இவ்விரண்டும் உண்மையானதும், ஒன்றை ஒன்று நிழலிட்டு காட்டக்கூடியதாகவும் இருக்கலாம். மீகாவின் நாட்களில், சந்தேகத்திற்கு இடமின்றி அங்கு கூடியிருந்த படை அசீரியார்களே. (வருங்காலத்தில் பாபிலோனின் அச்சுறுத்தல் மீகா 4:10-ம் வசனம் காண்க) ஆயினும், படைகள் கிபி 68-73-ம் வருடங்களில் முற்றுகை போட்டு துவங்கப்பட்ட யூதர்களின் சிதறடிப்பு கிட்டத்தட்ட 2000 வருடங்களாக நீடித்ததற்கு ஒப்பிட்டு பார்க்கும் போது இவர்கள் சிறைப்பட்ட காலம் குறைவானது என்றாலும் "இஸ்ரயேலின் நியாயாதிபதிகளை அடித்து" அதாவது மேசியாவை கண்ணத்தில் அறைந்த காரியங்களோடு நேரடியான தொடர்பு இருப்பதினால் ரோமானியர்களின் முற்றுகைக்கு அதிக முக்கியத்துவம், கொடுப்பதற்கு வசப்படுத்தப்பட்டது. (மத் 26:67; 27:30) ஆயினும் இவ்விரண்டையும் ஒப்பிட்டு பார்க்கும் போது அசீரியர்களின் படை எடுப்பாக இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது."

"(Beauties of the truth August 1996, "The Dew and the Lion" Carl Hagensick)"

பாபிலோனின் காலத்தில் உள்ள விளக்கத்தை (மீகா 4:10) வசனம் தருகிறது."சீயோன் குமாரத்தியே, பிரசவ ஸ்திரீயைப்போல அம்பாயப்பட்டு வேதனைப்படு; நீ இப்போது நகரத்திலிருந்து புறப்பட்டு, வெளிகளில் தங்கி, பாபிலோன் வரைக்கும் போவாய், அங்கே விடுவிக்கப்படுவாய்; அங்கே கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்." ஆயினும், யூதாவின் கடைசி ராஜாக்கள் எளிதில் தாழ்ந்து போகவில்லை. யோயாகீம், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு எதிராக புரட்சி செய்தார். அவர் சிங்காசனத்தில் அமர்ந்திருந்தாலும் முடிவில் அவர் கைதியாக கொண்டு செல்லப்பட்டார். (2 இராஜா 24:15) இதன் விளைவாக யூதாவின் கடைசி ராஜாவாகிய செதேக்கியா, பாபிலோனியர்களாக அடிக்கப்பட்டதும் அல்லாமல், அவருடைய கண்களையும் பிடிங்கினார்கள். (2இராஜா 25:7)

இங்கு தாவீதின் வம்சம் சிறைபிடிக்கப்பட்டது. இந்த வரிசையில் தான் இயேசுவின் பெற்றோராகிய யோசேப்பும் மரியாளும் கிறிஸ்துவும், வந்தார்கள்.

"அவர் மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்." (மத் 27:30) இறுதியாக, இயேசுவே தாவீதின் வம்ச வழியாக வந்த உரிமையுள்ள ராஜாவும் கண்ணத்தில் அரைவாங்கின இஸ்ரயேலின் இந்த வசனம் மீகாவின் நாட்களுக்கு பின் வரும் காரியங்களை கண்டது. "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறிய தாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது."(மீகா 5:2)

(இந்த கட்டுரையின் 2-ம் பகுதியில் வரக்கூடிய ஹெரால்டு பிரதியில் வெளியிடப்படும்.)

*அப்படியே, அவர் அநேகம் ஜாதிகள் மேல் தெளிப்பார்; அவர் நிமித்தம் ராஜாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்; ஏனெனில், தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்துகொள்வார்கள். (ஏசாயா 52:15)*

இன்றைய தீர்க்கதரிசனம்



# உலகளாவிய ஓய்வூதிய நெருக்கடி

***“ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத் என்னும் பெரிய நதியின் மேல் ஊற்றினான்; அப்பொழுது சூரியன் உதிக்குந் திசையிலிருந்து வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்த நதியின் தண்ணீர் வற்றிப்போயிற்று.” (வெளி 16:12)***

ஏழு ஆண்டுகளாக குறைந்த வட்டி விகிதங்களின் காரணத்தால் உலகின் ஓய்வூதிய நிதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில், ஸ்டானடார்ட மற்றும் புவர்ஸ் பங்கு குறியீட்டை உருவாக்கும் 1500 நிறுவனங்கள், ஓய்வூதிய நிதிகளை 560 மில்லியன் டாலர்களாக குறைத்துள்ளது. அமெரிக்க அரசு மற்றும் நகராட்சி ஓய்வூதிய நிதிகள் ஆழமான கடனில் மூழ்கி உள்ளன. 3.4மில்லியன் டாலர்கள் வரை பற்றாகுறையில் உள்ளது.இல்லினாய்ஸ்யில் மட்டும் ஓய்வூதிய கடன் வட்டி வருடாந்திரத்திற்கு 9.1 மில்லியன் டாலர் ஆகும். அந்த நாட்டின் மொத்த நிதிசாரா தொகை (தற்போதைய சொத்துக்களால் வழங்கப்படாத நன்மைகள்) 130 மில்லியனை அணுகுகிறது.

இங்கிலாந்தில், அந்த நாட்டின் மிகப்பெரிய 350 நிறுவனங்கள் 950 மில்லியன் டாலர்களுக்கு நிகரான ஓய்வூதியச் சொத்துக்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால்1.5 டிரில்லியன் டாலர் தொகை செலுத்தும் கடமையும் உள்ளது. நாட்டின் 5945 ஓய்வூதிய திட்டங்களில், 5020 திட்டங்கள் குறிப்பிடத்தக்க பற்றாக்குகைளைக் காண்பிக்கின்றது. யூகே ஓய்வூதிய பாதுகாப்பு நிறுவனம், திட்டங்கள் தோல்வி அடைந்தால், அதனை பினை எடுக்கும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. அந்த நிறுவனமானது மொத்த பற்றாக்குறை $538 பில்லியனுக்கு சமமாக இருப்பதாக கூறுகிறது. ஆனால் அந்நிறுவனத்தில் வெளியே உள்ள நிபுணர்கள் அந்த தொகை இருமடங்கு பெரியது என்று கூறுகின்றனர். அமெரிக்காவில் சமமான ஓய்வூதிய நன்மை கார்ப்பரேஷனில் (PBGC) மொத்தம் 76.4 பில்லியன் டாலர் பற்றாக்குறை இருக்கிறது. BGC-யின் திட்டங்கள் அனைத்தும், 2003 முதல், அரசாங்க பொறுப்புணர்வு அலுவலகத்தில் (GAO) உயர் ஆபத்து அரசு திட்டங்களின் பட்டியலில் உள்ளன. PBGC-யின் திட்டங்களில் சிலவற்றில் முன்னேற்றங்கள் காணப்பட்டாலும், இன்னும் 10 ஆண்டுகளில் ஒட்டுமொத்த நிலையும் மோசமாகிவிடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

பிரான்ஸ் நாட்டில், அரசாங்க ஓய்வூதிய திட்டம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 3.5 மடங்காகும். ஆஸ்திரேலியாவில் ஒரு அரிதான வழக்கு- GDPயிலிருந்து வெறும் 10 சதவீதம் தான் அதிகமாய் உள்ளது. ஹாங்காங்கில் கடந்த 15 ஆண்டுகளில் ஓய்வூதிய நிதிகளின் முதலீடுகள், ஐந்து முறை கீழ்நோக்கி சென்றுள்ளது.

சராசரியாக பிரேசில் மட்டும் பிற வளர்ந்த நாடுகளை விட 50 சதவீதம் ஓய்வூதியத்தை அதிகரித்துள்ளது. 20 ஆம் நூற்றாண்டின் முற் பகுதியிலிருந்து கருவுறும் விகிதங்களில் சரிவு ஏற்பட்டுள்ளதால், மக்கள் தொகை குறைந்து காணப்படுகிறது. பிரேசிலில் வயதானவர்கள் குழுவானது, நாட்டின் மக்கள் தொகையின் ஒரு வளர்ந்து வரும் பகுதியை உருவாக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் 65வயதிற்கு மேலானோர் வெறும் எட்டு சதவீதம் மக்கள் மட்டுமே இருக்கின்றனர். 2050-ம் வருடத்திற்குள் இந்த 65 வயதிற்கு மேலானோர் ஜனத்தொகையில் நான்கில் ஒரு பகுதியாக பெருகிவிடுவார்கள். இதனால் ஓய்வூதியம் தருவது மற்றும் சுகாதார சேவைகளில் பிரச்சனைகள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கபடுகிறது. Rio-de-Janeiro வில் அரசு ஊழியர்களை விட அதிகமாய் ஓய்வூதியம் பெறுபவர்களையே மாநிலம் ஆதரவளிக்கின்றது. செயல்பட்டு கொண்டிருக்கும் ஒவ்வொரு காவல் துறையினருக்கு ஈடாக ஐந்து நபர் ஓய்வெய்துள்ளனர். இதன் காரணமாய் நகரம் திவால் ஆகும் ஆபத்து நிலைக்கு தள்ளப்பட்டு கொண்டிருக்கிறது.

உலகம் முழுவதிலும் விரைவாக வயதாகி கொண்டிருப்பவர்கள், பணியில் இருப்போர் மற்றும் பணிநிறைவு அடைந்தோர் மத்தியில் ஒரு சமநிலை மாற்றத்தை உருவாக்குகின்றனர். 1950 ஆம் ஆண்டில் உலகின் பணக்கார நாடுகளில் 65 வயது மற்றும் அதற்கு மேலானோர் வெறும் 10 சதவீத ஜனத்தொகையினராகவே இருந்தனர். தற்சமயம் அவர்கள் 25 சதவீதமான வர்களையும் மேலும் 2050 ஆம் ஆண்டில் ஜனத்தொகையின் ஒரு பாதியினர் இவர்களாகவே இருப்பார்கள் என்று கருதப்படுகின்றது. உலகில் பணக்கார நாடுகள் இந்த நெருக்கடியை சந்திக்க வேண்டியுள்ளது. வளர்ந்து வரும் நாடுகளில், பில்லியன் கணக்கான மக்களுக்கு ஓய்வூதியம் பெரும் வாய்ப்பே இல்லாமல் போயிற்று.

**முன்னேற்றம் சாத்தியமில்லை:**

1883 இல் ஜெர்மெனியில் முதல்முதலாக இந்த ஓய்வூதிய திட்டம் உருவானது. Count otto von Bismark